பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஆகஸ்ட் 2022



## வங்கியிலிருந்து வந்ததொரு கவிதைப்புயல்

பக்கம் 76

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்®

உதயம் 1972 – ஆகஸ்ட் 2022

608



ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

கவிஞர் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

கவிஞர் தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் அ. முத்துசாமி

கவிஞர் ஈழபாரதி

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி





நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,

நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...


Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats,
95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com


புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்பின் கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

உலகின் பல பாகங்களிலும் விலைவாசி உயர்வு, பணவீக்கம், எரிபொருள் தட்டுப் பாடு, உணவுப் பற்றாக்குறை, போராட்டங்கள், வேலைநிறுத்தங்களென பல்வேறு பிரச்சினைகள் மக்களை வதம் செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

இச்சூழலில் காலநிலை மாற்றத்தால், இயற்கையும் தன் கோர முகத்தைக் காட்டி வருவது தவிர்க்கவியலாத ஒன்றாகவே இருக்கிறது. ஆமாம், ஐரோப்பாவின் பல இடங்களில் வெயிலின் உஷ்ணம் 39°C-42°C அளவு உயர்ந்து, மக்களை வாட்டி எடுப்பது மட்டுமல்லாமல் காட்டுத்தீயும் பல்லாயிரம் ஹெக்டர் காடுகளைத் தீக்கிரையாக்கி இன்னும் ஓயாமல் தகிக்கக் காண்கிறோம். இவ்விதமான வெப்ப அலைகள் ஏறத்தாழ 200 வருடங்களுக்குப் பின் மீண்டும் இப்போது தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும், இது இன்னும் அதிகரிக்கக் கூடுமெனவும் ஆய்வுகள் சொல்கின்றன. நாம் இயற்கைக்கு செய்வதைத்தான் பல மடங்காக இயற்கை நமக்குத் திருப்பித் தருவதை, நாம் இத்தருணத்தில் ஒப்புக்கொண்டாக வேண்டும்.

இயற்கைக்கு ஊறு விளைவிக்காமல் இருக்கக் கற்றுக்கொண்டோமே யானால் நம் சந்ததிக்கு நல்லதொரு வளமான, செழிப்பான உலகை நாம் சொத்தாக விட்டுச் செல்ல அது வழி வகுக்கும்.

இதர பிரச்சினைகளுக்கு மாற்று வழிகளாக, நமக்குத் தேவையான காய்கறிகளை சிறு அளவிலாவது பயிர் செய்வது நமக்குப் பெருமளவில் நன்மை பயக்கும். விறகடுப்பைப் பயன் படுத்துதல் எரிவாயுப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும். அதேபோல், சைக்கிள் பாவனை எரிபொருள் பிரச்சினை தீர ஓரளவாவது உதவலாம். இங்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்கனவே சைக்கிள் பாவனையில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. சிறிய தூரங்களுக்கு நடந்து செல்வதன் மூலம் அது நடைப்பயிற்சியாக, உடற்பயிற்சியாக மாறி உங்களை தேக ஆரோக்கியத்துடன் வாழ வைக்கும்.

இக்கடினமான சூழ்நிலையில், அடுத்தவர்களைச் சார்ந்திருக்காமல் சுயமாக நாமே திட்டமிடலாம். நடைமுறையில் சாத்தியப்படும் விதமாக சிந்தித்து, சாதுரியமாக செயல்படுத்துவதன் மூலம் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சவால்களை எளிதாக வெல்லலாம். சிந்திப்போம். வாழ்வை வென்றெடுப்போம். நன்றி!

தமிழ்நெஞ்சம் அமின்

(ஆசிரியர்)




# Dr. ஃபஜிலா ஆசாத்

(International Life Coach - Mentor - Facilitator)


# பிரச்னைக்கு தீர்வு

*எல்லா பிரச்னைக்குமே மிக எளிய தீர்வு ஒன்று இருக்கிறது – அகதா கிரிஸ்டி*

*To every problem there is a most simple solution – Agatha Christie*

எந்த பிரச்னைக்கும் தீர்வு இருக்கிறது என்று சொல்லிக் கேட்கும் போது நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் நடைமுறையில் பல பிரச்னைகளையும் தீர்க்க முடியாமல் அல்லாடலாகத்தானே இருக்கிறது என்பதே பலரின் புலம்பலாக இருக்கிறது.

சில நேரங்களில் உங்களுக்குப் பிரச்னையாகத் தெரியக் கூடிய ஒன்று பலருக்கும் சாதாரணமாக கடக்க கூடிய ஒன்றாகத் தெரியக்கூடும். ஏன் உங்களுக்கே உங்களை அதிகமாக அழுத்தக் கூடிய சில விஷயங்களை இதை பிரச்னை என்று சொன்னால் மற்றவர்கள் கிண்டலுக்கு ஆளாக வேண்டி இருக்குமோ என்ற எண்ணம் எழுந்திருக்கும். நீங்களேகூட மற்றவர்கள் பெரும் பிரச்னையாக சொல்லக் கூடிய பல விஷயங்களை, இதில் என்ன பிரச்னை இருக்கிறது என உங்களுக்குள் நகைத்து விட்டு அதைக் கடந்து சென்றிருப்பீர்கள்.

இதனாலேயே பெரும்பாலான பிரச்னைகள் தீர்வு மேடைக்கு வராமலேயே சற்றும் பரிசீலனை செய்யப் படாமலேயே நிராகரிக்கப் பட்டு என் விதி இவ்வளவு தான் என்ற புலம்பலோடு ஆற்றாமையில் தனக்குள்ளேயே புதைக்கப் பட்டு விடுகின்றன. தவிர, இன்னும் பல பிரச்னைகள் எவ்வளவு முயற்சி செய்தாலும் தீர்வு புலப்படாமலேயே மனஅழுத்தத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

ஒரு பிரச்னையை எப்படித் தீர்ப்பது என்று பயப்படாதீர்கள். எங்கே பிரச்னை என்பதை மட்டும் சரியாக அனுமானிக்க முயலுங்கள் என்கிறது வாழ்வியல்.

மேலோட்டமாக நீங்கள் பார்க்கும் போது இது தான் பிரச்னை என நீங்கள் கருதக் கூடிய ஒன்று. பிரச்னையின் பிரதிபலிப்பாக (reflection) ஆக இருக்க அதன் 'ஆணி வேர்' வேறு ஒன்றாக இருக்கலாம். அதனால் பிரச்னைக்குத் தீர்வு இல்லை என எந்த சந்தர்ப்பத்திலும் தளர்ந்து போய் விடாமல் பொறுமையாக பிரச்னையை வேறு கோணத்தில் இருந்து அலசும் போது உண்மையான பிரச்னையும் அதன் தீர்வும் உங்களுக்கு சரியாகப் புலப்படும்.

கஸ்டமர் செர்விஸுக்குப் பேர் போன அமெரிக்காவின் ஒரு கார் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கு மிகவும் முக்கியம் என ஒன்றிற்கு இரண்டு அடிக் கோடிட்டு பெர்சனலாக நிர்வாக இயக்குனரின் பார்வைக்கு என குறிப்பிட்டு ஒரு வாடிக்கையாளரிடமிருந்து கூரியர் ஒன்று வருகிறது.

காரில் ஏதாவது பிரச்னை என வாடிக்கையாளர்களிடமிருந்து கஸ்டமர் செர்விஸுக்கு கடிதம் வருவது மிக இயல்பு. ஆனால் இந்தக் கடிதம் நிர்வாக இயக்குனருக்கு பெர்ஸனலாக அனுப்பப் பட்டிருந்தது மிகப் புதிதாக இருக்க அவரும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அந்தக் கடிதத்தை வாசிக்கிறார். அவர் முகம் வியப்பில் விரிகிறது. ஏனென்றால் அந்த கடிதத்தில் அவர்கள் நிறுவனத்தில் வாங்கிய காரின் பிரச்னையாக வாடிக்கையாளர் குறிப்பிட்டிருந்த காரணம் மிகவும் வித்தியாசமாக இருக்கிறது.

அதாவது வாடிக்கையாளர் காரை வாங்கி மூன்று மாதங்கள் ஆகிவிட்டதாகவும் அவர்கள் ஒவ்வொரு இரவிலும் காரில் சென்று அவர்கள் வீட்டிருந்தும் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் சூப்பர் மார்க்கெட்டில் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு flavour இல் ஐஸ்கிரீம் வாங்கி சாப்பிடுவது வழக்கம் எனவும் அதில் அவர் வெனிலா ஐஸ்க்ரீம் வாங்கி வந்து காரில் அமரும் நேரம் எல்லாம் கார் ஸ்டார்ட் ஆக மறுக்கிறது என்றும் குறிப்பிட்டிருந்தார். அதே நேரம் ஸ்ட்ரா பெர்ரி, சாக்லெட் ஐஸ்கிரீம் என வேறு ஐஸ்க்ரீம்கள் வாங்கும் போது பிரச்னை இல்லை எனவும் எழுதி இருந்தார்.



தவிர ஏற்கனவே தான் ஒரு கடிதம் இந்த பிரச்னையைக் குறிப்பிட்டு கஸ்டமர் செர்விஸுக்கு எழுதியதாகவும், ஆனால் அதற்கு அவர்களிடம் இருந்து எந்த பதிலும் வராததால் தான் இப்போது பெர்சனலாக கூரியர் பண்ணியதாகவும் எழுதி இருந்தார். அதில் அவர் முக்கியமாக, இந்தப் பிரச்னை உடனே தீர்க்கப் படவேண்டுமென்பதை விட இப்படிக் கூட பிரச்னை வருமா என தனக்குள் எழும் வியப்பே தன்னை மீண்டும் கடிதம் எழுத தூண்டியது என்றும் குறிப்பிட்டிருந்தார். அருகிலிருக்கும் மெக்கானிக் ஷாப்பில் போய் பிரச்னையைச் சொன்னால், தன்னை வினோதமாகப் பார்க்கிறார்கள் என்றும் ஆனால் உண்மையில் தாங்கள் அனுபவிக்கும் இந்த பிரச்னையைப் அவராவது புரிந்து கொண்டு ஒரு தீர்வு சொல்ல வேண்டும் என்றும் எழுதி இருந்தார்.

கடிதத்தை கவனமாக வாசித்து தனக்குள் செய்தியை உள்வாங்கிய நிர்வாக இயக்குனரால் வாடிக்கையாளரின் முதல் கடிதத்தை, அவர் குறிப்பிட்டிருந்த வித்தி

யாசமான காரணத்தை முன்னிட்டு கஸ்டமர் செர்விஸில் சீரியசாக எடுக்காமல் யாரோ விளையாட்டாக எழுதி இருப்பார்கள் என விட்டிருப்பார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் அனுபவசாலியான அவர் அதைச் சாதாரணமாக எடுக்காமல் உடனே தன் நிறுவனத்தில் இருப்பவர்களிலேயே தேர்ந்த அனுபவசாலியான எஞ்சினியரை அழைத்து பிரச்னையைச் சொல்லி அதை எல்லாக் கோணத்திலும் அணுகி தீர்வைக் கண்டு வரச் சொல்லி அனுப்பி வைக்கிறார்.

அந்த இன்ஜினீயர், கடிதம் எழுதிய வாடிக்கையாளரைப் போய்ச் சந்தித்து அன்று இரவு ஐஸ் க்ரீம் வாங்கச் செல்லும்போது அவருடன் ஒன்றாகச் செல்கிறார். அன்று வெனிலா ஐஸ் க்ரீம் வாங்கி விட்டு வந்து காரை ஸ்டார்ட் பண்ணியதும் அவர் கடிதத்தில் எழுதியிருந்தது போலவே கார் ஸ்டார்ட் ஆக மறுக்கிறது. அந்த நிகழ்வு இஞ்சினியருக்கு ஆச்சரியமாக இருந்தாலும் உடனடியாக ஒரு முடிவுக்கு வர வேண்டாம் என்று நினைத்துக் அடுத்தடுத்த நாட்களும் அந்த வாடிக்கையாளருடன் அதே சூப்பர் மார்க்கெட்டுக்குச் செல்கிறார். இப்போது வெனிலா இல்லாமல் வேறு ஐஸ் கிரீம் வாங்குகிறார்கள். திரும்ப வந்து ஸ்டார்ட் செய்யும்போது எந்த பிரச்னையும் இல்லாமல் கார் ஸ்டார்ட் ஆகிறது.

சில நாட்கள் இந்த நிகழ்வுகளை கண்காணித்த பின் அன்று இரவு தன் வீட்டில் உட்கார்ந்து யோசிக்கிறார். `காருக்கு வெனிலா ஐஸ் க்ரீம் அலர்ஜி' என்பதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆரம்பத்திலிருந்து தான் ஆராய்ந்த வற்றையெல்லாம் ஒரு குறிப்பாக எழுதுகிறார். வாடிக்கையாளர் பயன்படுத்தும் கார் மாடல், அவர் போடும் பெட்ரோல் அளவு, வீட்டிலிருந்து சூப்பர் மார்க்கெட் இருக்கும் தூரம், காரின் வேகம்... இப்படி எழுத எழுத அவருக்கு ஒரு க்ளூ கிடைக்கிறது.

அது, சூப்பர் மார்க்கெட்டின் அமைப்பு. ஐஸ் க்ரீம்களில் வெனிலா ஃப்ளேவர் அதிகமாக விற்கிறது என்பதனால், சூப்பர் மார்க்கெட்டின் முன் பகுதியிலேயே அதனைத் தனியாக வைத்திருக்கிறார்கள். வாடிக்கையாளர்கள் உள்ளே நுழைந்ததும், அதை எடுத்துக்கொண்டு உடனே வெளியில் வந்துவிடலாம். மற்ற ஐஸ் க்ரீம் ஃப்ளேவர்கள் எல்லாம் சூப்பர் மார்க்கெட்டின் பின் பகுதியில்

## பாக்ஸ் மெஸேஜ் :-

எந்த ஒரு பிரச்னையையும் அவற்றை அப்படியே பார்த்து எப்படித் தீர்ப்பது என்று யோசிக்காதீர்கள். வெளிப்படையாக பிரச்னையாகத் தெரியும் விசயம் உண்மையில் வேறு ஒரு உண்மையான பிரச்னையின் பிரதிபலிப்பாக இருக்கலாம். எனவே, அந்த இன்ஜினியர் 'காருக்கு வெனிலா ஃப்ளேவர் அல்ர்ஜியாக இருக்க முடியாது' என்று முடிவு செய்ததுபோல, உங்களுக்கு உறுதியாகப் புலப்படும் பொருந்தாத காரணங்களை வைத்து பிரச்னையையும் அதன் தீர்வையும் தள்ளிவைக்காமல் அது பிரச்னைக்கான காரணம் அல்ல என்பதை மட்டும் முடிவு செய்து அதை சுற்றியுள்ள விஷயங்களை, அது தொடர்பான விஷயங்களை நிதானமாக அலசி ஆராய்ந்து பாருங்கள். உண்மையான பிரச்னை நீங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையிலும் அதன் தீர்வு உங்களுக்கு பிடிபடக் கூடியதாகவும் இருக்கும். மகிழ்ச்சி நிறையும்.

மொத்தமாக கலந்து வைக்கப் பட்டு இருந்தன. அங்கே நடந்து போய்த் தேடிக் கண்டுபிடித்து எடுத்து வர சிறிது நேரம் பிடிக்கும். இப்போது இன்ஜினீயருக்கு கார் கிளம்பாததற்கான காரணம் பிடிபட்டுவிட்டது. காரணம் வெனிலா ஐஸ் க்ரீம் அல்ல. நேர அவகாசம்.

அதனை உறுதிப் படுத்திக் கொள் வதற்காக மறு நாள் வாடிக்கையாளருடன் கடைக்குச் செல்கிறார், வெனிலா ஐஸ் கிரீம் வாங்குகிறார், ஆனால் உடனே காருக்குத் திரும்பாமல் கடையின் உள்ளே சென்று ஒரு சாக்லேட் ஐஸ் கிரீமைத் தேடி எடுத்து அதனை மீண்டும் அங்கேயே வைத்து விட்டு கையில் இருக்கும் வெனிலா ஐஸ் கிரீமை மட்டும் எடுத்துக் கொண்டு பணம் செலுத்த வருகிறார். இருவரும் பணம் செலுத்தி விட்டு வந்து காரில் ஏறி ஸ்டார்ட் செய்ததும் கார் எந்த பிரச்னையும் இன்றி ஸ்டார்ட் ஆகி விடுகிறது.

ஆச்சரியப் படும் வாடிக்கையாளரி டம், காரின் இன்ஜினில் இருக்கும் வேப்பர் லாக் (Vapor lock) கில் பிரச்னை இருப்பதால் இஞ்சின் சூடு குறைவதற்கான கால அவகாசமே இதுவரை நிகழ்ந்த குளறுபடிகளுக்குக் காரணம் என்பதை விளக்குகிறார். அதையே ரிப்போர்ட்டாக கொடுக்க, வெகு சில நாள்களிலேயே வேப்பர் லாக் பாகத்தை பிரச்னை ஏற்படாத வகையில் புதுவகையில் தயாரிக்க ஆரம்பித்துவிட்டது அந்த நிறுவனம்.

இப்படி உண்மையான பிரச்னை அதன் சுயத்தை விட்டும் வேறு ரூபத்தில் வெளிப்படலாம். அதைப் புரிந்து கொண்டு அது வெளிப்படும் விதத்தைப் பொறுத்து உதாசீனப் படுத்தி விடாமலும் பதற்றமில்லாமலும் நிதானமாக, தீர்க்கமாக அணுகும் போது நிச்சயம் பிரச்னை யின் தீர்வு இலகுவாக இருக்கும். வாழ்வில் மகிழ்ச்சி மலரும்.



# காதலாகினேன்

காதலில் தொலைதேசமும்
தொடும் தூரமே!
எமகண்டம் கூட
சுப முகூர்த்தமே!
நானாகி நீயாக
வரம் வேண்டுமே!
உயிருக்குள் உணர்வாக
நீ வரவேண்டுமே!

உன் கண்ணில் கருக் கட்டும் காதல்
என் நெஞ்சில் விதையாகி வேரூன்ற
மரணத்தை வெல்லும்
உனதன்பு ரெருவிருட்சமாய்
என்னில் நிலை கொள்ள

பொக்கிசமாய் உன்
நெஞ்சத்தைத் தாவென்றேன்
பேரன்பின் இழைகொண்டு
உனை வென்றேன்
விண்மீன்கள் உன் வானில்
பல்லாயிரம்தான்
விடியலைக் கைக்காட்டிடும் உன்
விடிவெள்ளி நான்

காற்றுள்ளவரை
காதலைச் சுவாசிப்போம் வா!
காதலால் நம் உலகை
பூசிப்போம் வா!
காதலின் தேசத்தில்
கரைசேர வா
காதல் சாம்ராச்சியத்தில்
கொற்றவனாய்க் கோலோச்ச வா!

**- வஃபீரா வஃபி**

# விலகி போ தொலைந்து விடாதே...

"நீ வேணும்னு' இப்படியே
உன்ன ஏத்துக்கவும் முடியல,
ப்ளீஸ் என்ன விட்டு போயிறுனு
நிராகரிக்கவும் முடியல,

இது சரியா? தவறா?
இது காதலா? நட்பா?
எப்படி யோசிச்சாலும் ஒரு
கேள்விக்குறியா வந்து நிற்க
உன்னால் முடிகிறது.

உன்னை எப்போதெல்லாம்
என்ன விட்டு போயிறுனு கத்துறனோ,
அப்போதெல்லாம் ப்ளீஸ்
போயிறாதனு உள்மனசு கதறுது.

இதுக்கு என்ன தான் தீர்வு ?
என்னை சுற்றிலும் ஒரு புதிராய் நீ,
கொஞ்சமும் நகர்ந்து விடாதே
என் கண்ணில் விடை
கிடைத்திட போகிறது.

என்னை சுற்றி, என் பார்வையில்
ஏதாவது ஒன்றாய் இருந்து விடு
அவ்வளவு தான் செய்ய முடியும்.

நெருங்கி வா முத்தமிடாதே...
விலகி போ தொலைந்து விடாதே...

நம்ம சந்தோஷம், தனிமை, வெற்றிடம்
எல்லாத்தையும் நிறைக்க வரும்
ஒருவரை கையாளுவது கடினம் தான்

இந்த பாழாய்ப்போன வாழ்க்கை
இப்படித்தான் நமக்கு தேவையான
எல்லாத்தையும் கண்முன்
நிறுத்தி விட்டு,
கைகளை கட்டி போட்டு விடும்.

**- அஸ்மியா நிஸாம்**

# மௌனம்

மௌனம்
சப்தங்கள் சேர்ந்து
நடத்தும் தொழுகை!

ஒளிர்ந்து ஓலமிட்டட
தீபத்தின் நாவுகள்
வெட்டப்பட்டதும்
ஜனித்த இருள்நிசப்தத்தின்
அழுகை!

வாழ்க்கைப் பரீட்சையின்
பல வினாக்களுக்கான முத்தாய்ப்பு
முற்றுப்புள்ளிக்கு முன்,
தற்காலிக பதிலான துருப்புச்சீட்டு.

ஏழைகளின் வயிற்றில்
அடிக்கும் போது எழும் ஓசை!

பணம்படைத்தோர் செய்யும்
பாவங்கள் பாடும் கீதம்

தட்டுகளைத் தட்டும் போது எழுந்த
இரைச்சலில் அடங்கிய
பசித்த வயிறுகளின்
கொரோனா ஒப்பாரி!

காதலர்கள் காதில் விழாமல்
கண்ணில் விழும் வார்த்தை!

**பாபு கனிமகன்**
இளையான்குடி





- நௌஷாத் கான் லி

# மனசெல்லாம் மீனாட்சி...!

காதல் எப்போதுமே எல்லா கால கட்டத்திலுமே நினைத்து பார்த்தால் மட்டுமல்ல நினைத்தாலே இனித்திடும் மலைத்தேன்... காதலர்களுக்கு அழிவுண்டு ஆனால் யுகயுகமாய் வாழும் - வாழ்ந்து கொண்டிருக்கும் காதலுக்கு அழிவேது...

இப்பிரபஞ்சத்தில் காற்று இல்லாத இடங்கள் கூட உண்டு ஆனால் காதல் இல்லாத இடமேது.. காதல் மட்டும் மதங்கள் போல மக்கள் மனங்களில் மலர்ந்திருந்தால் இம்பூமியெங்கும் அன்பால் நிறைந்திருக்கும்.. புன்னகை மட்டு மல்ல காதலும் பல போர்களை அழித்திடும் அன்பாயுதம் தான் !!

மீனாட்சி இப்பெயரை என் நாவு உச்சரிக்கும் போதே உள்ளுக்குள் கோடி தாமரைகள் மலர்ந்திடும்.. கல்லூரி பருவத் தில் தொடங்கிய காதல் பாடையில்

போகும் போது கூட அழியாது ஏனெனில் காற்றில் திரியும் ஆன்மாவோடு அவன் நினைவுகளை கருவாய் சுமந்து நிற்கும் ..

சின்ன வயசுல இருந்தே யாருகிட்டயும் ஒட்ட மாட்டேன் ,நானுண்டு என் ஜோலியுண்டுன்னு கிடப்பேன் ஸ்கூல் விட்ட நேரம் போக எங்க ஊர் கிளை நூலகமே கதியாய் கிடப்பேன் ...

வீட்ல அப்பா அம்மாவும் மவன் கண்ட காலி பசங்களோட சேராம ஒழுங்கா இருக்கான்னு ரொம்ப சந்தோச பட்டிக்குவாங்க, அந்த பாழாய் போன நூலகமே கதியாய் கிடந்ததால் என்னவோ கவிதை - கதைன்னு என்னென்னவோ எழுத தொடங்கிட்டேன்... நான் எழுதுறது கதை - கவிதைன்னு நான் தான் வெட்கமே இல்லாம சொல்லிக்கிட்டாலும் ஊர்ல ஒரு பய மதிக்கலை ,நான் எழுதுறதை எல்லாம் கதை - கவிதைன்னு ஒத்துக்கவே இல்லை.. சில பேர் நீ பெரிய ஆளுன்னா நாங்க சொல்லுற விஷயத்தை எழுதுடா பார்ப்போம்ன்னு என்னை உசுப்பேத்தி விட்டிட்டு என் கவிதை மூலம், அவனுங்க காதல் என்ற பெயரில் சில பெண்களை கரெக்ட் பண்ணினது தான் மிச்சம்.. சில அவமானங்களால் நான் எழுதுறதையே வெளியே காட்டிக்கலை, நிறைய பேருக் கிட்ட நான் எழுதுறதையும் சொல்லிக்கலை... என்னை சுற்றி உள்ளவன் மத்தியில் அது கவிதையாக - கதையாக இல்லாத பட்சத்திலும் நான் எழுதுவது எல்லாம் என்னை பொறுத்தவரை பொக்கிஷம் தான்...

சின்ன வயசுல இருந்தே ஆண்கள் மேல்நிலை பள்ளியில் படித்ததால் என்னவோ பெண் வாசமே என்னை சுற்றி வீசியதில்லை.. ஒரு பெண்ணிடத்தில் எப்படி பேச வேண்டும் ,எப்படி பழக வேண்டும் என்பது எனக்கு தெரியாது... என்னை பெற்றெடுத்த அம்மாவை தவிர வேறு எந்த பெண்ணை கண்டாலும் கொஞ்சம் கூச்சப்பட்டு ஒதுங்கி விடுவேன்... எனக்கு கூச்சம் எப்படி பெண்களை கண்டால் வருமோ அதை போல் என்னை கிண்டல் செய்யும் போது கோபமும் அளவுக்கு அதிகமாய் வரும்.. குறிப்பாக என் கதைகளை - கவிதைகளை வேண்டுமென்றே இல்லாத குறைகளை சொல்லுபவர்களை கண்டால் தலைக்கு மேல் கோபம் வரும்...

அடுத்தவர் பார்வையில் பொறுத்த வரை சில சின்ன சின்ன விஷயங்கள் கூட எனக்கு மனஸ்தாபங்களை ஏற்படுத்துவதால் ஒரு இரகசிய சினேகிதி போல என் படைப்புகளை டைரியில் எழுதுவது போல் எழுதி பாதுகாத்து வந்தேன் ..

மீனாட்சி என் கிளாஸ்மேட் பார்த்த முதல் பார்வையிலேயே அவளை எனக்கு பிடித்து விட்டது ஆனால் முன்ன பின்னே எந்த பெண்ணிடமும் பேசி பழக்கமில்லாதால் அவளிடம் பேச தயங்கினேன்... நிறைய பசங்க அவகிட்ட சீன் காட்ட போய் மூக்குடைந்த கதைகள் ஏராளம்.. எந்தளவுக்கு அவளிடத்தில் அழகு இருந்ததோ அந்தளவுக்கு திமிரும் அதிகம்.. அதனாலேயே அவளிடத்தில் பேசாமல் இருந்தேன்...

இவ்வளவு திமிர் பிடித்த பெண்ணை என்னையும் அறியாமல் ஏன் அடிக்கடி பார்க்கிறேன்... தென்றலை போல அவள் மூச்சுக்காற்று அடிக்கடி தீண்டி விட்டு சென்றது... அவள் உடுத்தும் மஞ்சள் கலர் தாவணி ,ரோஸ் கலர் தாவணி, கருப்பு கலர் தாவணியில் கல்லூரி வரும் போது உண்மையான தேவதை போல இருப்பாள்.. இரு கைகளுக்கு பதிலாக இரு றெக்கைகள் மட்டும் அவளுக்கு பொருத்தினால் நிச்சயமாக அவள் தேவதை தான். லிப்ஸ்டிக் பூசாமலே பழுத்த கோவை பழம் போல உள்ள அவள் சிவந்த உதடுகள் ,அவள் சூடி வரும் கனகாம்பரம், மரிக்கொழுந்து, சாதிமல்லி பூக்களின் வாசத்தை காற்று வாசம் கொண்டு என்னிடம் தூது கொண்டு வரும் போது என்னுள்ளே என்னென்னவோ செய்யும்.. அப்போது வானொலியில் ஒலிக்கும் பாடலில் இளையராஜா எனக்காகவே இசையமைத்தது போல இருக்கும் ..

இந்த உலகத்தில் எப்போதும் லேசாய் தூறிடும் மழைச்சாரலோடு, மயக்கும் இளையராஜா இசையோடு என் இனியவள் மீனாட்சி கூட இருந்தால் நரகமான இந்த புவியும் என்னை பொறுத்த வரை சொர்க்கம் தான் ....

தினம் தினம் அவளிடம் பேசுவதற் காகவே சேமித்து வைத்த வார்த்தைகளை எல்லாம் கோர்த்து கவிதையாக்கினேன்.. என்னை பொறுத்த வரை அது கவிதை உங்களை பொறுத்தவரை அது கிறுக்கல் கள்தான்... இந்த கிறுக்கனை உண்மை யாய் கிறுக்கனாய் மாற்றியது அவள் சுட்டெரிக்கும் பார்வை தான்.. இதுவரை அவளிடத்தில் பேசியதில்லை ஆனால் அவள் விழிகள் தினம் தினம் என்னிடம் பேசிக் கொண்டு தான் இருக்கின்றன ...

டே.... பிரபு இப்படி பீல் பண்ணி ,பீல் பண்ணி உடம்பை கெடுத்துகிறதுக்கு முன்னாடி அந்த பாழாய் போன நெஞ்சுல சிக்கி தவிக்கிற காதலை சொல்லி தொலைடா என மனசாட்சி சொன்னாலும் அந்த நெஞ்சுக்குழியில சிக்கி தவிக்கிற காதல் வார்த்தையாய் மட்டும் வர மாட்டேங்குது...

என் மீனாட்சியை நேர்ல பார்த்தா போதும் ஆயிரம் வாட்ஸ் பல்பு போல உள்ள நான் பீஸ் போன பல்பு போல ஆயிடுறேன் ..

காலேஜ் மூணாவது வருஷம் நடந்துக்கிட்டு இருக்கு... இப்படி பார்த்து பார்த்தே ரெண்டு வருஷத்தை ஓட்டிட் டேன்.. என்ன தான் காதல்ன்னு பினாத்தி னாலும் அப்பா அம்மாவுக்காக படிப்பிலும் கவனம் செலுத்தினேன்...என்ன பொறுத்த வரைக்கும் படிப்பிலும் தோற்க கூடாது.. என் வாழ்க்கையிலும் தோற்க கூடாது.. என் வாழ்க்கை என்பது என்னை பொறுத்தவரை என் மீனாட்சி தான்...

இந்த ரெண்டு வருசத்துல அவளை நினைச்சு, நினைச்சு ஆயிரக்கணக்கான கவிதைகளை எழுதி குவித்து இருந்தேன் ..இலக்கணஇலக்கியம்அறியாதவன்,தமிழ் இலக்கியம் படிக்கவில்லையென்றாலும் என்னுடைய மேஜர் பாடம் அக்கவுண்ட்ஸ் என்றாலும் காதலும் வாழ்க்கை கணக்காய் மாறியதால் அவள் விழிகள் என்னும் இலக்கியத் தேள் கொட்டியதால் கொட்டின கோடான கோடி கவிதைகள் ... ஒரு நாள் ...

வீட்டில் உறங்கி கொண்டிருந்தேன் வகுப்பு நண்பன் அவசர ,அவசரமாக வீட்டு கதவை தட்டினான் டே மச்சான் இன்றைய தினத்தந்தி பார்த்தியா ???

உன்கவிதைஉன்போட்டோவோட வந்து இருக்குன்னு சொன்னான்.. அப்பா வும் - அம்மாவும் என் போட்டோ வந்து இருக்குன்னு பத்து பேப்பர் வாங்கி தெரிந்தவர்களுக்கு எல்லாம் கொடுத்து பெருமை பட பேசினார்கள் ..

இத்தனை வருடமாக நான் பட்ட அவமானம் ஒரு நொடியில் மறைந்ததொரு திருப்தி, ஆனால் என்னுடைய கவிதையை தினத்தந்தி பத்திரிக்கைக்கு அனுப்பியது யார் என்ற கேள்வி மட்டும் என் உள்ளுக் குள் எழுந்தது.. ஏனென்றால் பிரசுரமான கவிதை என்னுடைய டைரியில் இருந்து மிஸ்ஸாகி இருந்தது.. அந்த டைரியின் பக்கத்தின் நூல் நைந்து இருந்ததால் தான் அந்த கவிதை மட்டும் எங்கோ விழுந்து இருக்கிறது ஆனால் என் புகைப்படத்தோடு அந்த கவிதை எப்படி தினத்தந்தி நாளிதழில் வந்தது?? யார் அனுப்பினார்கள் என்ற வினாவை அறிய ஆவலாய் இருந்தேன்...

அன்று மாலை ...

டே.. பிரபு என்ற குரல்.. குரல் வந்த திசை திரும்பி பார்த்தேன்.. என் வகுப்பு தோழி சரண்யா ..இப்போது தான் என்னிடம் முதன் முதலாய் பேசினாள்..

பிரபு உன்னுடைய கவிதையை

தினத்தந்தியில் படித்தேன், ரொம்ப சூப்பரா இருந்தது... மீனாட்சி தான் கீழே விழுந்து கிடந்த உன் கவிதையை எடுத்து படித்தாள், படித்ததோடு மட்டுமில்லாம நம்ம நண்பர்கள் எல்லார்கிட்டயும் பெருமை பட பேசினாள்.. எவ்வளவு சூப்பரா எழுதி இருக்கான் பாரு என்று உன் பெருமை தான் அது மட்டுமில்லாம நம்ம எஸ் .கே .சார் மூலம் ஆபிசில் இருந்து உன் புகைப்பட நகலை வாங்கி தினத்தந்திக்கு அனுப்பி வச்சதும் அவள் தான் என்றாள்.. கடவுள் மட்டும் அந்த நேரம் எனக்கு சிறகு கொடுத்திருந்தால் அந்த வானின் எல்லை வரை பறந்திருப்பேன்... இதுவரை பேசாத உதடுகள் பஸ் ஸ்டாண்டில் காத்து கொண்டிருந்த மீனாட்சியிடம் நேரில் சென்று நன்றி சொல்லியது...

பிரபு இதுக்கெல்லாம் நன்றி சொல்லலாமா ,நீ சூப்பரா கவிதை எழுதுறே ,உன் கவிதையை எனக்கு ரொம்ப பிடிச்சு இருக்கு ..தொடர்ந்து படிப்பையும் விடாம ,கவிதையையும் சேர்த்து எழுது..

ஆல் தி பெஸ்ட் பார் யுவர் பியூச்சர் என்றாள் ..

இதுவரை என் தேவதையை பிடித் திருந்தது அவள் சொன்ன வார்த்தை யிலிருந்து அவளை ரொம்பவும் பிடித் திருந்தது... நான் நேசிக்கும் கவிதைகளை நேசித்த என் நேசத்திற் குரியவள்... தினம் தினம் கடக்கும் நாட்களை போல் அவள் மேல் உள்ள அன்பும் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே சென்றது...

எப்படியாவது இறுதி தேர்விற்கு முன் என் மனசுக்குள் தேக்கி வைத்திருக்கும் காதலை எல்லாம் அவளிடத்தில் கொட்டி விட வேண்டும்.. நல்லபடியாய் டிகிரி முடித்து நல்ல வேலையில் சேர்ந்து இரு வீட்டார் சம்மதம் பெற்று அவளை திருமணம் செய்ய வேண்டும் என்ற வேண்டுதல் வைராக்கியமாய் வேரூன்றி அடி மனதினில் இருந்தது ...

கடைசி தேர்விற்கு முன் ..

என் மனதில் தினம், தினம் அனத்தி கொண்டிருந்த என் மூன்று வருட காதலை அவளிடத்தில் சொன்னேன் ...

பிரபு உன்னை எனக்கு பிடிக்கும் அதை விட உன் எழுத்தை எனக்கு ரொம்ப ,ரொம்ப பிடிக்கும்.. நாம்ம வாழுற வாழ்க்கை சினிமா இல்லை.. சினிமாவுல தான் ஹீரோவும் - ஹீரோயினும் சேரு வாங்க ஆனால் நிஜ வாழ்க்கையில அப்படி இல்லை.. என்னை இந்தளவு ஒருத்தன் லவ் பண்ணான்னு நினைக்கும் போதே எனக்குள்ளே கர்வமா இருக்குடா, இதே சந்தோஷத்தோட இந்த இடத்தை விட்டு போகணும்னு நினைக்குறேன்.. சாரிடா பிரபு எங்க அப்பா அம்மாவை மீறி என்னாலே எதுவும் செய்ய முடியாது.. சின்ன வயசுலேயே நான் பொறந்தப்பயே நான் என் தாய் மாமாவுக்கு தான் முடிவு பண்ணிட்டாங்க ..இந்த எக்ஸாம் முடிஞ்சு ஆடி கழிஞ்சு என்னுடைய கல்யாணம் டா ..அடுத்த ஜென்மத்துலயாவது தாய் மாமன் இல்லாத குடும்பத்துல பிறந்து உன்னாலே காதலிக்க பட்டு உனக்கு பொண்டாட்டியா ஆவணும் என்றாள் ...

அழுதகண்களோடுஎன்னிடமிருந்து கடைசியாய் விடைபெற்று சென்றாள்... என்ன தான் சொல்லுங்க தோற்றே போனாலும் முதல் காதல் என்றென்றும் இனித்திடும் நரகம் தான் ...

பல வருடங்கள் கழிந்த போதும் அவள் பெயர் மற்றும் அவள் நினைவுகளை கடக்கும் ஒவ்வொரு தருணங்களும் எந்த கவலையும் இல்லாத பழைய குட்டி பிரபுவாய் அவ்வப்போது எனை மாற்றும். காதல் காலத்தால் அழிவது அல்ல... என்றென்றும் ஆன்மாவால் உணர்வது !!■

நேரிசைவெண்பா

**கண்ணா உனைநானும் காணவேண்டும் பாடினேன்**
**மண்ணிலே வந்த மன்னவா - எண்ணங்கள்**
**கண்ணிலே கண்ட கனவாய்க் கழிந்தன**
**பண்ணென வாராய்ப் பணிந்து**

தமிழ்நெஞ்சம் அமின்

# முனகல்

அவ்வப்பொழுது காணாமல்
போகின்றேன்
என்னைத் தேடி
திரும்பக் கிடைக்கும்
போதெல்லாம் அடையாளமாய்
எதையாவது செய்து விட
வேண்டும் என்பதில்

இன்னும் என்னை விட்டு விலகாத
வறுமை கொக்கரித்து
சிரிக்கின்றது

நேற்று வீட்டு வாடகை அடைத்தேன்
இன்று அரிசி தீர்ந்து விட்டது என்கிறாள்
நாளை கல்லூரி கட்டணம்
செலுத்த வேண்டும்
முணுமுணுக்கிறான் மகன்

இப்படியாக வறுமையை
முடித்து விட்டேன் என திரும்புகையில்
வாசலில் நிற்கும் சைக்கிள்

நீ நேற்று உன்னை வெறுத்து
என்னை மிதிக்கையில் தடுமாறிய
எனது சக்கரம் பஞ்சர் ஆகிவிட்டது

சக்கரத்தில் ஏறிய முள்ளின்
வலியும் உனது முனகலின்
கோபமும் எனக்குத்
தெரிகிறதென
பரிதாபமாகச் சொல்கின்றது

**- கோவை சசிகுமார்**

# காதல் பிரலாபம்

ஒரு நேசப் பிரலாபம்
என்னுள்
முட்டி மோதுகிறது...
அழியாத உறவொன்றின்
உணர்வுகளோடு
சங்கமிக்கிறது...

நொடிகள் தோறும்
நினைவுகளாய்
துளிர்க்கிறது...
காயங்களைக் கிழித்து
ரணப்படுத்தும்
நெருஞ்சியாகிறது...

நீட்சியில்லாத சமரசங்களை
எனக்குள்
கைச்சாத்திடுகிறது...
ஆவணங்களைப்
பத்திரப்படுத்தியே
நாளும் வாதிக்கிறது...

கனவுகளுக்குள் நுழைந்தே
இரவுகளை
இம்சிக்கிறது...
தூக்கம் தொலையும்
நொடிகளில்
பித்துப் பிடிக்க வைக்கிறது...

மீள முடியாத
நினைவுகளுக்குள்
சிறை பிடிக்கிறது...
விடுதலை விரும்பாத
சிறைவாசத்தை
அவளுக்குள் மட்டும்
யாசிக்கிறது...

**மலையருவி பானு**
( பாதிமா ஸகீனா )



# பரிதல்கள்


## முஷ்தாக் அஹ்மத்

**இலங்கை**


சிலரை வாழ்வில் நேசமாக பெற்றிருப்பது அருள். தலைகோதி தன்னம்பிக்கை தந்து என்றைக்குமே எமக்காக எதுவேண்டுமானாலும் செய்யத் துணிந்து கிடக்கும் தவமான உறவுகள் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. அப்படி வாய்ப்பதும் அவ்வுறவுகள் எப்போதும் நேசமாக சேர்ந்திருப்பதும் அவ்வளவு அழகானதும் மனதிற்கு மனரம்மியமானதுமே.

என்றும் மறவாது எனக்குள் இருக்கும் ஏராளம் உறவுகளுக்குள் இது வரை காணாத பெருஉறவாய் வாய்த்திருக்கும் ஒரு உறவின் ஸ்பரிசமும் லயமும் இதயத்தின் இறுதித் தாழ்வாரம் வரைக்கும் இறங்கி என்னை நன்றிக்கடன் தீர்க்க முடியா மனிதனாய் ஆக்கிவிட்டிருப்பது எனக்குச் சௌகர்யமே. இது வரை நிகழாத பலதை நிகழ்த்திப் போக நிற்கும் மிக நெருங்கிய உறவொன்றாகிக் கிடப்பதும் எனக்குள் இருக்கும் புரிந்துணர்வில் மறுபாதியாகி விடுவதும் ஒரு உறவின் புனிதத்துவமே. தத்துவங்களில் திரிபடையா ஒரு உறவின் மகோன்னதம் தினமும் வாழ்வினை அனுமானிக்க துணையிருப்பது மகா பலம். அதுவே என்னை பயணிக்க, புதுப்பிக்க வைத்து அர்த்தம்மிக்க அழகிய வாழ்வினை மனதில் ஆழத்தில் அமிழ்த்தி நகரமுடியா நீளத்தில் என்னை நிறுத்தி நிற்கிறது.

•

சில மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களின் உள்ளங்கள் மிகவும் அழகும் மென்மையும் கொண்டவை. யாருக்கும் அநியாயம் நினைக்காத மிருதுவான மெதுமனம் கொண்ட மனிதர்கள் அவர்கள். அவர்கள்தங்களைகட்டுபடுத்திக்கொள்வதே மற்றவர்களை மனநோகடிக்காமல் இருக்கச் செய்யத்தான். தங்களது மனவெழுச்சிகள் மீது கவனம் செலுத்துவதைக் காட்டிலும் பிறரின் உளக்கிளர்ச்சிகளை புரிந்துகொண்டு நடந்து கொள்வதில் தேர்ச்சிபெற்றவர்கள் அவர்கள். அப்படிப்பட்டவர்கள் எங்கள் ஒவ்வொருவரது வாழ்விலும் ஏதாவதொரு வகையில் தாக்கம் செலுத்தியிருப்பார்கள் அல்லது வந்திருப்பார்கள் அல்லது வரவிருப்பார்கள். அவர்களது வரவால் வாழ்வில் ஒரு வனப்பும் அமைதியும் நிலைக்கொள்ளச் செய்திருக்கும்.

வாழ்வில் இப்படிப்பட்ட நல்ல உள்ளம் கொண்ட மனிதர்களின் சேர்மானமும் உறவின் பிடிமானமும் பேரன்பின் பெருங்கடலாக எம்மை நனைத்துச் செல்கின்ற அலைகள் போன்றவர்கள். அவர்களை கருணையோடு மனமேந்துவதும் அவர்களோடு வாழ்க்கையில் கரங்கோர்த்து துணையிருப்பதும் நமக்கு நாமே பெறுமானமளிப்பதற்கு சமானம்.

உறவின் புனிதம் பேணும் மனிதம் நிறைந்திருக்கும் காலமெல்லாம் எம்மில் இது போன்ற மனிதர்கள் வந்துபோவார்கள்.

வாழ்க்கையை அழகாக்க நிறைய கற்றுத் தருவார்கள். அவர்களை மனதில் நினைவிலேந்தி ஒரு பெரும் ஒளிச்சஞ்சலம் வெளி நிறைப்பது போல உள்ளத்தின் ஆழத்தில் பதிக்கச் செய்வோம்.

•

மனதை நெருடும் உறவுகளை நெருக்கமாக வாய்க்கப்பெற்றிருப்பது உலகை அழகாய் மாற்றும் பெரும் பேற்றை அளிக்க வல்லது. மனம் விட்டு பேச முடியுமான உறவுகளின் ஸ்பரிசங்கள் என்றுமே அலாதியானவை. அன்பின் நெருக்கம் அதிகமாகி இருக்கும் ஜீவன்களோடு செலவிடும் நேரங்கள் கூட என்றுமே சுவாரஷ்யமானவை. மனங்களை தொட்டு பேசும் உள்ளங்களின் மனிதர்கள் எப்போதுமே தூய வாழ்வை நேசிப்பவர்கள். கலப்பில்லாத உள்ளம் தெளிவான அறிவுக்கு அடையாளம் என்பார்கள். அவ்வாறான ஆன்மாக்களிலிருந்து வெளிப் படும் அறிவும் அதனாலான பணிவும் என்றும் பாக்கியம் மிக்கவை. அவற்றை பெற்றுக்கொள்ள முன்னிற்பது ஒரு தவம், வரம், பலம் என எல்லாம்.

மனித உறவு மேம்பாட்டில் விரிசல் தவிர்த்து புரிதல் நிகழ்த்த எத்தனிக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் நல்லவையே நிகழ முற்படுகின்றன. நல்ல விளைவு என்பதால் புரியப்படுவது யாதெனில் அறிவின் விரிவும் தூய்மையான ஞானமும். அவற்றை அடைய முயற்சிக்கும் போது தேட்டத்தின் பெரும் ஊற்று உள்ளூற ஊர்வதாய் உணர முடியும். அதுவே, பெரும் உறவின் வருகையின் ஆத்மார்த்தமும் அபிநயமும். ஆன்மாக்கள் சீர்மைபெற உறவுகள் அதனதன் ஜீவிதத்தில் வேரூன்ற வேண்டும். இறுக்கமான பிணைப்பில் கோலோச்சும் சகல உறவு முறைகளும் விட்டுக்கொடுப்பிலும் தட்டிக் கொடுப்பிலும் வெற்றி பெற்றவைதான்.

•

# இடைவெளி

கண்ணீர் துளிகளுடனும்
வெப்பப் பெருமூச்சுக்களுடனும்
முடித்துத்கொள்ள மனமின்றி
முடித்துக் கொள்ளப் படுகிறது
வெளிநாட்டில் வாசம் செய்யும்
பிள்ளைகளுக்கும் தாயகத்தில்
இருக்கும் பெற்றோருக்குமான
உரையாடல்கள்.

பார்த்ததுப் பார்த்துப்
பாசம் காட்டி வளர்த்த போது...
பரிதவித்துப் போகும்
பொழுதொன்று வாய்க்கும் என
அறிந்திருக்க நியாயமில்லை...

தோளில் தூக்கிச் சுமந்த நாட்களில்...
தூரதேசம் போய்விடுவார்கள் என
எண்ணியிருக்க வழியில்லை...

நாளெல்லாம்
ஒன்றித்திருந்த காலமின்று
நினைவுகளாகிப் போய்விட்டன...

பேரக்குழந்தைகளின்
ஸ்பரிசங்களின்றியே...
அந்தத் தாத்தாவும் பாட்டியும்
வயோதிகத்தை வழியனுப்பிக்
கொண்டிருக்கின்றார்கள்....

**- மக்கொனையூராள்**

# வாழ்வாங்கு வாழ்ந்ததை வாழ்பவர் பேசணும்!

**பொன்மணிதாசன்**

இரவென்றும் பகலென்றும் இல்லாத பொழுதொன்று
இருந்திட எனக்கது வேண்டும் - அப்பொழுது
உறவாக என்னிடம் ஒருநூறு கதைபேச
ஒருவளென் துணைக்குமே வேண்டும்!

தணியாத தாகமும் தளராத தேகமும்
தம்பிரான் தரவுமே வேண்டும் - அணி
அணியாக ஆசைகள் அடங்காத நதிபோல
அகமெங்கும் ஓடிட வேண்டும்!

உணராத சுகமொன்று உணர்வாட எனைத்தேடி
உறவாட வரவுமே வேண்டும் - நான்
புணராத புதுமைகள் புணரவே பூப்பூவாய்
பூத்திடத் தானுமே வேண்டும்!

நானெழுதாதக் கவிதைகள் எழுதிட எழுதிட
எனக்கொரு வரமுமே வேண்டும் - அது
கனவாக இல்லாமல் கைக்கனி போலவே
கைதனில் கிட்டவே வேண்டும்!

வாழ்வாங்கு வாழ்ந்ததை வாழுவோர் சொல்லிட
வரலாறு பேசுதல் வேண்டும் - என்
ஊழ்வினை உச்சத்தில் உயிர்த்தமிழ் மாத்திரம்
உயிர்ப்போடு இருக்கவே வேண்டும்!

இதுபோல இனியொருவர் இத்தரை பெறுதலும்
இல்லாது இருத்தலே வேண்டும் - ஈதொரு
மதுபோல போதைதான் மன்னிக்க மனங்களும்
மண்மடி பிறக்கவே வேண்டும்!



# மனத்துணிவே மாற்றம் செய்யும்

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

வாழ்வதற்காய் வாழ்விழக்கும் கணிகை யர்போல்
        வாழ்வுதனை இழக்கின்றார் வாக்க ளித்தோர்
வாழ்வளிக்கும் மழையேவாழ் வழித்தல் போன்று
        வாக்குகளைப் பெற்றவரே அழிக்கின் றார்கள் !
வாழ்வழிப்பார் என்றறிந்தே ஆடு கள்தாம்
        வாய்க்கரிசி போடுவோரை நம்பு தல்போல்
பாழ்செய்வர் என்றறிந்தும் மீண்டும் மீண்டும்
        பதவிதன்னை அளிக்கின்றார் திருட ருக்கே !

வெற்றுடம்பில் உண்மையுள்ளே ஒளிந்து நிற்க
        வேட்டியிலே ஒளிர்கிறது வெளியே பொய்மை
புற்றமைத்த கரையான்கள் பதுங்கிக் கொள்ளப்
        புகுந்தபாம்போ ஆடுதுதன் முகத்தைக் காட்டி !
குற்றங்கள் புரிந்தவர்கள் ஆட்சி செய்யக்
        குற்றேவல் புரிகின்றார் காவ லர்கள்
கற்றவர்கள் திறமையாக ஊழல் செய்யக்
        கல்லாதார் அதில்சிக்கிச் சாம்பு கின்றார் !

பொல்லாதார் அதிகாரச் சாட்டை வீசப்
        பொதிசுமக்கும் மாடுகளாய் உழைப்ப வர்கள்
நல்லவர்கள் வீட்டிற்குள் முடங்கிக் கொள்ள
        நலிவுசெய்வோர் வீதிகளில் திரிகின் றார்கள் !
எல்லாமும் தலைகீழாய் இருப்ப தேனோ
        எதிர்ப்பதற்குத் துணிவில்லா மனங்க ளாலே
வல்லமையை மனமேற்றுக் கயவர் தம்மின்
        வாலறுத்தால் போதுமிங்கே புதுமை பூக்கும் !

கவிஞர் கருமலை தமிழாழன் அய்யாவுக்கு தமிழக அரசின் கபிலர் விருது அமைச்சர்களால் வழங்கப்பட்டது வாழ்த்துகிறோம்





# மத்தாப்புச் சிரிப்பழகி

கவித்தேனீ. க. மகராசிசக்திராஜ்
கால்க்கரை - திருநெல்வேலி

“ஏலேய் நாச்சிமுத்து.. எங்கடா இருக்க...”

இதோ வந்துட்டேன் ஆத்தா.... ஏன் கூவுரவ எத்தனை முறை சொல்லிருக்கேன். வேலை நேரத்துல கூப்டாதனு முதலாளி காதுல விழுந்தா... வீட்ல சும்மாதான் உட்காரனும். நேரங்காலமே கெடையாது உனக்கு. போ.. ஆத்தா.. வாரேன் என்று சலிப்போடு... வருகிறார் நாச்சிமுத்து.

ஆத்தாவின் முகம் வாடியது. சரியா. நீ காத்தால கஞ்சி குடிக்கில வந்துட்ட அதான் செத்த சாப்பிடகூப்பிட வந்தேம்பா. புள்ள பசி தாங்கமாட்டியே அதான்.

சரி ஆத்தா பட்டாசு ஆலையில ஏகப்பட்ட வேல கிடக்குது ஆத்தா... முதலாளி நல்ல மனுசன் என்னைய நம்பிதான் பொறுப்ப ஒப்படைச்சிருக்காரு பாத்துக்க. அடிக்கடி அங்கெல்லாம் வரக்கூடாது நீ ஆத்தா.. மத்த பயலுக... மதிக்க மாட்டாய்ங்க. அம்புட்டுதான் சொல்லிபுட்டேன். என்றபடி வீட்டுக் குள்ளே சென்றான் நாச்சிமுத்து.

தொழிற்சாலை அருகிலே வீடு என்பதால்..சிறு சத்தம் கூட வீடுவரை கேட்கும்.

“ஆத்தா... ஆத்தா” என்றபடி பக்கத்து வீட்டு பரிமளா.. வந்தாள்

“இவ ஒருத்தி நேரங்காலமே கெடையாது.. என்ன இருடி செத்த வரேன்..” என்றபடி வாசலுக்கு வந்தாள். வந்தவள் அதிர்ந்து போனாள்... சுதாரித்து கொண்டவள் ஐயயோ! என்னாச்சு மலருக்கு என்றபடி வீட்டுகுள்ளே ஓடி போய் பாயை எடுத்து விரித்து படுக்க வைக்க செய்தாள்.

“அதுவந்து.. அது வந்து” என இழுத்தாள் பரிமளா... அதற்குள் கலா முந்திகொண்டு பேசத்தொடங்கினாள்.

“அது வந்துமா... பட்டாசு ஆலையில் வேலைபார்க்கும்போது..” என மென்றுமுழுங்கினாள் பரிமளா..

“சும்மா சொல்லுபுள்ள என்னனு சொன்னாதானே.. வைத்தியம் பண்ணமுடியும்” என்று சிறு அதட்டல் விட்டாள்...மங்கை.

பரிமளா சொல்லத் துவங்கினாள்

“நம்ப முதலாளி பையன்..”

“ஏது? அந்த கேசவனா?” என்றபடி நகர்ந்தவள் நடைபோடத் துவங்கினாள்.

“ஆமாமா, அந்த எடுபட்ட பயலே தான் நம்ம மலர் மருந்து கிடங்குக்கு தனியா போனபோது. வம்பு பண்ணி மிரட்டிருக்கான். அப்ப இருந்து இவ என்னவோ மாதிரி சிரிக்கிறாள். எப்பவும் ‘மத்தாப்பு ... புன்னகை’ யோடு இருப்பவள். யாரோடும் பேச மாட்டேங்குறாள்” என்றாள் பரிமளா.

“அதுவந்து அவ அந்த பையனை விரும்பினாளா? எதுவும் தெரியல. எப்பவும் மல்லுக்கட்டி என்னையும் நிம்மதியா வேலை செய்ய விடுரதுமில்லை” என்றாள்.

சரி என்றவாறு மலருக்கு வைத்தியம் செய்யத் தொடங்கினார்.

சில நிமிடத்தில் கண் திறந்தாள். “மெல்ல மெல்ல” என்றவாறு அணைத்து கொண்டாள் பரிமளா.

மறுநாளே பேச தொடங்கினாள்...

“அதுவந்து முதலாளி!...”

“சொல்லுபுள்ள.. “ என கேட்க...

“பட்டாசு மருந்துன்னு தெரியாம முதலாளி மகன் வந்து வேடிக்கையாக பீடியை பத்த வச்சுட்டாரா... பக்கத்துல இருந்த... எனக்கு மயக்கம் வந்திடுச்சி... பிறகு பார்த்தால் நான் இங்கே இருக்கிறேன்”.

“ஆபத்து நிறைந்த வேலையில் விபரீத முயற்சி” என்றபடி வைத்தியம் செய்தார் அதிர்ந்தபடியே...

# தங்க மீன்கள்

வண்ண வண்ண மீன்கள்
அழகழகாய் நீந்துகின்றன
கண்ணாடித் தொட்டிகளில்

நான்கு சுவர்களுக்குள்
வாழ்க்கையைத்
தொலைத்து விட்டவர்களாய்
சிறைப்பட்ட பெண்கள்

நீர் உண்டு
காற்று உண்டு
உணவு உண்டு
சுதந்திரம் மட்டும் இல்லை

கவிதையோ
கதையோ
கற்பனைச் சித்திரமோ
கனவுகளில் மட்டும் நீளும்

தூண்டில்கள் இங்கே
போடப்படுவதில்லை
வலைகளும் இங்கே
வீசப்படுவதுமில்லை

பாதுகாப்பு வளையத்தில்
சிக்கியே
சீர்மிகு ஆற்றல்
சிதைக்கப்படுகிறது

தாகம் தீரா மீன்கள்
துள்ளி மேலெழுந்து
எட்டிப் பார்க்கையில்
தலைத்தட்டி அடக்கப்படுகிறது

இரவுப்பகலாய் நீந்தியும்
விடியல் மட்டும் இல்லை
கடக்கவியலாத் துயரங்களுக்கு
வடிகாலும் இல்லை

உற்றுப்பார்க்கும் மீன்களை
சற்று உற்றுப்பாருங்களேன்
அழுகிறா? சிரிக்கிறதா?
உங்கள் தங்க மீன்கள்!

**- பெ. விஜயலட்சுமி**
காஞ்சிபுரம்



# ஆகாயத்தை நோக்கிப் பயணம் செல்லும் குழந்தை

உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே நடக்கப்படும் சண்டை. இதில் பல குண்டுகள் வீசப்படும் பல துப்பாக்கி சுடப்படும். பாதிக்கப்பட்ட மக்கள் பலர். உயிர்களை இழந்தோர் சிலர் உடைமைகளை இழந்தோர் பலர். கை கால்கள் இழந்து ஊனம் ஆனோரும் உண்டு. இதில் பெற்றோரை இழந்த சிறு குழந்தைகளும் உண்டு .

இதில் சில குழந்தைகளை ஒருவர் தத்தெடுத்து செல்கிறார். அதில் ஒரு குழந்தை பயத்தால் நடுங்குகிறது .உணவை உண்ண மறுக்கிறது கவலையில் வாடி நிற்கிறது. சொல்வதறியாது திகைக்கிறது. கதறி அழுகிறது.

அக்குழந்தையை அணுகி என்ன வேண்டும்? என்று கேட்க என் பெற்றோர்கள் வேண்டும் என்று பதில் கூறுகிறது. உடனே அவர் ஆகாயத்தை பார்த்து உன் பெற்றோர்கள் மேலே சென்று விட்டார் என்று கூறுகிறார். விவரம் தெரியாத குழந்தை அதுவும் சொல்வதை அப்படியே உள்வாங்கிக் கொண்டது.

ஓ ஓ ஆகாயத்தில் தான் இருக்கிறார்களா? சரி நாமும் அங்கே போய் அவர்களை பார்ப்போம் என்று நினைத்தது சுற்றி முற்றிப் பார்க்கிறது. அங்கே எதுவும் இல்லை .ஒரு நீண்ட நெடிய மரம் கண்ணுக்குத் தென்பட்டது. உடனே அக்குழந்தை மடமடவென்று வேகமாக ஏறி, அந்த மரத்தின் உச்சிக்கு சென்று விட்டது.

உடனே அங்கு இருப்பவர்கள் அந்த சம்பவத்தை பார்த்து விட்டார்கள். குழந்தையை பார்த்து, உடனே கீழ வா என்று கூறியபோது இல்லை நான் வரமாட்டேன் என்றது. மரம் ஒடிந்து நீ கீழே விழுந்து விடுவாய் விரைவில் வா என்று கூறிய போது இல்லை என்று மறுத்தது. ஏன் வர மறுக்கிறாய் எதற்காக அங்கு சென்றாய் என்று கேட்டபோது நீங்கள் தானே கூறினீர்கள் ஆகாயத்தில் என் பெற்றோர்கள் இருக்கிறார்கள் என்று அவர்களை நோக்கி நான் பயணம் செய்து கொண்டிருக்கிறேன் இன்னும் சிறிது தூரம் சென்றால் அவர்களை கண்டு விடுவேன் என்றது கீழே இருப்பவருக்கு என்ன கூறுவது என்றே புரியவில்லை .ஏதேதோ சமாதானம் படுத்தி கீழே வரவழைக்கிறார்.

மனிதர்களே இந்த சண்டையும் சச்சரவும் எதற்கு?? இதனால் வரும் நன்மைதான் என்ன?? சண்டையை விடுத்து சமாதானத்தோடு வாழ்வோமாக.

ஜ.மகாலட்சுமி
சிக்காரம்பாளையம், கோவை

# காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

காற்றுள்ள போதேதூற் றிக்கொள் நீயும்
காலங்கள் செல்வதற்குள் கவலை நீக்கி
நேற்றுடனும் காலங்கள் நிறைவ தில்லை
நீண்டகால நோக்கங்கள் நனவாய் வேண்டும்
கற்பனையில் எல்லாமே நடப்ப தில்லை
காத்திருந்து காரியங்கள் முடிக்கவேண்டும்
தோற்றுவிடா முயற்சிகளில் வெற்றி உண்டு
தோல்விகளைக் கண்டுளமும் சோர்தல் வேண்டா

காலங்கள் உனக்கெனவும் பார்ப்ப தில்லை
கவலைகளும் என்றென்றும் முடிவ தில்லை
கோலங்கள் போலவேதான் சிக்கல் உண்டு
கொள்கைகளை மாற்றாது வாழ்தல் நன்று
வேலைகளை முடிப்பதற்கே கருத்தாய் நீயும்
வேண்டியதை உரியநேர பார்த்துச் செய்க
குளக்கரையில் காத்திருக்கும் கொக்கு போலக்
கொள்வாயே சமயம்பார்த் துநீயும் வேலை

வரும்நேரம் காத்திருந்து செயலைச் செய்க
வந்தபின்னே தவறவிட்டு வருந்த வேண்டா
கருத்துகளும் நல்லவையாக இருக்கும் போது
கற்றிடவும் சோர்வகன்று மகிழும் வண்ணம்
திருத்தமாக அனைத்தையுமே செய்யும் போது
திருப்பங்கள் உன்னிடத்தில் வந்து சேரும்
விருப்புகளைத் தள்ளிவைத்து முடிக்கும் போது
விரைவாகக் காரியங்கள் நிறைந்து போகும்

**தமிழ்நெஞ்சம் அமின்**

# நினைவுகள்

நினைவுகள் என்னைச்
சுற்றி மாலையிட
மணமகளாய்த் தலைசாய்கிறேன்

காதோரம் கிசுகிசுக்கும் நினைவுகள்
காற்றாகத் தழுவும் நினைவுகள்
பூவாக மலர்ந்த நினைவுகள்
காயாகக் கசக்கும் நினைவுகள்
கால் நனைத்த அலையாகச்
சில்லிடும் நினைவுகள்
பெரும் பாரம் சுமந்த
நெஞ்சமாக நினைவுகள்
பூத்தூவி வரவேற்கும் நினைவுகள்
பூம்பனியாய் மேனி
சிலிர்த்த நினைவுகள்
கண்ணீராய்க் கொட்டும் நினைவுகள்
கடும்பசிகாரனாகப்
பசித்த நினைவுகள்
பள்ளிச்சிறுமியாய்க்
குதித்த நினைவுகள்
பாற்கடலாய்ப்
பொங்கும் நினைவுகள்

இப்படியாய்...

நினைவுகளின் நிழலில் சற்றே
அயர்ந்து உறங்கிப் போனேன்

கண்விழித்துப்பார்த்த
போது நிசங்கள் உறைக்க
காணாமல் போயினவே

எந்தன் நினைவுகள்
காற்று கலைத்த மேகமாக...

**- தென்றல் கவி - தமிழ்ச்சிட்டு**

# உலகம் நம் உள்ளங்கையில்

## தன்முனைப்பு தொடர் – 1



### பேராசிரியர் நா அருணாசலம்

# நாம் யார்?

உயிரி அறிவியலின் அடிப்படையில் இரு வேறு மாற்றுப்பாலினம் ஒன்றாக இணைவதால் உண்டாகிற கரு இந்த அண்ட வெளியை தொடும் போது அதற்கு எத்தனையோ பெயர் இருந்தாலும் «சிசு» என்கிற அந்தக் குறிப்பிட்ட பரிணாமத் தோன்றுதலே கருவறை, முதல் கல்லறை வரை தன் பயணத்தை ''வாழ்க்கை'' எனச் சொல்லி, அதுவும் இறுதியில் இயற்கையோடு ஒன்றிப்போகிறது.

ஆம், இந்த சிசுக்களின் வழித் தோன்றல்களாகியா நாம் யார்? அந்த சிசுவின் பயணமான வாழ்க்கை என்றால் என்ன?. இன்று வரை சிசுக்களின் கூட்டமைப்பான மனிதம் என்கிற இந்த ஒற்றைப் பரிணாம வளர்ச்சி மட்டும் எப்படி மற்ற இயற்கை உயிரிகளிடம் (Flora & Fuana) இருந்து வேறுபட்டு தொடர்ந்து வளர்ந்து வருகிறது. இப்படி ஆதி மனிதன் தோன்றியதில் இருந்து இன்று இருப்பவர் வரை மனித வாழ்வியல் சித்தாந்த கோட்பாடுகளை (Ideology) சொல்லுகிற போதும், அறிவியல் என்கிற உண்மை தொடர்ந்த போதும், இன்னும் பல மனித இன பரிணாமங்கள் (Evolution) புரிந்தும் புரியாத மெய்யாகவே இருக்கிறது.

எண்ணங்கள் (Thoughts) என்கிற ஒன்று எல்லா உயிரியிலும் வேதிச் செயலாய் நடைபெற்று அது செயல் வடிவம் பெற்றாலும், அது தொகுப்பாய் மாறி, சிந்தித்து (Thinking) அதன் நீட்சியாய் சிந்தனை என்கிற செயல் நிகழ்வு (Thinking Process) நம் மனித உயிரில் மட்டுமே நடைபெறுகிறது என்பது அறிவியல் உண்மை. இது மனிதனுள் நடைபெறும் தனித்துவ நிகழ்வு ஆகும்.

இது நம்முள் எங்கு, எப்படி, ஏன், எவ்வாறு, எதனால், நடைபெறுகிறது. ஆக படைப்பில் மனிதன் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவன் ஆகிறபொழுது, இத்தனை கேள்விகளையும் அவனே எழுப்பி, அதற்கு தீர்வு காண விழைகிறான். இதற்கான தீர்வை அவன் கண்டுபிடிக்க விழைகையில், கேள்விகளுக்கான விடைகள் இப்படி இருக்கலாம் என்பதை முன் கூட்டியே அவன் எடுகோள்களாக (Hypothetical) சொல்லும் போது அது

தத்துவங்கள் (Philosophy) ஆகிறது. அந்தத் தத்துவங்கள் நிரூபிக்கப்படும் பொது அதன் வழிமுறைகளும் (Methodology) அதன் தீர்வை மெய்ப்பிக்கும் இயல் மனிதரிடம் அறிவியல் ஆகிறது.

சரி இப்படி தீர்மானிக்கும் ஆற்றலை மனிதனுக்கு சிந்தனை எப்படிக் கொடுத்தது. ஆம், மனிதன்தான்வாழ்தலின் நிகழ்வுகளில் கிடைக்கும் தொகுப்பை கொண்டு சிந்தித்து தீர்மானிக்கிறான். என் சகமனிதனே வாழ்தலின் நிகழ்வுகளில் கிடைக்கும் தொகுப்பே அனுபவம் என்று நாம் இங்கு உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே மனித அனுபவமே அவனின் வாழ்க்கை.

அப்படிப்பட்ட மனித எண்ணங்கள், வாழ்க்கையை அனுபவத்தின் மூலம் சிந்தித்து தனக்கான பல தனி மனித செயல்பாட்டின் மூலம் வாழ்க்கை என்கிற பயணத்தை தொடர்கிறது.

அந்த பயணத்தில் மனிதன் எதை அடிப்படையாகக் கொள்கிறானோ அதற்குத் தேவை என்றும் எதை விரும்பு கிறானோ அதற்கு ஆசை என்றும் எதை அடைய விரும்புகிறானோ அதற்கு எதிர்பார்ப்பு என்றும் எதை உணர்ந்து புரிந்து கொள்கிறானோ அதற்கு அறிவு என்றும் எதை தெரிந்து கொள்கிறானோ அதற்கு கற்றல் என்றும் எதை பகிர்ந்து கொள்கிறானோ அதற்கு கற்பித்தல் என்றும் எதை அடைகிறானோ அதற்கு இலக்கு/வெற்றி என்றும் எதை அடைய முடியாமல் போகிறானோ அதற்கு தோல்வி என்றும் பெயரிட்டு இன்னும் பல அனுபவங்களோடு கலவையாய் பயணிக் கிறான். இதில் அவன் அனுபவங்களின் புலன் வெளிப்பட்டால் வீழ்ந்தும் எழுந்தும் தடுமாறியும் தவித்தும் தவிர்த்தும் நிலைத் தும் பயணப்படுகிறான்.

இங்கே மனிதனின் எண்ணச் சிந் தனைகள் எங்கே தோன்றுகிறது, மனித மூளை என்கிற அறிவியல் மூலத்திலா,



இல்லை மனம் என்கிற உளவியல் கோட்பாட்டிலா. வெற்றி மட்டுமே மனித வாழ்வியலில் ஏன் முழுமையாக சாத்தியப்படவில்லை. புலன் உணர் வினால் கட்டுப்பாடை இழக்கும் உடலை யும், மனச் சிந்தனையால் நிலை பெறாத வாழ்வியலையும் எப்படி ஒருசேரக் கொண்டு நம் வாழ்க்கைப் பயணத்தை அணுகுவது என்பதற்கான தேடலே இந்த தன்முனைப்பு தொடர்.

நம் வாழ்வில் வெற்றிகளும் தோல்வி களும் சரி சமமே, வெற்றி வந்தால் எப்படி தக்க வைத்துக்கொள்வது, தோல்வி வந்தால் எப்படி ஏற்றுக்கொண்டு அதை மாற்ற முயற்சிப்பது, வாழ்க்கை முழுவதும் எப்படி நாம் நாமாக இருப்பது என்பதை உளவியல் அடிப்படையில் விவாதிக்க போகிறது இந்தத் தொடர்.

இந்த தொடர் அறிவியல் கொண்டு உளவியல் அடிப்படையில் மனிதம் வளர முயற்சிக்கும் ஒரு தன்முனைப்புத் தொடர். மனம் அப்படியென்றால் என்ன...

அடுத்த பகுதியில் சந்திப்போம்.

தொடரும் ...

# உன் காதலோடு மட்டும்...

இணைந்த கைகளோடு
சுற்றித் திரிந்த பொழுதுகளை
நினைத்து பார்த்தேன்...

பொக்கிஷமான  நினைவுகளை
என்னுள் புதைத்து
நொடியும் யுகமாய் நகருதே...

அருகினில் உணரும்
அன்பினை தேடி
உலா வரும் மனமே....

தூரத்து காத்தாடியாய்
வந்து போகும்
மாயை பிம்பமோ...

அழியாத  கோலத்தினை
அழகாய் போட்ட
நாட்கள் வருமா....

காலத்தின் கையில்
விளையாடும் பொம்மைகளாய்
நீயும் நானும்....

பேசாத கதையை
பேசித் தீர்த்திடும்
நாளும் வந்துடுமே...

நீங்கா எண்ணத்தை
மனதினுள் மருகிக்
காத்திருக்கும் பேதை...

**புவனாபாபு**
நாகை.



# உயர்வைக் காண்போம்!

ஏட்டுக் கல்வி பயின்றே
ஏற்றம் கண்டே உயர்ந்திடுவாய்!
மீட்டும் நன்மை யாவும்
மேன்மை பெற்றே திகழ்ந்திடுவாய்!
பாட்டும் பண்ணும் கற்றே
பசுமைத் தமிழை வளர்த்திடுவாய்!
கூட்டும் பண்பால் வாழ்வு
கோவில் போன்று கமழ்ந்திடுமே!

தங்கத் தமிழின் உணர்வைத்
தலையில் தாங்கி வாழ்ந்திடுவாய்!
எங்கும் விழுதாய் உறவை
ஏந்தி நன்மை யளித்திடுவாய்!
சிங்க நடையைப் போட்டுச்
செல்லும் திசையில் புகழ்பெறுவாய்!
சங்கம் அமைத்தே கூடித்
தடையை உடைத்து வென்றிடுவாய்!

**ரஞ்சினி சந்திரமோகன்**
(நிலவழகன்)

# குக்கூ

1.
மழையைப் பிடிக்கவில்லை..
படர்ந்து விரிந்த கிளையடியில் அமர்கிறது..
காயம்பட்ட பறவை ...!!
2.
வெட்டப்பட்டது சாலையோர மரங்கள்
கட்டப்பட்டது வீட்டின் துவாரத்தில்
குருவி கூடுகள் ....!!
3.
அத்தனை பாரமில்லை
வறுமையை விடவும்
தலைமேல் சுமந்த கல் ...!!
4.
தூறல் போடும் மேகம்
வீடு செல்லும் முனைப்பில்
பணியாட்கள் ....!!
5.
மலையுச்சி
காய்ந்த புல் மேயும் செம்மறி
காவலுக்கு அருக்காணி  ...!!
6.
கவிழ்த்தி வைத்த பாத்திரம்
தவழும் பச்சிளம் குழந்தை
அருகே பாலருந்தும் ஆட்டுக்குட்டி ...!!

**ச. ராஜ்குமார்**
திருப்பத்தூர்

# நெருப்பென நில்

இழிவினை அகற்றிடும் இனநலப் படையென
இகழ்வினைப் பொசுக்கிடும் நெருப்பெனநில்!
பழிதனைச் சுமப்பினும் தமிழ்நெறி பழித்திடும்
பகைசுடப் பரிதியின் பரப்பெனநில்!

அழிவினை விளைத்திடும் அயல்பகை அறுத்திட
அனலுமிழ் எரிமலைத் திறப்பெனநில்!
மொழிதனை விழியென உயிரினும் உயர்வென
மொழிந்திடும் உறுதியின் பொறுப்பெனநில்!

பெயல்தரும் உயிர்த்துளி பெறத்துணை யெனுந்தரு
பிழைத்தெழும் முறைசெயும் துருப்பெனநில்!
புயல்தரும் விசையினும் வலிவுடைக் கயமையைப்
பொறுப்புடன் எதிர்த்திடும் மறுப்பெனநில்!

மயல்தரும் பொருள்வர வரும்புகழ் திரையிட
மமதையின் மனநிலைத் துறப்பெனநில்!
செயல்தரும் விடைதனை! கனவிலை! கருத்திலை!
தெளிவுடன் உழைத்திடும் சிறப்பெனநில்!

கயல்மலி நிறைகுள உறவெலாம் வளமறக்
கழிந்திடும் நிலையிலும் செருக்குடன்நில்!
முயல்வலி உளங்கொள தடையிடர்த் தளையற
முனைப்புடன் செயல்படும் உருக்கெனநில்!

அயல்மொழித் திணிப்பினை அருந்தமிழ் இழிப்பினை
அகற்றிடக் களம்வரும் துடிப்பெனநில்!
வியல்வெளிக் கடலெனப் பரப்பினில் சிறப்பினும்
வெயிற்றுயர் தணித்திடும் சுரப்பெனநில்!

மடைவரும் புனலென வருந்துயர் வதைதர
வலிவுடன் எதிர்கொளும் மலையெனநில்!
கடைவரும் உறவிலை! இடைக்கயிர் அறுபடும்!
கருணையின் கொடையெனும் மழையெனநில்!

முடைவரும் வறுமையில் அயர்ந்திடும் நிலையிலே
முயல்வதால் கரைதொடும் அலையெனநில்!
இடைவரும் பொழுதிலே அருஞ்செயல் புரியவே
இறப்பினும் இருந்திடும் சிலையெனநில்!

செல்வ மீனாட்சி சுந்தரம்
சென்னை

## பாரியன்பன் நாகராஜன் கவிதைகள்

●
பல துளிகள் விழுந்ததில்
நினைவிலில்லாமல் போனது
அந்த முதல்துளி.

●
பழம் சுவைக்க விரும்பிய
மண்ணின் ஆசையை
நிறைவேற்றி வைக்கிறது
மரத்தை உலுக்கிய காற்று.

●
ஓடோடி வந்த காற்று
முதலில் ருசிபார்த்தது
பூவின் வாசத்தை...!

●
இருண்ட வானத்திலிருந்து
வழிந்து கொண்டிருக்கும்
நட்சத்திரங்களை ஒன்று விடாமல்
சேகரித்துக் கொண்டிருக்கிறேன்.
நிரம்பிக் கொண்டிருக்கிறது
என் வண்ணக் கனவுகள்...!

●
பசியால் அழும் குழந்தை
வற்றிய மார்போடு
நிலா பார்க்கிறாள் தாய்.

●
எக்காலத்திலும்
பழுதாவதில்லை
காலம்...!

●
நிரந்தரமில்லை
இருக்கும் போதே
வாழ்ந்துக்கொள்.

●
தெருக்குழாய்க்கு
நீர்ச்சுருக்கு
கோடை காலம்.

●
ஓடிக் கொண்டிருக்கிறோம்
ஓட்டம் நின்றபாடில்லை
பாதையும் முடிந்தபாடில்லை.

●
விண்மீன்களை தொலைத்தது
யாரென்று நிச்சயம்
பகலுக்கும் தெரியாது.

●
நம்மைப் பின்தொடரும்
காற்றுக்கு; எல்லோருமே
பாக்கி வைத்திருக்கிறோம்.

●
கூட்டத்தில் தொலைந்த நீ
என்னைத் தேடுகிறாய்.
தொலையாத நான்
உன்னைத் தேடுகிறேன்.

- ஆக்கம்
பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602





# கலியாண கலர்பாயும் கறிக்கொழம்பும்

அ.முத்துவிஜயன்

அன்னிக்கி சொந்தக்காரவுக வீட்டுல மறுவீட்டு விருந்துச்சாப்பாடு. மறுவீட்டுச் சாப்பாடுன்னா அசைவம் போடுவாக கோழி முட்டை கறிக்கொழம் புன்னு எல்லாம் தடபுடலா இருக்கும்.

இவளுக்கு மூணும் பொண்ணுக, விருந்துக்குக் கூப்புட்டாகளேன்னு போய்ட்டு வந்ததுல இருந்து ஒரே அழுக. என்னான்னு விசாரிச்சா இவங்களைப் பாத்ததும் எளக்கார மாப் போச் சாம் விசேசகாரவுங்களுக்கு. ரொம்ப நேரமாக் காக்கவைச்சிட்டு கடைசில மிச்ச மிருந்த கறிக்கொழம்பு மாத்திரம் ஊத்தி அம்புட் டுத்தேன் திண்ணுட்டுப்போங்கன்னு சலிப் போட சொன்னாகளாம், மூணும் வந்து அழுதுச்சுக. அப்ப இவ சொன்னா நம்மளுக்கு கலியாண பாய் ஆடர் ஒண்ணு வந்திருக்கு அது முடிச்சிக்கொடுத்தா நல்ல காசு வரும் அப்ப ஒரு கிலோ கறி எடுத்து மனசா செழிக்க செழிக்கச் சாப்புடலாம்னு வாக்குக் கொடுத்திருந்தா.

எல்லாம் நல்லாத்தான் போய்கிட்டு இருந்துச்சு புருசன் சம்பாரிக்கிறவரை, இவ புருசன் ஆக்சிடெண்ட்ல அடிபட்டு நடக்கமுடியாமவீட்டுலமொடங்குனவன்ன எல்லாம் தலைகீழாப்போயிறுச்சு, வெளி வேளைக்கி இவ போனா சந்தேகம் மனுசனுக்கு என்னத்தச்சொல்ல அந்த நேரத்துல அவளுக்கு பாய் முடையிறதச் சொல்லித் தந்ததே இப்ராகிமோட பீவி பாத்திமாதான், அந்த ஊருல பாய்மாருக வீட்டுலதான் பொம்பளைக பாய் தயாரிக் கிறத தொழிலாச்செஞ்சிக்கிட்டு இருந்தாக,

இவளோட புருசன் அடிபட்டு மொடங்குன வன்ன என்ன பண்ணுற துன்னு திக்குத் தெரியாம நின்னப்ப பாத்திமாதான் சொன்னா ஒனக்குப்பாய் முடைய சொல்லித்தாறேன் பொம்பளைக வெளியபோய் கஸ்டப்படாம வீட்டுக் குள்ளாறயே வேலை செய்யலாம் வீட்டு வேலைகளைப்பாத்துக்கிட்டே சமையலும் செஞ்சிக்கிட்டே சும்மா இருக்குற நேரத்துல செய்யிற தொழில்தான் இது கௌரவமான தொழில் ஆருக்கிட்டயும் போய் கைகட்டி நிக்க வேண்டியதில்லன்னு வீட்டுக்குக்

கூட்டிட்டுப் போய் சொல்லிக்கொடுத்தா

அவளோட புருசன் இப்ராகிம் கீழமாசிவீதில மொத்தமா கோரை நூல் மஞ்சிசாயம் எல்லாம் வாங்கியாந்து குடுத்து பாய் போட்டவன்ன அத அவரே மொத்தமா வாங்கிட்டுப்போய் வித்துட்டு வந்து காசு கொடுப்பாரு, அப்ப இவங்க வீட்டுலயே பாய் போடுற தறி அமைச்சிக்கொடுத்தா பாத்திமா அதை எப்புடிப்போடுறதுன்னும் சொல்லிக்குடுத்தா

அதுக்குன்னு மூணு மூங்கில்க முக்காலி மாதிரி அமைச்சி குறிப்பிட்ட அளவு மூங்கில் கம்புகள படுக்கவசமா வைச்சி ஆணி அடிச்சி கட்டி அதுல நூல கோர்த்து பாவு மாதிரி ரெடிபண்ணிக் கொடுத்தா, அதுல ஒக்காந்து வேலை செய்ய நீளமான பலகை அதுல ஒக்காந்துக்கிட்டுத்தான் நகட்டி நகட்டி பாய் போடனும், பாவுல மாதிரியே மரத்துல செஞ்ச ஓட்டை ஓட்டையா போட்ட பலகை இருக்கும் அதை வைச்சித்தான் அடிச்சி இறுக்கி நெருக்கமா கோரைய சேத்து பாய் செய்யிறது. குறுக்கு எடுபடுற வேலைதான் என்ன செய்ய வயிறு இருக்குதே

மொத்தக்கடையில கோரைய வாங்கியாந்து அதுக்கு பச்சை செவப்பு நீலம் மஞ்சள்னு கலர் கெமிக்கல் வாங்கியாந்து சாயம் காச்சி அதுல கோரைய முக்கி வேலவைச்சி கலர் கோரை தயார் செய்யனும், சாதாபாய்களுக்கு சேலை முந்தாணி மாதிரி கலர் கோரை போடனும், கலியாணப் பாய் எல்லாரா லயும் போட்டுறமுடியாது, ஆனா இவ அதையும் கத்துக்கிட்டா, அதுக்கு நெறையா மெனக்கெடனும் அதுல கோபுரம் கிளி மயிலு மாதிரி டிசைன் பண்ணனும், அதையும் பாத்திமாதான் சொல்லித் தந்தா, அதுவும் சமுக்காளம் செய்யிற மாதிரிதான்

பாய் போட்டவன்ன அடுத்து நூலைச்சேத்து அடுத்த பாய் போடலாம். இல்ல அவுத்து வைச்சிறலாம், இதுல நூல்பாய் கம்மி ரேட்டு மஞ்சிப்பாய் ரேட் அதிகம் அதுக்கு மஞ்சி வாங்கியாந்து அதுல நூல் நூத்து அந்த மஞ்சி நூல்ல பாய் போட்டுக்குடுப்பா. அது நல்லா ஒழைக்கும் அதுனால அதுக்கு வேலையும் அதிகம் நல்லாவும் ஒழைக்கும்

பாய் போட்டவன்ன இப்ராகிம் கிட்ட கொண்டு போய் குடுத்தா காசு குடுப்பாரு அப்புடியே அடுத்த தயாரிப்புக்கு கோரையும் நூலும் வாங்கிட்டு வந்துருலாம் இப்புடித்தா பொழப்பு போய்கிட்டு இருந்துச்சு

ஏற்கனவே சொன்ன மாதிரி அந்தக் கல்யாணப் பாய்க்கு தனியா கெமிக்கல் கலர் வாங்கிட்டு வந்து கோரைய வேகவைச்சி கலர் பூசி ரெடி பண்ணி அஞ்சு நாளா உசிறக் கொடுத்து பாய் மொடைஞ்சி கலியாணக் காரவுக வீட்டுல குடுத்து காசு சொளையா வாங்கியாந்துட்டா.

அன்னிக்கி பிள்ளைகளுக்கு லீவு ஞாயத்துக் கெழமை வேற அதுனால கறி எடுத்துக் கொழம்பு வைக்கிறதுன்னு முடிவெடுத்து கறியும் வாங்கியாந்து கொழம்பு வைச்சி சோறாக்கி ரெடி பண்ணிக்கிட்டு இருந்தா, அதோட அதா பாயும் போட்டுக்கிட்டு இருந்தா அன்னிக்கி மத்தியாணம் இப்ராகிம் வந்து பாய் வாங்கிட்டுப்போறதாச் சொல்லி இருந்தாரு. அதுனால பாய் போட்டுக்கிட்டே சமையலும் நடந்துக்கிட்டு இருந்துச்சு.

பிள்ளைக வீட்டுல கறிக்கொழம்பு திங்கப்போற சந்தோசத்துல வெளயாடிக்கிட்டு இருந்துச்சுக. இவ கொழம்பு கொதிக்கிற வாசம் வந்தவன்ன கறி வெந்துருச்சான்னு போய் பாத்து எறக்கப் போனா, அப்ப கறிக்கொழ்புல என்னமோ வித்தியாசம் தெரிஞ்சது. கொழம்பு அப்புடியே ரத்தக்கலர்ல செக்கச் செவேல்னு இருந்துச்சு, பாத்ததும் இவளுக்கு அடி வயிறு கலங்கிப்போச்சு

## செயற்கை உரம்

முடிச்சுக் கயிற்றின்
முத்த உறவு விடுபட
உற்சாகத் துள்ளலுடன்
தாய்மடி மோதி
பாலுண்ணுகிறது கன்றுக்குட்டி!

இடையிடையே
தாயின் நாவருடல்
இதமான சுகம் தர
மீண்டும் மடி கிறக்கம்
தேடியோடுகிறது!

சற்று நேரத்தில்-
இளைத்த வயிறு
ஊதிய பலூனாய்
பெருக்கிறது
யூரியா தின்று கொழுத்த
பாலக்கீரை போலவே!

**- ச்ஜேஸூ,**
ஜெர்மனி

ஆத்தீ என்னமோ நடந்துருக்குதே இல்லாட்டினா கொழம்பு மஞ்சக்கலர்ல தான் இருக்கும் இது ரத்தச்செவப்புல கெடக்குன்னு கலங்கிப்போனா, அழுக அழுகயா வந்துச்சு ஒரு வார ஒழைப்புல வந்த காசுல கறி வாங்கியாந்து வைச்ச கொழம்பு பிள்ளக வேற ஆவலா காத்துக்கிட்டுக்கெடக்குதுக என்ன இது சோதனைனு கலங்கி நின்னப்ப

இவளோட மகளுகளக்கூப்புட்டு வெசாரிச்சா ஏண்டி நீங்க என்னமும் பண்ணுனீங்களான்னு கேட்டப்ப மூத்தது இல்லம்மானு சொல்லிச்சி, இளையது பேந்தப்பேந்த முளிச்சது, அப்ப நடுவுளது சொல்லிச்சி அம்மா இந்தப் புள்ளதான் பாய்க்குப் போடுற சாயத்தை கொழம்புல போட்டுருச்சு, அதுதான் கொழம்பு நெறம் மாறிப்போச்சுனு சொல்ல வந்த கோவத்துல கடைசிப்புள்ளயப் போட்டு அடி நிமித்திப்புட்டா.

ஏண்டிவம்பாடுபாட்டுகுறுக்கஒடிச்சி நீங்க கேட்டிகளேன்னு கறிக்கொழம்பு வைச்சா இப்புடிப் பண்ணீட் டீங்களேன்னு ஒரு பக்கம் அழுக ஒரு பக்கம் கோவம் வர வெறிபுடிச்ச மாதிரி ஆயிட்டா, பிள்ளைக வெறுஞ்சோத்த எப்புடி திங்கி றதுன்னு தலையில கைவைச்சி ஒக்காந்துட்டா,

அழுக வந்து கண்ணுல மாலை மாலையா ஊத்துது பிள்ளக வந்து அழுகா தம்மா நாங்க தண்ணிய ஊத்தி கஞ்சியா சோத்த சாப்புட்டுக் கிறோம்னு சமாதானம் சொல்லிச்சுக. ஆனாலும் சமாதானம் ஆகாம அழுதுக்கிட்டே இருந்தா.

அப்ப பாத்திமா வீட்டுக்குள்ளவந்தா இவ அழுதுகிட்டு இருக்குறதப்பாத்து மச்சி என்னாச்சு ஏன் அழுகிறன்னு விசாரிச்சா. இவ வெவரத்தைச் சொன்னதும் அவளுக்கே ஒரு மாதிரி ஆயிப்போச்சு. இப்புடியா பண்ணுங் கன்னு அது வெசமாயிடுமே மொதல்ல அதை குழியத்தோண்டி உள்ளாற போட்டுமண்ணாலமூடுங்கமச்சிகோழிநாய் திண்ணாலும் வெசமாயிடும் அந்தப்பாவம் நமக்கு வேணாம்,னு சொல்லிட்டு கொஞ்சம் இருங்க நான் வீட்டுக்குப்போய்ட்டு வாறேன்னு சொல்லிட்டுப் போய் திரும்பி வந்தா

திரும்பி வந்த அவ கையில ரெண்டு பாத்திரங்க இருந்துச்சு. அப்ப சொன்னா அவ மச்சி இதுல பிரியாணியும் கறியும் இருக்கு விசேசக்காரவுக கொண்டாந்து எங்களுக்குக் குடுத்தாக, பிள்ளைகளுக்குக் குடுங்க பாவம் ஏமாந்து போயிருங்க. எங்க வீட்டுல அடிக்கடி பிரியாணி கொண்டாந்து குடுப்பாக சொந்தக் காரவுக, அது நாங்க எப்பையும் சாப்புடுறது தான் இன்னிக்கி நீங்க சாப்புடுங்க நு குடுத்தா

அப்பஇவ"இதஇங்ககுடுத்தாஉங்க சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவீகன்னு"

கேக்கவும் அவ சொன்னா ஒளை வைச்சிட்டு வந்துருக்கேன் அவர்வர லேட்டாகும் போய் அரிசிபோட்டா ரெடியாயிடும் ரசம் வைச்சி சமாளிச்சிடுவேன்னா

அப்ப இவ சொன்னா "ரொம்ப சந்தோசம் அத்தாச்சி நீங்க தப்பா நெனைக்கலைன்னா இங்க ஏற்கன்வே வடிச்ச சோறு இருக்கு அத எடுத்திட்டுப் போகலாம்ல" சொன்னவன்ன பாத்திமா சொன்னா தாராளமா "எடுத்திட்டுப் போறேன். குடுங்க"ன்னா.

இவ பிரியாணிய எடுத்துவைச்சிட்டு வடிச்சசோத்த போட்டுக் குடுத்தா பாத்தி ரங்கள்ல, அப்ப பாத்திமா சொன்னா கொஞ்சமாக்குடு மச்சி மீதி ராத்திரிக்கி நீங்க சாப்புடலாம்ல எங்க வீட்டுல ராத்திரி சப்பாத்திதான் இங்க இருந்தாலும் நீங்க சாப்புடுவீங்கன்னு சொல்லிட்டு கொஞ்சமா எடுத்துக்கிட்டுக் கௌம்புனா

அப்பபாத்திமாசொன்னாஎங்களுக்குப் பிள்ளக இல்ல இவளுகளப்பாத்தா எனக்கே ஒரு ஆறுதல் அதுகதான் ஒங்களுக்கு சொத்து எல்லாம் குடுத்த அல்லா எங்களுக்கு அந்த பாக்கியத்தைக் குடுக்கல என்ன பண்ணன்னு கண்ணத்தொடைச்சிக்கிட்டா. அது பாத்து இவளுக்கும் கண்ணு கலங்குச்சு எல்லாம் நல்ல படியா நடக்கும் சீக்கிரமே ஒங்க வீட்டுலயும் கொழந்த சத்தம் கேக்கும்னு சொல்லும்போது அந்த ஊர் மசூதில பாங்கு ஒலிக்கிற சத்தம் கேட்டுச்சு கண்ணத்தொடச்சிக்கிட்டுப்போனா பாத்திமா,

அதேநேரத்துல அவ குடுத்த பிரியாணிய எடுத்து பிள்ளைகளுக்கு தட்டுல போடப்போன அவளுக்கு கண்ணு மங்கலாத் தெரிஞ்சதுக்குக் காரணம் கண்ணுல நெறஞ்சி நின்ன கண்ணீர்தான், தொடைச்சிட்டு பிள்ளைகளைச் சாப்புடச் சொன்னா இவ. அந்த பிரியாணில என்ன என்னமோ தெரிஞ்சிச்சி அவளுக்கு பிள்ளைகளோட மொகத்துல வந்த சந்தோசத்துல பாத்திமாவோட மொகம் தெரிஞ்சது. ■

---



# நிழலும் நிஜமும்

ஒவ்வொரு புது செயல்களும் பிரசவிக்கிறது புது அனுபவங்களை..
ஒவ்வொரு அனுபவமும் பெற்றிருக்கிறது புது அணுகுமுறைகளை..
மனமும் செயலும் இணைந்து தானே ஓர் விடயத்தை தீர்மானிக்கிறது..
நிஜங்கள் என்பது வேறு நிழல்கள் என்பது வேறு..
ஒவ்வொரு நிஜங்களும் நிழல்களை பெற்றுவிடும்..
நிழல்கள் ஒவ்வொன்றும் நிஜங்களாவது சாத்தியமில்லாதது..
உண்மையில் நிழல்களும் நிஜமாக வேண்டுமானால்..
நித்தமும் நிஜங்கள் நிரந்தரமாகவே வேண்டும்..
எதிலும் இங்கு நிழல்களுக்கோ வலிப்பதில்லை..
எங்கும் எல்லாவற்றையுமே நிஜங்களுமோ மறைப்பதில்லை..
நிழலும் நிஜங்களுமே வாழ்வியல் உண்மை..
நிழலேது நிஜமேது என்றுணர்ந்து நமது வாழ்க்கையும்..
அழகாய் நகர்ந்தால் வாழ்க்கை வசமாகும் வாழ்வே வசந்தமாகும்..

வாழ்வியல் கவி **சா.நாகூர் பிச்சை**
திண்டுக்கல்

# என்னினிய தேவதையே...

## பரணி சுப சேகர்

களமாகும் இடமா நீ கருவிழியில் நுழைந்தாயே,
வளமாகும் வாலிப வடமாகி நெளிந்தாயே,
உளம்தேடும் கனவுள்ளே உயிரினிக்க வளர்ந்தவளே,
இளம்பருவத் தேர்நீயே.. இதயமலர் இழுக்கிறதே.

விதிப்பறவை விளையாட வித்தை நீ அறிவாயே,
சுதியிங்கு சொல்லாகி சுவை ராகம் இசைப்பாயே,
நதியோடும் அழகினிலே நங்கை நீ வரவாகி,
புதிதாகி வளம்காட்டும் புதிரில்லா பெண்மை நீயே.

முகிலாகும் மழைநீரே முளைவிட்டப் பேரழகே,
துகிலாடும் இடைக்கொடியில் துவளும் மனமினிதே,
அகிலோடு சந்தனமாய் அழகிங்கு ஊர்வலமாய்,
பகலென்ன இரவென்ன பார்வைக்கு நல்விருந்தே.

நிறமெல்லாம் நீ தானே நிலவொளியாய் உன்முகமே,
உறங்காத மனத்துள்ளே உன்னுருவம் வழிபாடே,
இறங்கி வரும் நீரிங்கே இளநீராய் பெருகியதால்,
உறவாகும் உயிர்ப்பினிலே உன்வரவு தெரிகிறதே.

முல்லைப்பூ புன்னகைக்க முழுமதி நீ கண்ணசைக்க,
எல்லையில்லாப் பேரழகாய் எழுந்த நல் இளமானே,
இல்லையோர் குறையென்று இதயமது இதழ் விரிக்க,
நல்மங்கை நாயகியே நின்வரவு நலமுடனே.

எண்ணப்பூ குளிர்ந்திருக்க எழுந்ததோர் எழிலுருவே
மண்ணிடை பிறந்தாயே..மங்கை நீ வளர்ந்தாயே,
புண்ணியப்பூ பூத்ததாலே பூத்திடும் பூக்களெல்லாம்,
கண்ணசைத்து விரிகிறதே.. காலடியில் அர்ச்சனையோ.

இளையமன இளங்கனவில் இனிதான உறவா நீ,
முளையாகும் மனக்கனவில் முன்னிற்கும் மதியா நீ,
விளைந்த நல்லழகுடனே விசையூட்டும் வித்தகியே,
களையெடுத்த வரவாகி களிப்பூட்டும் நிசம் தானே.

தாமரைகள் விழிக்கிறதே தக்கதோர் விடியலிங்கே
நா மணக்கும் நற்கவியில் நல்லதோர் கற்பனையே
பா மணக்க பாவையுந்தன் பழரசப் பார்வையிலே,
தேமதுரத் தேடலெனத் தேடிவந்தேன் உன்னை நானே.

எழுந்த நல் அருவியிங்கு எதிர்வந்து களமாட,
விழுந்தது வீழ்ச்சியென வித்தகர்கள் சொல்லாட,
தொழுத நல் உள்ளத்துள் தோழமைத் துளிராட,
செழுந்தளிர் அழகிங்கே சேர்ந்தாட உடன்பாடே.

சூடியதோர் அன்பினிலே சுகவிழி நீ விரிக்க,
ஆடியதோர் பாதங்கள் அழகு நற் பூக்கள் தானே
தேடியதோர் வரவென்று தேவதையும் புன்னகைக்க,
பாடியதோர் பாட்டுக்குள் பாவை நீ குடியிருப்பே.

மதி வளர் முகத்தழகி மா மதுரை பூச்சூடி,
விதி வளர் தடத்திலே வியப்பாகி நிற்பவளே
ரதியென ஒளிர்பவளே.. ரம்பையும் நீ தானே
எதிலும் உன் நினைவே எந்நாளும் தொடர்கிறதே.

மின்னும் பவளக்கொடி மிகமகிழ் ஊர்வலமோ
பின்னும் மனத்தடாகப் பெருமையாய் முகவரியோ?
என்னில் உயிராக எழுந்ததோர் நல் வரவாக,
என்றும் துணையாகும் என்னினிய உயிர்ப்பூவே..

# விதியே அழுகிறதே

**– உஷா ராம்**

அந்த நீதிமன்ற வளாகமே நிரம்பி வழிந்தது. வந்திருந்த பார்வையாளர்களின் பேச்சுக்குரல்கள் நீதி மன்றத்திற்குள் எட்டி விடும் போக்கில் இருந்ததால் அதன் கதவுகள் அடைக்கப்பட்டன.

நடன விற்பன்னன் நாடோடி கொலை வழக்கின் தீர்ப்பு நாளென்பதால் தீர்ப்பு என்ன என்பதை அறியும் ஆவலில் கூட்டம் சேர்ந்திருந்தது.

நாடோடியார்? அவன் கொலையாக என்ன காரணம் என்றெல்லாம் அறிந்த மக்களே அங்கே குழுமியிருந்தனர்.

நடனப்பள்ளி நடத்தி வெற்றிகரமாக நிறைய நடனமணிகளை உருவாக்கியவன் என்ற நல்ல பெயருண்டு நாடோடிக்கு. பெயர் தான் நாடோடி. பணத்திற்குப் பஞ்சமில்லை

திருமணம் செய்து கொள்ளாமல் நடனத்திற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட நாடோடி பல விருதுகள் பல நிலைகளிலும் பெற்றவன். வயது 35 ஆகும்போது அவனிடம் நடனம் கற்க வந்த இளம்பெண் சந்திரிகாவினால் அவன் போக்கு திசைமாறத் தொடங்கியது.

சந்திரிகா பெண்களே பொறாமைப் படும் அளவில் அழகியாயிருந்தாள். அங்கங்கள் கைதேர்ந்த சிற்பி செதுக்கியது போல் கட்டுக்கோப்பாக, முற்றும் துறந்த முனிவரையும் (இப்போதுள்ள பாலியல் சாமியார்களில்லை) கவர்ந்திழுப்பதாய் இருந்தன.

நாம் நாடோடியைப் பற்றி வர்ணிக்க வில்லையே, காலத்தின் கோலம். பெண்ணுக்கு முன்னுரிமை, நாடோடி உடற் பயிற்சி செய்து உடலைக் கட்டுக் கோப்பாக வைத்திருந்தான். அவன் மனதில் சந்திரிகா வரும் வரை எந்தப் பெண்ணும் இல்லை. அவன் அதைப் பற்றி சிந்திக்கவே இல்லை.

நீதிமன்றத்தில் ஆரவாரம் தொடங் கியது என்னவென்று பார்த்தால் நீதிபதி வந்துவிட்டார் என்கிற பரபரப்பு தான். அவர் மற்ற வழக்குகளைப் பார்க்கத் தொடங்கியிருக்கிறார். அதுவரை நாம் விட்ட கதையைத் தொடர்வோம்.

நடனப் பள்ளியில் படிக்கும் ராதிகா தான் சந்திரிகாவை பள்ளியில் சேர்க்க அழைத்து வந்தாள்.

சந்திரிகா, ‘‘சார் மாதிரி நல்ல மனிதர்களைப் பார்க்க முடியாது’’.

சந்திரிகா நாடோடியை ஏறிட்டுப் பார்த்தாள். ஆணழகன் தான். இப்படி யிருப்பவன் பெண்கள் ஆண்கள் நடனம்

படிக்கும் பள்ளியில் இருப்பவன் பெண்களைத் தொடாது இருப்பானா என்கிற சந்தேகம் அவள் மனதில் ஓடியது.

ராதிகா, நாடோடியிடம் சந்திரிகா வைப் பற்றியும் சொல்லிக் கொண்டி ருந்தாள். இவள் ஆண்களைப் பார்ப்பதையே தவிர்ப்பவள். நடனம் கற்க மட்டும் ஆசை. எல்லா வகை நடனங்களும் கற்க ஆசைப்படுவதாகச் சொன்னாள். நான் தான் உங்களைப் பற்றிச் சொன்னேன். என்ன ஆணா? என்று கேட்டு வேண்டாமென்றாள்.

இல்லையடி, அவர் பக்கா ஜெண்டில்மேன். நான் சொல்கிறேன், நீ தைரியமாக இங்கே நடனம் பயிலலாம் என்று சொல்லித்தான் அழைத்து வந்திருக்கிறேன் என்றாள்.

நாடோடியும் சந்திரிகாவைப் பார்த்தான். அவன் மனதில் முதன் முறை யாக பட்டாம்பூச்சி பறக்கத் தொடங்கியது. அவன் சட்டென்று தன் நிலை மாற்றி. சந்திரிகா உங்களுக்கு பரதம் தெரியுமா என்றான்.

சந்திரிகாவும் தன் நிலை உணர்ந்து சமாளித்து, கொஞ்சம் தெரியும் என்றா லும் முழுதாகக் கற்றுக் கொள்ள முயற்சிக்கிறேன் என்றாள்.

சரி இன்றே ஆரம்பிப்போம். உங்க ளுக்கு ஒவ்வொரு நடனமாகக் கற்றுத் தருகிறேன். அதற்கான டிரஸ் கோடுகள் இருக்கின்றன. உங்களுக்கு உங்கள் பிரண்டு ராதிகா உதவுவாள். என்று சொல்லியவன் தன் மற்ற வேலைகளைக் கவனிக்க அங்கிருந்து நகர்ந்தான்.

சந்திரிகா அங்கே நடனம் பயிலும் ஆண்களையும் பெண்களையும் ஒருமுறை மேலோட்டமாகப் பார்த்தாள். எல்லோ ருமே அவரவர் பயிற்சியை செய்து கொண்டிருந்தார்கள். யாரும் யாரிடமும் தேவையில்லாமல் பேசவில்லை. எல்லோ ருமே கட்டுடலுடன் தான் இருந்ததும் அவள் கவனத்திற்கு வந்தது.

சரி ராதிகா சொன்னது போலவே ஆசிரியர் ஜென்டில்மேனாகத்தான் தோன்றி னார். ராதிகாவுடன் சென்ற சந்திரிகா தனக்குரிய உடைகளை எடுத்துக் கொண்டு அணியும் இடம் சென்றாள்.

ராதிகா அவளிடம் வந்தாள். இன்று மதியம் எனது பாய் பிரண்டு அருண் இங்கே சேர வருகிறேன் என்றான். காலையில் நீ மாலையில் அவன். இன்று நான் இரண்டு பேரை மாணவர்களாக்குகிறேன். சொல்லிவிட்டு சிரித்தாள் அவள்

மாணவர்ளைச் சேர்த்தால் ஆசிரியர் உனக்கு கமிஷன் ஏதும் தருகிறாரா என்ன? விளையாட்டாகக் கேட்டாள் சந்திரிகா. சேர்த்து விடும் மாணவர்களின் முதல் மாதக் கட்டணத்தில் ஒரு சிறு தொகை தருவார் தான். ஆனால் நான் உங்கள் இருவரையும் அன்பளிப்புக்காகவா சேர்ப்பேன். நீ எனது உயிருக்கு உயிர்த் தோழி. அருண் என் பாய் பிரண்டு. எங்களி டையே ஒளிவு மறைவுப் பேச்சுகள் இருக்காது.

என்ன சொல்கிறாய்? நீங்கள் காதலர்களா?

சீச்சீ, தற்போது இருவருமே நண்பர் கள். அவன் என் பாய் பிரண்டு நான் அவனுடைய கேள் பிரண்டு என்பதோடு சரி. வேறு ஏதும் இல்லை. நீ ஏதும் தவறாகப் புரிந்து கொள்ளாதே

அப்போது அங்கு வந்த நாடோடி என்ன ராதிகா, தவறாக ஏதும் புரிந்து கொள்ளாதே என்று உன் பிரண்டிடம் சொல்லிக் கொண்டிருக்கிறாய். நீங்கள் இன்னும் வகுப்பை ஆரம்பிக்க வில்லையா? நீ தானே அவளுக்கு இன்று வகுப்பு எடுக்க வேண்டும்.

சார், நான் இப்போதே வகுப்பு எடுக்கிறேன். வா சந்திரிகா என்றவள் மடமட வென்று என்னென்ன செய்ய வேண்டும்

என்றும் எப்படியெல்லாம் ஸ்டெப் இட வேண்டும் என்றும் சொல்லிக் கொண்டிருக்க, சந்திரிகா அவள் செய்வதற்கு முன்பாகவே அவள் செய்வதை செய்து கொண்டிருந்தாள். ராதிகாவிற்கே ஆச்சரியமாயிருந்தது.

என்னடி, நீ எனக்கே சொல்லித் தருவாய் போலிருக்கிறதே

நான் கொஞ்ச நாள் இந்த ஆரம்பக் கட்ட வகுப்புகளைப் படித்திருக்கிறேன். நாங்கள் இதற்கு முன்பு இருந்த ஊரில் ஒரு பெண் ஆசிரியரிடம் கொஞ்ச நாள் நடனம் படித்தேன். அதனால் தான். நீ சொல்லும் ஸ்டெப்புகள் இட முடிந்தது. நீ இங்குள்ள முறைப்படி முறையாகச் எனக்குச் சொல்லிக் கொடு.

மீண்டும் வகுப்பு தொடர்ந்தது. இடையிடையே நாடோடியும் இவர்களின் வகுப்பையும் மற்றவர்கள் வகுப்பையும் மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

இரண்டு மணி நேர வகுப்பு முடிந்ததும். இருவரும் உடைமாற்றி முகம் கழுவி தங்கள் உடை அணிந்து அங்கே வந்தார்கள். ஞாபகம் வந்தவள் போல் சந்திரிகா ராதிகாவைப் பார்த்துக் கேட்டாள், ஏண்டி நம் ஆசிரியரின் பெயர் நாடோடி என்றிருக்கிறதே இதற்கான காரணம் என்ன-?

சந்திரிகா, உண்மையைச் சொல்வ தானால் எனக்கு இதுபற்றி தெரியாது. அவரிடம் இதைப் பற்றிக் கேட்க தைரியமில்லை.எனக்கு.

இது சாதாரணக் கேள்வி தானே. அவர் என்ன கோவித்துக் கொள்வாரா?

அப்போது அங்கு வந்த நாடோடி, யார் கோவித்துக் கொள்வார்களாம் ராதிகா

சார் உங்கள் பெயர் நாடோடி என்றிருக்கிறதே என்று இவள் என்னைக் கேட்டாள். எனக்குத் தெரியாது என்று



# தாலாட்டும் நினைவூஞ்சல்

நீங்காத உறவாக
நீண்டாளும் பொழுதாக
வேண்டாத வரமாக
விரும்பிய உயிராக
காதலின் வேராக
காவியக் கனவாக
ஆவியில் மேவிய
அழகிய நிலவாக
ஜீவிய உணர்வினில்
அன்பின் நினைவாக
கார்முகில் பொழியும்
அமுத மழையாக
அஞ்சனம் பூசிய
சந்தன முகமாக
நெஞ்சினில் மோதும்
நித்திய நினைவாக
பொழுதை கிளறும்
இனிய உணர்வாக
என்னில் வாழும்
கவிதை கருவே
உயிருள்ள வரையில்
உன்னை மறவேன்!

**- லீ.லியாகத்அலி.**

சொன்னேன்.

இதில் என்ன இருக்கிறது. நானே சொல்கிறேனே. எனது அப்பாவுக்கு ரயில் வேயில் வேலையிருந்தது. அப்போது அவர் இந்தியா முழுவதும் பதவி உயர்வு வரும்போதெல்லாம் மாற்றலாகிச் செல் வார். எங்கள் குடும்பமும் இடம் பெயரும். நான் படித்த பள்ளிகளே நிறைய.. அப்படிப் படித்த ஒரு பள்ளியில் ஒரு பையன் என்னிடம் கேட்டான். என்னடா நாடோடியாயிருக்கிறாயே. எப்போது தான் செட்டிலாவாய் என்று, அதுவரை என் பெயர் ராஜேஷ், என் மனதில் சட்டென்று ஒரு மாற்றம். ஏன் இதையே நாம் நம் பெயராக வைத்துக் கொள்ளக் கூடாது என்று.. ஆனால் எங்கள் வீட்டில் நல்ல பெயரை இப்படியா கெடுத்துக் கொள்வாய் என்று ஆளாளுக்குத் திட்டினார்கள். ஆனால் நான் பிடிவாதமாக இந்தப் பெயர்தான் வேண்டும் என்று சொல்லி அப்போதே பெயர் மாற்றம் செய்து கொண்டேன். இதுதான் கதை.

சார் நீங்கள் இவ்வளவு அதிகமாய்ப் பேசியதேயில்லையே. விரிவாக விளக்கம் சொன்னீர்களே.

எல்லோருக்கும் தோன்றும் சந்தேகம் தான். அதனால் தான் நீங்கள் கேட்டவுடன் விளக்கம் தந்தேன்.

அங்கு வந்த மற்ற மாணவர்களும் சாருடைய பெயரில் இவ்வளவு இருக்கிறதா என்று மெல்லச் சிரித்துக் கொண்டே நகர எல்லோரும் அவரவர் வீடு செல்லத் தொடங்கினர்.

வெளியே வந்த ராதிகா, ஆமாம் நீ போரூரில் இருந்து எப்படி வந்தாய் இங்கு..

நான் ஹீரோ ஹோண்டா ஸ்கூட்டியில் தான் வந்தேன். நீ.-?

நான் இங்கே விருகம்பாக்கம் தானே. நடந்தே செல்வேன்.

வாடி என்கூட நான் உன்னை டிராப் செய்கிறேன் என்ற சந்திரிகா அவளைப் பின்னால் இருத்தி அவள் வீட்டில் விட்டாள்.

மாலை வகுப்புக்கு வருகிறாயா சந்திரிகா?

இல்லை, நான் சில நாட்கள் கழித்து வருகிறேன். இன்று வர இயலாது. எங்க அம்மா நீ டான்ஸ் கத்துக்கவே வேண்டாம்னு சொன்னாங்க. நான் தான் காலையில் மட்டும்தானேம்மான்னு சொல்லி வந்தேன். அதனால் கொஞ்ச நாள் விட்டுப் பிடிப்போம். வரேன் ராதிகா என்றவள் ஸ்கூட்டியில் அமர்ந்து அங்கிருந்து சென்றுவிட்டாள்.

மாலை வகுப்புக்கு நாடோடி வருவதற்கு முன்பாகவே அருணை ராதிகா அழைத்து வந்திருந்தாள். இருவரும் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அங்கே வந்த நாடோடிக்கு இவர்கள் வகுப்பினுள் சிரித்துக் கொண்டிருந்தது பிடிக்க வில்லை. அவன் தன் பள்ளியில் சில விதிகள் கடைபிடிப்பவன். இது தெரிந்தும் ராதிகா இப்படி நடக்கிறாளே என்று அவன் இவர்களைப் பார்க்காதவன் மாதிரியே விருட்டென்று அவனுடைய கேபினுக்கு உள்ளே சென்று விட்டான்.

என்ன ராதிகா, உங்கள் ஆசிரியர் இப்படித்தான் இருப்பாரா? கொஞ்சம்கூட இங்கிதம் தெரியாமல், யார் என்ன என்று கூட கேட்காமல் உள்ளே சென்று விட்டாரே, ரொம்ப பந்தாப் பேர்வழியோ?

இல்லை அருண். இங்கே சிரித்துப் பேசுவது அவருக்குப் பிடிக்காது. அது விதி. வெளியில் நின்று பேசினால் தப்பில்லை. உள்ளே வந்து இப்படி நடந்து கொண்டிருக்கக்கூடாது. அந்தக் கோபமாயிருக்கும். நான் போய் மன்னிப்பு கேட்கிறேன்.

எதற்கு மன்னிப்பெல்லாம். இவர் தான் உலகத்திலேயே பெரிய டான்சரா? இவரைவிட்டால்வேறு ஆளேயில்லையா?

இல்லை அருண். தெரிநதோ தெரியாமலோ நீ சொன்னது சரி தான். இவர் நீ சொன்னது போல் உலகிலேயே பெரிய டான்சர் தான். அவ்வப்போது வெளி நாடுகளில் இவரை அழைத்து நிகழ்ச்சி நடத்துவார்கள். பயிற்சி சொல்லித்தரவும் அழைப்பார்கள். அவரைப் போல் ஆடுவது இங்கு யாருக்கும் முடியாது. அவ்வளவு வேகம்.

சரி சரி போதும் உங்கள் ஆசிரியர் புகழ் பாடல்

ஏன் இன்றிலிருந்து உங்களுக்கும் அவர் ஆசிரியர் தானே

நான் இன்னும் முடிவு செய்ய வில்லை.

அப்போது அங்கு வந்த நாடோடி, ராதிகா ஒரு புதிய நபரை நம் பள்ளிக்கு அழைத்து வந்திருக்கிறாய். நமது சட்ட திட்டங்களை நீயே மதிக்கவில்லை என்றால் அவர் எப்படி அதை அறிவார். உன்மீது தான் குற்றம். சாரி அருண், நீங்கள் உள்ளே வாருங்கள். என்று அழைத்த நாடோடி முன்னே செல்ல மூவரும் ஆபிஸ் அறைக்குச் சென்றார்கள்.

சிறிது மனம் மாறிய அருண், சார் நான் நாளையிலிருந்து வகுப்புக்கு வரலாமல்லவா என்றான்.

ஏன் இன்றே வேண்டாமா

சார் நீங்கள் சொன்னால் சரிதான் என்று உள்ளே புகுந்தாள் ராதிகா.

அருண் நீங்கள் டான்சில் எதுவரை படித்திருக்கிறீர்கள்.?

சார் நான் முதலிலிருந்தே கற்றுக்

# திருப்தியில்...

மாரியம்மன் திருவிழாவை
கொண்டாடி விட்டு
ஓய்வெடுக்கப் போய்விட்டார்கள்
களைப்படைந்த மக்கள்.

வீதிதோறும்
தேங்காய் சில்லுகள்
சிதறிக் கிடக்கின்றன.
அன்னதான தட்டுகளும்
நெகிழி குவளைகளும்
மது போத்தல்களும்
கழிவு நீர் கால்வாய்களை
அடைத்துக் கொண்டிருக்கின்றன.

போதாத குறைக்கு
ஊரெங்கும் பரவி இருக்கிறது
ஊசிப்போன உணவுகளின்
துர்நாற்றங்கள்.

மறுநாளில்
வழக்கத்தை விட
அதிகமான வேலைச் சுமையை
பொருட்படுத்தாமல்
எல்லா குப்பைகளையும்
அப்புறப்படுத்துகிறான்
துப்புரவு தொழிலாளி.

உண்மையான
தெய்வ காரியத்தைத்
தரிசித்துவிட்ட திருப்தியில்
நிம்மதியாக உறங்கப் போகிறாள்
மாரியம்மாள்.

**- தி.கலையரசி**

கொள்கிறேன். உங்கள் முறையிலேயே வர முயற்சிக்கிறேன். நான் நாளையிலிருந்தே வருகிறேன். இப்போது போய் நாளை வருகிறேன் சார். என்றவன் ராதிகாவிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினான்.

ராதிகா உனது பிரண்டு எப்படி?

நல்லவன் தான் சார். நீங்கள் அவனைப் பார்க்காததுபோல் சென்றது அவனுக்கு அப்போது பிடிக்கவில்லை. பிறகு நான் சொன்னேன் காரணத்தை. இப்போது நீங்கள் வந்து கூப்பிட்டுச் சென்றபோது அவன் கோபம் சரியாகி விட்டது. நாளையிலிருந்து சந்திரிகா வுக்கும் அருணுக்கும் ஒன்றாகக் கிளாஸ் ஆரம்பிக்கலாமே சார்

வேண்டாம் வேண்டாம். தனித்தனி யாகவே இருக்கட்டும். நான் சொல்வதில் சில காரணங்களிருக்கிறது. உனக்கும் அதுவே சரி. என்றவன் அடுத்த வேலை களைக் கவனிக்கச் சென்று விட்டான்.

ராதிகா உன் பிரண்டு ஏன் உடனே போய்விட்டார். கிளாசுக்கு வரலையாமா? என்றான் சரவணன்

நாளையிலிருந்து வருகிறேன் என்று தான் போகிறான், இன்று இரவு அவனுடைய அப்பா ஜெர்மனியிலிருந்து வருகிறார். அது தான் சரவணன் வேறில்லை.

நீங்கள் காதலிக்கிறீர்களா?

சரவணன் ஆண் நண்பன் இருக்கக் கூடாதா? ஏன் காதல் என்கிறீர்கள்?

முதலில் நட்பில் ஆரம்பித்து பிறகு காதலில்தான் நட்புகள் முடிகின்றன .அதனால் தான் கேட்டேன் தவறாக எடுத்துக் கொள்ளாதே ராதிகா

அருணின் வீட்டில் அவன் அம்மா, ஏண்டா அருண். அப்பா இன்று வருகிறார் என்று தெரிந்தும் நீ வெளியில் சுற்றப் போய்விட்டாயே, என்ன பிள்ளையப்பா நீ

அம்மா, நான் டான்ஸ் கிளாசில் சேரத்தான் சென்றேன். சுற்ற அல்ல. அதுவும் அப்பா வருவதற்குள் வந்து விட்டேனே

டேய் அவர் வந்து அரை மணி நேரமாகிறது.

என்னம்மா சொல்கிறீர்கள்? ப்ளைட் டைம் மாற்றிவிட்டார்களா?

இல்லை அவர் இதற்கு முந்தைய ப்ளைட்டிலேயே வந்து உன்னைக் காணாமல் ஓலா பிடித்து வந்து விட்டார். அவர் உன்னைக் குற்றம் ஒன்றும் சொல்ல வில்லை. திடீரென்று அவர் ப்ளைட் மாற்றியதால் வந்தது தானே இது.

என்னப்பா இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் வந்து இறங்கி விட்டீர்களே. நான் கார் எடுத்து வந்திருப்பேனே

உன் அப்பா இதையெல்லாம் கடந்து வந்தவர். எதையும் சமாளிக்கத் தெரிந்தவர்தான். அதுபோகட்டும் எங்கே போயிருந்தாய்?

நான் டான்ஸ் கிளாசில் சேர்வதற்குச் சென்றேன். உங்கள் ப்ளைட் டைமுக்குள் வருவதற்காக இன்று கிளாஸ் வேண்டாம், நாளையிலிருந்து வருகிறேன் என்று சொல்லிவிட்டு வேகவேமாக வந்தால் நீங்கள் முன்பே வந்து விட்டிருக்கிறீர்கள்.

சரி வாருங்கள் அப்பாவும் மகனும். சாப்பிடுவோம் என்றழைத்து டைனிங் ரூமுக்குச் சென்றாள் அருணின் அம்மா கோமதி. அருணின் அப்பாவின் பெயர் சோமசுந்தரம். அவர் சென்னையிலேயே பெரிய தொழிலதிபர். என்றாலும் பழை யதை மறக்காதவர். ஏழ்மை நிலையி லிருந்து படிப்படியாக முன்னேறி இன்று மிக நல்ல நிலையிலிருக்கிறார். அவர் அவ்வப்போது பிசினஸ் விஷயமாக வெளி

நாட்டிற்கெல்லாம் சென்று வருபவர்.

காலை 10 மணிக்கு போரூரில் ஸ்கூட்டியில் புறப்பட்ட சந்திரிகா பத்தரை மணிக்கெல்லாம் டான்ஸ் கிளாசுக்குப் போகணுமே என்று வேகவேகமாக வந்து கொண்டிருந்தாள். டிராபிக் அதிகம் இருந்த பீக் அவர். முன்னால் ஒரு கார் வழி தராமல் மெதுவாகச் சென்று கொண்டிருந்தது. அவளும் எப்படியாவது இடைவெளி கிடைத்தால் அதை முந்திச் செல்லலாமே என முயற்சி செய்தாள். என்னாயிற்று என்று தெரியாமல் அந்த வண்டியில் மோதியதில் அந்தக் காரின் மீதே மோதி வண்டி கீழே விழ அவள் சமாளித்து எழுந்தாள். கோபத்துடன் காரின் டிரைவரைத் திட்ட முன்னாள் சென்றாள். அதற்குள் காரினுள் இருந்தவனும் சட்டென்று வெளியில் வந்தான். இருவரும் சண்டையிட வந்தவர்கள் முட்டிக் கொண்டார்கள். அவள் தான் சுதாரித்து கார் ஓட்டத் தெரியலைன்னா ஏன் காரை எடுத்துக் கொண்டு ரோட்டில் வருகிறீர்கள். சடன் பிரேக் போடலாமா? என்று கத்தினாள். அவனும் வண்டியை காரில் மோதிவிட்டு நீங்கள் சண்டைக்கு வருகிறீர்களா? ஒருவர் ெஹல்மெட் போட்டிருந்ததாலும் மற்றவர் மாஸ்க் போட்டிருந்த்தாலும் இருவருக்கும் அடுத்தவர் முகம் தெரியவில்லை. அங்கு நின்றிருந்த பெரியவர் ஒருவர் இருவரையும் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார்.

டான்ஸ் கிளாசுக்குப் போவதற்காக வாசலில் நின்றவள் அங்கே சற்று முன்னர் அவள் இடிபட்ட கார் நிற்பதைப் பார்த்தாள். கோபம் தலைக்கேறியது. ஆசிரியரின் வண்டி என்று நினைத்து உள்ளே சென்றாள். ஆசிரியர் உள்ளே உட்கார்ந்திருப்பதும் அவருக்கு முன்னால் ஒரு புதியவன் முதுகு காட்டி அமர்ந்திருப்பதும் தெரிய சற்றே நின்றாள்.

சார் நான் சரியான நேரத்திற்கு வந்திருப்பேன். ஒரு சண்டைக்காரப் பெண் என் காரின் மீது தன் ஸ்கூட்டியால் இடித்ததும் அல்லாமல் என்னிடம் சண்டைக்கும் வந்தாள். ராங்கிக்காரி போலும் என்னைக் கார் ஓட்டத் தெரியமா என்கிறாள். அவள் இப்போது தான் ஸ்கூட்டியே வாங்கியிருப்பாள் போலும். நான் வசதியானவன். இந்த மாதிரி கழிசடைகளிடமெல்லாம் திட்டு வாங்க வேண்டியதாகி விட்டது சார் என்றார்.

இந்தமாதிரி வார்த்தைகளை பயன் படுத்தாதீர்கள் அருண். அவர்களும் மனிதர் கள் தானே.

ஆமாம் ஆமாம் மனிதர்கள் தான். குரங்குகள்.

வண்டியை நான் சரி செய்து தருகிறேன் என்றான் நாடோடி.

இதையெல்லாம் கேட்ட சந்திரிகா வுக்கு அருண்மீது சொல்லவொண்ணாக் கோபம் வந்தது. அதே நேரம் ஆசிரியர் தான் யார் என்றறியாமலே தனக்காக வக்காலத்து வாங்கிப் பேசியதும் அவரு டைய மனிதநேயமும் தெரிந்தது. அவள் வெகுவேகமாக உள்ளே வந்தவள் அருணைப் பார்த்து யாரைக் கழிசடை என்றீர்கள். நீங்கள் வசதியானவர் என்று நீங்களே சொல்லிக் கொண்டீர்கள். நான் கழிசடை என்றீர்களே, நீங்கள் தான் கழிசடையிலும் கழிசடை .என்றவள் எதிரே ஆசிரியர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் சாரி சார் என்று அங்கிருந்து நகர்ந்தாள்.

சாரி சார் என்று அருணும் ஆசிரியரிடம் சொல்லிவிட்டு கிளாசுக்குச் சென்று விட்டான்.

சந்திரிகாவின் தன்மான உணர்வும் யாரென்றாலும் எதிர்க்கலாம் என்ற தைரிய மும் நாடோடிக்கு பிடித்தது. அவளைப் பார்த்ததிலிருந்து அவள் முகமே எங்கும் காணப்படுவதாய்அவன்உணர்ந்தான். இந்த நிலை அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. சரி, இதை இத்தோடு விடடுவிடுவோம் என்று அவன் உறுதியானான்

கிளாஸ் முடிந்து ராதிகாவும் அருணும் வெளியே சென்று விட்டார்கள். சந்திரிகா புறப்பட்டுக் கொண்டிருந்தாள். அவள் நெற்றியில் ரத்தத் துளிகள் இருப்பதை அப்போது தான் பார்த்தான் நாடோடி. சந்திரிகா உன் முகத்தில் ரத்தத் துளிகள் இருக்கின்றன. அதைத்துடைத்துக் கொண்டு வெளியே செல்லுங்கள் என்று தன் புதிய கைக்குட்டையைக் கொடுத்தான். அவள் சந்தேகமாகப் பார்த்தும் பயப்படாதீர்கள். இதை நான் இன்னும் பயன் படுத்தவே இல்லை. என்றவன் அதை அவளிடம் கொடுத்தான்.

அவளும் நெற்றியை அங்கிருந்த கண்ணாடியில் பார்த்தபோதுதான் அது தெரிந்தது. இப்படியே வீட்டிற்குப் போனால் அம்மா திட்டும் திட்டிற்கு அளவிருக்காது எனப் பயந்து ஆசிரியர் சொல்படி அந்தக் கைக்குட்டையால் நெற்றியை நீர் விட்டுத் துடைத்தாள். பிறகு அந்தக் கைக்குட்டையை எங்கு வைப்பது என்று குழம்பினாள். இதைக் கண்ட நாடோடி அதை என்னிடம் கொடுங்கள். நீங்கள் வீட்டிற்குச் செல்லுங்கள் என்றான். அவன் சொன்னபடியே செய்த சந்திரிகா தன் ஸ்கூட்டியைக் கிளப்பி வீட்டிற்குப் புறப்பட்டாள்.

அங்கே நீதிமன்றத்தில் வாதி கோர்ட்டில் ஆஜராகாததாலும், சாட்சிகள் வர நேரமாகும் என்பதாலும் வழக்கு அடுத்த வாரம் இதே நாளுக்குத் தள்ளி வைக்கப்பட்டதாக நீதிபதி சொல்ல கோர்ட் கலைந்தது.

சந்திரிகா வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த போது வளசரவாக்கத்தில் ஒருகடையில் நின்று கொண்டிருந்த அருண் அவளை நோக்கி வந்தான். காலையில் நான் சொன்ன வார்த்தை தவறு தான். சாரி என்றான். சந்திரிகாவிற்கு அவனைப் பார்ப்பதற்கேப் பிடிக்கவில்லை என்பதால் அவள் அவனை சட்டை செய்யாமல் அங்கிருந்து நகர்ந்தாள். அங்கிருந்த அவன் நண்பர்கள் இதைப் பார்த்ததால் அருணுக்கு அவளின் நடத்தை கோபத்தை வரவழைக்க அவன் ஸ்கூட்டியைப் பிடித்து நிறுத்தினான். அவளுக்குக் கோபம் தலை உச்சிக்கு ஏறியது. மிஸ்டர் என்ன இப்படி நடந்து கொள்கிறீர்கள், கையை எடுங்கள். என்றாள்.

நான் சாரி சொல்கிறேன், நீங்கள் மதிக்காமல் செல்கிறீர்கள். அது என்ன நாகரிகமா?

சரி என்னைப் போகவிடுங்கள் எனச் சொல்லி அவள் ஸ்கூட்டியை நகர்த்திப் புறப்பட்டாள்.

அருண் மனதளவில் சற்றே நல்லவன் தான். பணக்காரன் என்பதால் அவனைச்சுற்றும்நண்பர்கள். இதுபோன்ற நேரத்தில் அவனைக் கிண்டல் பண்ணவும் கேலி பண்ணவும் தயங்குவதில்லை

என்னடா அருண் ஒரு பெண்ணை உன்னால் சமாளிக்க முடியவில்லையா. என்று சொல்லிச் சிரித்தார்கள். இது அவனுடைய தன்மானத்தைச் சுட்டெரித்தது. அவன் கோபத்துடன் வீட்டிற்குச் சென்றான்.

அடுத்த நாள் அவன் வெளியே வந்தபோது அவனுடைய நண்பர்களில் ஒருவன் சத்தீஷ், அருண் அவள் யாரடா, இவ்வளவு ராங்கி காட்டுகிறாளே. என்றான்

அவள் நான் படிக்கும் டான்ஸ் ஸ்கூலில் படிக்கிறாள்.

எங்கிருந்து வருகிறாள் என்று தெரியுமா?

தெரியாது நான் என் கேர்ள் பிரண்டிடம் கேட்டுச் சொல்கிறேன்.

விவரமாகக் கேட்டு வா என சத்தீஷ் சொல்ல மற்றவர்கள் அதை ஆமோதித்தார்கள்.

ராதிகாவிற்கு இந்த விஷயங்கள்

தெரியாது. சந்திரிகா அருணைப் பார்க்க நேரும் போதெல்லாம் வெறுப்பாகப் பார்ப்பதையும், அவன் வில்லத் தனமாய் அவளைப் பார்ப்பதையும் கண்டு அவளே சந்திரிகாவிடம் தனியாக இதைப் பற்றிக் கேட்க அவள் நடந்ததனைத்தையும் அவளிடம் சொன்னாள்.

இதைப்பற்றி அருணைக் கேட்பதில் பயன் ஒன்றும் இருக்காது என்று ராதிகா அவனிடம் இதைப்பற்றி ஒன்றும் கேட்கவில்லை. ஆனால் அவனே ஒரு நாள் அவளிடம் வந்து சந்திரிகா எங்கிருந்து வருகிறாள், அவள் குடும்பம் எப்படி என்றெல்லாம் கேட்டான்.

இதுவரை அருணைப் பற்றி தான் நினைத்திருந்த நல்லவன் என்கிற இமேஜ் ராதிகாவிடமிருந்து விடைபெற்றது என்றே சொல்ல வேண்டும். ஆனால் அவள் இதை அவனிடம் காட்டிக் கொள்ள வில்லை. சந்திரிகா போரூரிலிருந்து வருகிறாள். அவள் குடும்பம் பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது என்றே பொய்யும் சொன்னாள் அருணிடம்.

நாடோடிக்கும் சந்திரிகாவுக்குமான மௌனங்கள் அவர்களின் காதலை அவர்கள் அறியாமலே வளர்த்தது. நாடோடியின் மனிதநேய அன்பும். அவன் பெண்களை ஏறெடுத்துப் பாராததும், அதுவும் நடனம் போன்ற அதற்கான வாய்ப்புகள் இருக்கும் நிலையிலும் அவன் நல்லவனாகவே இருப்பதும் அவளை மிகவும் கவர்ந்தது. அவனுடைய கட்டுடல் அவனுடைய நன்னடத்தையின் சான்றாகவும் அவள் உணர்ந்தாள். நாடோடிக்கும் சந்திரிகாவின் அழகும் அவள் ஆண்களிடம் சென்று பேசாமல் நளினமாக நடந்து கொள்வதும், யாரிடமும் தன் தன்மானத்தை விட்டுக் கொடுக்காத தன்மையும் மிகவும் பிடித்தது.

ஆனாலும் இருவரும் தங்களின் ஈர்ப்பை மறைத்தே நடந்தார்கள்.

ராதிகாவிற்கே இது தெரியாமல் போனதிலிருந்தே இதை நாம் தெரிந்து கொள்ள முடியும். நாடோடிக்கு அவள்மீது ஒரு சாப்ட் கார்னர் உண்டு என்றுமட்டும் ராதிகா உணர்ந்தாள். சந்திரிகாவைப் பற்றி அவளுக்குத் தெரியவில்லை.

ஆனால் காலம் இப்படியே சென்று விடாதல்லவா. ஒருநாள் அவள் ஸ்கூலின் உள்ளே நுழையும் போது எதிரே எதேச்சையாக திடீரென்று வந்த நாடோடியின் மீது வேகமாக மோதிக் கொண்டதில் அவள் நிலை தடுமாறி அவன் மார்பில் சாய்ந்தாள். அரை நொடி தான் சமாளித்து எழுந்து கொண்டாள். என்றாலும் அந்த அரை நொடியே போதுமானதாய் இருந்தது மின்சாரம் பாய்ந்தது போன்றிருந்த்து அந்த இருவர் உடல்களிலும். அப்படியொரு உணர்வு இருவருக்குமே ஏற்பட்டது. சந்திரிகா வெட்கத்தில் சிவந்தாள். சாரி என்றாள். பரவாயில்லை உங்களுக்கு வலியிருக்கிறதா என அக்கறையாகக் கேட்கவும் செய்தான் நாடோடி. இதைப் பார்த்த இரண்டு கண்களில் வெப்பம் தகித்தது. அவை அருணுக்குச் சொந்தம் என்று சொல்லவும் வேண்டுமா என்ன?

அதற்கேற்றாற் போல் இந்த நிகழ்வு களை அருணிடமிருந்து கேட்ட அவன் நண்பன் சத்தீஷ் அவனை ஏற்றி விட்டான். என்னிடம் மட்டும் உன்னிடமிருக்கும் பணமும் அந்தஸ்தும் இருந்தால் அவளை இன்னேரம் தட்டித் தூக்கியிருப்பேன். மற்றவற்றையும் முடித்திருப்பேன். என்றான் அவன்.

இதைக் கேட்டதும் அருணுக்கும் கோபமும் ஆவேசமும் வந்தன. அவன் சத்தீஷிடம் கேட்டான் எப்படித் தட்டித் தூக்குவாயாம்.

அவள் குடும்பத்தைப் பற்றி தெரிந்து கொள்வேன். அதற்கேற்றாற் போல் அவளை எங்கே வைத்துத் தூக்குவது கடத்துவது எனத் தீர்மானிப்பேன்.

சரி அதைச் செய். கடத்தி என்னிடம் ஒப்படை. உனக்கு 2 லட்சம் ரூபாய் தருகிறேன். ஆனால் அவள்மீது உன் கைபடக் கூடாது. அதாவது அவளை இம்சை ஏதும்

செய்யக்கூடாது. அப்படியென்றால் தான் உனக்கு அந்தப் பணம் கிடைக்கும்.

அருண் உனக்காக இதை நான் செய்யமாட்டேனா? செய்கிறேன். என்று அவன் அங்கிருந்து நகர்ந்தான்.

சந்திரிகாநாடோடியிடம்அருணைப் பற்றிச் சொல்லவில்லை. ஆனால் ராதிகா அவனைப் பற்றி எல்லாவற்றையும் அவனிடம் சொல்லிவிட்டிருந்தாள்.

நாடோடி ராதிகாவிடம் அவளின் பாதுகாப்பைப் பற்றிச் சொல்லி அவளை நீ பார்த்துக் கொள். ஏதாவது உதவி தேவை என்றால் என்னைக் கூப்பிடு என்று சொன்னான்.

நீதிமன்றத்தில் இன்று நாடோடி கொலை வழக்கு நடக்கிறது. நாம் அங்கு செல்வோம்.

யாரோ முகம் தெரியாத இருவர் நாங்கள் தான் நாடோடியைக் கொன்றோம் என்று சொல்லிக் கைதாகியிருந்தார்கள்.

அவர்களைக் கோர்ட்டுக்கு கொண்டு வந்திருந்தார்கள். அவர்களை எதிர் வக்கீல் குடைந்து கொண்டிருப்பதாய் நடித்தார் என்றே சொல்ல வேண்டும். . யார் வாதி என்று பார்த்தால் அங்கே ராதிகா நின்று கொண்டிருந்தாள். அவள் தான் நாடோடியைக் கொன்றவன் அருண் தான் என்று வழக்கு தொடுத்திருந்தாள். அவள் என்ன பணக்காரியா இவ்வளவு பெரிய பணக்காரர்களை எதிர்த்து நிற்க என்று கோர்ட்டில் உள்ளவர்கள் பேசிக் கொண்டார்கள்.

வாதி வக்கீல் எழுந்தார். அவருக்கு 60 வயதிருக்கும். மிகவும் புகழ் பெற்ற லாயர். அந்த இருவரையும் 5 நிமிடங்கள் குறுக்கு விசாரணை செய்தார். அவர்கள் போலி என்று கோர்ட்டுக்குத் தெரிய வைத்தார். அதுமட்டுமல்லாமல் சத்தீஷ் தான் அவர்களை நியமித்தான் என்றும் சொல்லிவிட்டார்கள்.அவர்கள்.

சரி உங்கள் தரப்பைச் சொல்லுங்கள் கணேஷ் என்றார் நீதிபதி வாதி வக்கீலைப் பார்த்து. அருண் தான் கொன்றான் என்பதற்கு ஆதாரங்கள் உங்களிடம் இருக்கின்றனவா?

இருக்கிறது மைலார்டு. அதற்கு முன்பாக சில நிகழ்வுகளை இந்தக் கோர்ட்டிற்குச் சொல்ல நான் கடமைப் பட்டுள்ளேன்.

வாதிராதிகாவும்அருணின்கூட்டத்தால் தாக்கப்பட்டு மருத்துவ மனையில் இருக்கும் சந்திரிகாவும் உண்மையான தோழிகள்.இந்த அருண் ராதிகா வின் பிரண்டு.

நாடோடியின் நடனப் பள்ளியில் படித்த ராதிகாவின் சிபாரிசில் சந்திரிகா அந்தப் பள்ளியில் சேர்ந்தாள். அருணையும் நண்பன் என்பதால் அந்தப்பள்ளியில் சேர்த்து விட்டாள் ராதிகா.

நாடோடி. மொத்தத்தில் ஒரு டீட் டோட்டலர் அதாவது எந்தக் கெட்டப் பழக்கங்களும் இல்லாத நல்லவன். தெரியாமல் நடந்த ஒரு மோதலில்.அருண் மோசமான வார்த்தையை ப் படு கேவலமாக சந்திரிகாவைப் பார்த்துச் சொன்னான். அவள் தன்மானத்தை அது பாதித்ததால் அவள் அவனை கடிந்து கொண்டாள் அவனை அதற்காக வெறுக்கவும் செய்தாள். அதே நேரம் நாடோடியின் மனிதாபிமானம் அவனிடமிருக்கும் பல நல்ல குணங்கள் அவளை ஈர்த்தன. சந்திரிகா அழகில் எல்லா சாமுத்திரிகா லட்சணங்களும் உடைய ஒரு அழகி என்பதால் அருண் அவள் கோபப்பட்டும் அவளை விடாது அடைய ஆசை கொண்டான். அதற்குத் துணை போனவன் தான் இந்த சத்தீஷ். அருணின் நண்பன். அதைவிட அவன் பணம்மீது ஆசை கொண்டவன் என்றும் சொல்லலாம்.

இது என்ன இவர் கதை சொல்லு கிறார். வழக்கு என்னவோ அதைப் பற்றியல்லவா சொல்லவேண்டும். என்று ஆட்சேபித்தார் எதிர் வக்கீல்.

நீதிபதி அவர்களே நான் ஒரு சுருக்கம் சொன்னால் தான் மோட்டிவேஷன் சொல்லும்போது புரியும் என்பதற்குத் தான் இந்தப் பீடிகை. அதனால் என்னை தயவுசெய்து அனுமதியுங்கள் என்றார் வாதி வக்கீல்.

அப்ஜெக்ஷன் ஓவர் ரூல்டு. நீங்கள் உங்கள் தரப்பைச் சொல்லுங்கள் கணேஷ் என்றார் நீதிபதி. எதிர் வக்கீல் சோர்ந்த முகத்துடன் இருக்கையில் அமர்ந்தார்.

ராதிகாவை சாட்சியாக அழைக்கிறேன் என்றார் அவர் ராதிகா ராதிகா என மூன்று முறை டவாலி அழைக்க அவள் கூண்டில் ஏறினாள்.

நீ சந்திரிகாவின் தோழியா?

ஆம்.

நடந்தவைகளைச் சொல். பயப்படாமல் சொல். கோர்ட் பாதுகாப்புத் தரும். என்று ஊக்கினார். கணேஷ்

அவள் மெல்லிய குரலில் எல்லா நிகழ்வுகளையும் சொன்னாள். எல்லாவற்றுக்குமே நான் சாட்சியாக இருந்திருக்கிறேன். நான் அருணை பிரண்டாக நினைத்தேன். இன்னும் கொஞ்சம்கூட இருந்திருந்தால் காதலித்துக்கூட இருப்பேன். ஆனால் அவனுடைய நடத்தைகள் அவனுடைய தோழர்களின் அராஜகம் போன்றவைகளைப் பார்த்து சுதாரித்துக் கொண்டேன்.அருணின் வஞ்சகக் கண் சந்திரிகாவைச் சுற்றுவதைக் கண்டேன். நான் அதை நடன ஆசிரியர் நாடோடியிடம் சொன்னேன். அவர் என்னை சந்திரிகாவை விழிப்பாகப் பார்த்துக் கொள். ஏதாவது அவசரம் என்றால் என்னை அழைக்க மறக்காதே என்று சொன்னார். அதே போல் ஒரு நாள் நான் சந்திரிகாவைத் தேடி அவள் வீட்டிற்குச் சென்றேன். அன்று இங்கு நிற்கும் சத்தீஷ் கையில் ஒரு கைக்குட்டையில் ஏதோ நனைத்துக் கொண்டு அவர்கள் வீட்டிற்குள் செல்வதைப்பார்த்தேன். நானும்வேகவேகமாக அவனைத் தொடர்ந்து சென்றேன். ஆனால் அதற்குள் அவளை மயக்க மடைய வைத்த கைக்குட்டையுடன் சத்தீஷ் அவளைத் தூக்கிக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தான். அந்தத் தெருவின் கடைசியில் நின்று கொண்டிருந்த அருணின் கார் வரைச் செல்வதைப் பார்த்தேன். விபரீதம் என எனக்கு உரைத்தது. ஆனால் என்னால் அவனைத் தொடர முடியவில்லை.

அருணுடன் பழகிய போது அவன் என்னிடம் அவனுடைய ஓய்வு பங்களாவைப் பற்றியும் அது இருக்கும் இடம் பற்றியும் சொல்லியிருந்தான்.

உடனே நான் நாடோடிக்கு அலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த விஷயங்களைப் பற்றிக் கூறினேன். நீ அந்த பங்களாவுக்கு ஜாக்கிரதையாகப் போய்க் கொண்டிரு. நான் அங்கு வருகிறேன் என்று சொல்லி போனைக் கட் செய்தார். நாடோடி

பயம் ஒருபுறம் என்றாலும் அகப்பட்டிருப்பது என் உயிர்த் தோழி என்பதால் நான் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அந்த பங்களா போகும் வழியில் யாரும் என்னைப் பார்க்கிறார்களா எனப் பார்த்துக் கொண்டே சென்றேன். அதன் வாயிலை அடைவதற்கு அரை கிலோமீட்டர் தூரத்திலேயே அதன் கேட் என் கண்ணுக்குக் கிடைத்தது. ஒரு மரத்தின் பின் ஒளிந்து பார்த்தபோது அருணும் அவன் நண்பர்களும் சத்தீசுடன் சந்திரிகாவைத் தூக்கிச் செல்வதைப் பார்த்தேன். உடல் பதறியது. இதே நேரம் நாடோடி தன் காரில் வருவதையும் அதை எட்டாத தூரத்தில் நிறுத்திவிட்டு பங்களாவை நோக்கி ஓடுவதையும் கண்டேன். தைரியம் வர நானும் அவரைத் தொடர்ந்து ஓடினேன்.

பங்களாவின் கதவு சாத்தப்பட்டிருந்தது. நாடோடி தன்னிடமிருந்த ஏதோ ஒரு பொருளால் கதவைத் திறப்பதைப் பார்த்தேன். நானும் பின்னால் சென்றேன். அந்த அறை மிகப் பெரியதாய் இருந்தது. இருட்டாய் இருந்தது. அதைக் கடந்ததும் லைட் வெளிச்சம் வந்தது. அங்கே

சந்திரிகாவை அவர்கள் ஐவர் தொட்டுத் தூக்கிக் கொண்டிருந்தார்கள். சத்தீஷ் சொல்லிக் கொண்டிருந்தான் நம் முதலாளி அருண் தான் இவளின் சொந்தக்காரர். அவர் அனுபவிக்கட்டும். என்றான் அவன் ஏதோ பரிசளிப்பது போல் .

அவளைத் தூக்கும் சத்தீஷைப் பாய்ந்து அடித்தான் நாடோடி. திடீர்த் தாக்குதலில் திக்குமுக்காடி அவன் கீழே விழுந்தான். விழும்போது அவன் எதிலோ மோதிக் கொண்டான். அதனால் அவனால் எழுந்திருக்க முடியவில்லை. அதற்குள் மற்ற நால்வரும் அருணும் நாடோடியைத் தாக்கினார்கள். நாடோடி கட்டுமஸ்தான உடம்புக்காரன் என்பதால் அவன் இருவரை வேகமாய் வீழ்த்தினான். ஆனால் அதற்குள் அருண் அவன் கையில் வைத்திருந்த ரிவால்வாரால் அவனை விரைந்து சுட்டு விட்டான். இதை நான் என் கண்ணால் பார்த்தேன். சுட்டதும் நான் அலறிவிட்டேன். அந்த சத்தம் கேட்ட மூவரும் என்னைத் துரத்தினார்கள். நான் வேகமாய் மறைந்து ஓடித் தப்பித்தேன். இதுதான் நடந்தது. அருணைப் போல் ஒருத்தனை நான் சில நாள் நண்பனாய் வைத்திருந்தேனே என நினைக்கும்போது என்னை நானே வெறுக்கிறேன் என்றவள் துக்கத்தை அடக்க முடியாமல் அழத் தொடங்கினாள்.

எதிர் வக்கீல் கதை நன்றாகத்தானிருக்கிறது. நான் இவரைக் குறுக்கு விசாரணை செய்யலாமா யுவர் ஆனர்

செய்யுங்கள்.என்றார் நீதிபதி

நீங்கள் சொல்வதெல்லாம் ஜோடனைக் கதை என்கிறேன். என்ன சொல்கிறீர்கள்.

வக்கீல் ஐயா நீங்கள் சொல்வது தான் ஜோடனை நான் சொன்னது முழுவதும் நான் என் கண்ணால் பார்த்தவை.

ஏதோ ஒரு பொருளால் கதவை நாடோடி திறந்தார் என்கிறீர்களே அது என்னவென்று தெரியுமா?

பிறகு தெரிந்து கொண்டேன். அது ஒரு கொண்டை ஊசி.

எப்படித் தெரிந்து கொண்டீர்கள்.?

போலீஸ் விசாரணை கொலை நடந்த இடத்தில் நடந்து கொண்டிருந்த போது ஓடிச் சென்ற நான் சந்திரிகாஅங்கு என்ன நிலையிலிருக்கிறாள், அவளை மருத்துவ மனைக்கு கொண்டு சென்றார்களா என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள வந்தவள் அங்கு நடப்பதை மறைந்துபார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது ஒருகான்ஸ்டபிள் ஒருகொண்டையூசி கீழே கிடக்கிறதய்யா என்று இன்ஸ்பெக்டரிடம் காண்பித்துக் கொண்டிருந்தார். அப்போது தான் பார்த்தேன்.அது என் கொண்டையூசி. நான் தவறுதலாக நடனப் பள்ளியில் என் மேசைமீது வைத்திருந்தேன் என்பது ஞாபகம் வந்தது.

நீதிபதி அவர்களே வாதி வக்கீல் மட்டுமல்ல சாட்சி ராதிகாவும் கதை கதையாக எடுத்து விடுகிறார்கள். இதைக் கோர்ட்டார் அவர்கள் ஏற்காமல் கொலை வழக்குக்கு சம்பந்தமில்லாத அருண் அவர்களை இந்த வழக்கிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆமாம் சந்திரன் அருண் கொலை செய்யவில்லை. நீங்கள் கொண்டு வந்த கைதிகளும் கொலை செய்யவில்லை என்றால் யார் தான் கொலை செய்திருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள். என்று எதிர் வக்கீலை மடக்கினார் நீதிபதி.

கோர்ட்டிலிருந்தவர்களின் சிரிப்பொலி கோர்ட் சுவர்களில் மோதியது

அது காவலர்களின் பணி என்பது கனம் கோர்ட்டாருக்குத் தெரியும் என்பதால் இந்தக் கேள்வி தேவையில்லாதது என நான் நம்புகிறேன். எனவே குற்றம் சுமத்தப் பட்டுள்ள என் கட்சிக்காரர் அருணை அவரை இந்த வழக்கிலிருந்து விடுவிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். என்று சொன்ன எதிர் வக்கீல் நம்பிக்கையுடன் தன் இருக்கையில் அமர்ந்தார்.

வாதிவக்கீல்எழுந்தார். கனம்நீதிபதி அவர்களே நான் குற்றம் சாட்டப்பட்ட முதல் குற்றவாளி அருணைக்கூடக் குறுக்கு விசாரணை செய்ய விரும்பவில்லை. இரண்டாம் குற்றவாளி சத்தீஷை மட்டும் குறுக்கு விசாரணை செய்ய தயவுசெய்து அனுமதியுங்கள்

சரி பர்மிஷன் கிரேண்டட். செய்யுங்கள்.

எதிர் வக்கீல் இதை ஆட்சேபித்தார். வழக்கே முடிந்து விட்ட நிலையில் இவர் மறுபடியும் தொடர்வதை நான் ஆட்சேபிக்கிறேன்

ஆட்சேபனை நிராகரிக்கப் படுகிறது. நீங்கள் குறுக்கு விசாணை செய்யுங்கள்.

கோர்ட்டில் பயங்கர அமைதி நிலவியது. சத்தீஷ் கூண்டிற்கு கொண்டுவரப் பட்டான்.

உன் பெயர் என்ன?

சத்தீஷ் ஐயா

அருண் உனக்கு என்ன சொந்தமா?

இல்லை ஐயா, நண்பன்.

சந்திரிகாவைக் கடத்திக் கொண்டு வந்தால் அருண் உனக்குத் தருவதாகச் சொன்ன 2 லட்சம் வாங்கிக் கொண்டாயா?

இன்னும் இல்லை ஐயா, இல்லை இல்லை அப்படி எல்லாம் சொல்லவே இல்லை ஐயா

கோர்ட் கொல்லென்று சிரித்தது.

அந்த 2 லட்சம் உனக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று சொல்கிறேன் நான்.

ஆமாம் ஐயா. இல்லை இல்லை

மீண்டும் கோர்ட் சிரித்தது.

ஆமாம். உன் நெற்றியில் ஒரு காயம் இருக்கிறதே அது எப்படி நடந்தது. அருணின் பங்களாவிலா?

இல்லை ஐயா.

ஆணி குத்தியது போல் தெரிகிறதே

ஆமாம் ஐயா நான் சுவற்றில் ஆணி அடித்துக் கொண்டிருந்தேன் அப்போது ஸ்டூல் வழுக்கியதில் சுவற்றில்மோதி விழுந்தேன் அப்போது அங்கிருந்த ஆணியில் மோதியதில் ஆணி குத்திய காயம் இது

இந்த ஆணியா

இல்லை ஐயா

கனம் கோர்ட்டார் அவர்களே. ராதிகா சொன்னாளே, சத்தீஷ் எதன் மீதோ மோதிக் கொண்டு கீழே விழுந்தான் என்று அது இந்த ஆணியின் மீது தான். ஆணி கூராக இருந்ததால் அரை இன்ச் போல் நெற்றியில் இறங்கிவிட்டது.

எதிர் வக்கீல் இந்த ஆணியே இல்லை என்கிறோம். அரை இன்ச் இறங்கியது என்றெல்லாம் சொல்வது திசை திருப்பும் செயல்

அப்ஜெக்ஷன் ஓவர் ரூல்டு

இந்தக் காயத்திற்கு அனுமதிக்கப் பட்ட மருத்துவமனையின் ஒரு டாக்டரின் பிரிஸ்கிரிப்ஷன் இது. இதில் தெளிவாக அவர் தன் கைப்பட எழுதியிருக்கிறார் அரைஇன்ச்ஆழம்ஆணிபோய்இருக்கிறது என்று, அது மட்டுமல்ல இந்த ஆணியைப் பாருங்கள் இதில் ரத்தத் துளிகளும் சில முடித் துகள்களும் இருக்கின்றன.

ஆணி கோர்ட்டில் ஒப்படைக்கப் பட்டது.

இந்த வழக்கின் ஜட்ஜ்மென்ட் நாளை மறுநாள் அறிவிக்கப்படும். இப்போது கோர்ட் கலையலாம் என்று கூறிய நீதிபதி இருக்கையில் இருந்து எழுந்து சென்று விட்டார்.

அருண் அவருடைய அப்பாவைப் பார்ப்பதற்கே தயங்கினான், பயந்தான். அவர் உழைப்பில் முன்னேறி ஒழுக்கத்தில் சிறந்த பணக்காரார். அருண் தன்னைப் போல் அப்படியே வருவான் என்று கனவு கண்டவர். அதனால் தான் அவர் இந்த வழக்கில் தலையிடவேயில்லை. ஆனால் இப்போது வழக்கு அருணுக்கு தண்டனை வாங்கித் தரும் என்று நம்பும் நிலையிலிருப்பதால் அருணின் அம்மா அழுகையுடன் கணவனிடம் சென்று எப்படியாவது அருணைக் காப்பாற்றுங்கள். என்று கெஞ்சினாள்.

தப்பு செய்தவன் தண்டனை அனுபவிக்க வேண்டும். அவனுக்காக நான் தப்பு செய்ய மாட்டேன். நீ வேண்டுமானால் முயன்று பார். நான் இதில் தலையிட மாட்டேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்து விட்டார்.

கோமதியம்மா வாதி வக்கீலை அவர் வீட்டில் சென்று பார்த்து அவரிடம் கெஞ்சினாள்.

எதுவும் இனி என் கையில் இல்லை யம்மா. நீதிபதியிடம் தான் எல்லாம். நீங்கள் உங்கள் பையனை நல்லவனாக வளர்த்திருக்கணும். அப்படியில்லாத போது நீங்களும் குற்றவாளியே. அதற்கான தண்டனை தான் இது என்று சொல்லி விட்டு அவரும் எழுந்து விட்டார்.

கோமதியம்மாவும் தன் நிலை உணர்ந்து வீட்டிற்குச் சென்று விட்டார்.

அருண் அம்மாவிடம் வந்து முறையிட்டான். அம்மா இனி நான் நல்ல பிள்ளையாக நடந்து கொள்கிறேன். இப்போது எதாவது செய்து என்னைக் காப்பாற்றுங்கள்.

உன்னைப் பெற்றதற்கு நான் வருந்துகிறேன். என்றாலும் இப்போது இப்படியே இருக்கட்டும். அப்பீலில் தண்டனைக் குறைப்புக்கு வழி செய்ய முயற்சிக்கலாம். உனக்கும் தண்டனை வேண்டும் தான். அதன்மூலம் எனக்கும் தண்டனை தான். என்றவள் அழுகையை நிறுத்தவேயில்லை

அடுத்த2வது நாள்கோர்ட்டில்வழக்கின் முடிவு அறிவிக்கப்பட்டது. நீதிபதி தன் தீர்ப்பில் அருண்சொல்லிஅவன்நண்பன்சந்திரிகாவைக் கடத்தியதும் அருண் நாடோடியைச் சுட்டுக் கொன்றதும் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எனவே அவனுக்கு இரண்டு ஆயுள் தண்டனையும் சத்தீசுக்கு ஒரு ஆயுள் தண்டனையும் அவன் நண்பர்கள் மூவருக்கும் தலா 4 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் விதித்துத் தீர்ப்புக் கூறுகிறேன். அவர்கள் மேல் கோர்ட்டிற்குச் செல்வதா யிருந்தால் 15 நாட்களுக்குள் அப்பீல் செய்து கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது.

ஒரு நல்லவன் அநியாயமாக சாகடிக்கப்பட்டான். ஒரு அழகி மாற்றுத் திறனாளியாக்கப்பட்டாள்.என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொண்டால் கதை முடிந்து விடும்.



நஞ்சுக் கொடியுடன் துள்ளியோடும்
தாயாடு மறைந்த பின்னரும்
பாம்பின் சீற்றம் குறையவில்லை!

**- ச்ஜேஸூ,**
ஜெர்மனி

# மங்கான்

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

அவன் பெயர் ஒன்றும் மங்கான் அல்ல...ஆனா மங்ஹான்னு சொன்னாதான் எல்லாருக்கும் தெரியும் அவன் மூனாம் வகுப்போடு நின்றுவிட்ட பள்ளி சான்றிதழில் ஜெயபால் என்ற பெயர்தான் இருந்தது இப்போ குடும்ப அட்டையிலும் அந்தப்பெயர்தான் இருக்கிறது அவன் அப்பாவையும் தொப்பளான் என்றால்தான் எல்லோருக்கும் எளிதில் புரியும் தங்கவேல் என்றால் அது யாரப்பா புதுசா இருக்குன்னு கேட்பாங்க,,, அது போகட்டும் அவனை ஏன் எல்லாரும் மங்ஹான் சொல்றாங்கன்னா அவன் சின்ன வயசிலிருந்தே துருதுருன்னு இருக்கமாட்டான் ஒரு இடத்தில் உட்கார்ந்தால் மண்ணாங்கட்டி மாதிரி யாரோ ஒருவர் வந்து கூப்பிடாதவரை அங்கேதான் இருப்பான் அது மட்டுமல்ல அவனுக்கு காதில் சீழ் வடியும் அதனால் யாராவது ஏதாவது சொன்னால் ஆ,,ஆ,,ஆன்னு கேட்பான் பலமுறை சொன்னாத்தான் புரியும் எதைப்பற்றியும் கவலையும் இல்ல அக்கறையும் இல்ல... போனா போன இடம் வந்தா வந்த இடம் இப்படிதான் இருப்பான் எந்த ஒரு வேலவெட்டிக்கும் போகாமல் வெட்டியா இருப்பான் அதனால்தான் அவனை மங்கான் னு எல்லாரும் கூப்பிடுவாங்க அவன் அம்மாக்கூட என் புள்ளையை எதுக்கு பட்டப்பேர் வச்சி கூப்பிடுறீங்கன்னு ஒரு சிலருக்கிட்ட சண்டைக்கூட போட்டாங்க ஆனாலும் அது எடுபடல மங்ஹான் கல்வெட்டு மாதரி நிலச்சிடுச்சி ஒரு கட்டத்தில ரஜினி படம் பார்த்து பார்த்து அவனுக்கு ரஜினிமேல பற்று அதிகமாகி அவரைப்போலவே டான்ஸ் ஆடி பார்ப்பான் எல்லோரும் மங்கான்ன பாருங்கடா டான்ஸ் ஆடுறான்னு கிண்டல் பன்னுவாங்க... அப்படியே ரஜினி பைத்தியம் முத்திப்போயி ஒருநாள் அவன் வீட்டைவிட்டே ஓடிப்போய்ட்டான்

அவன் அப்பா தொப்பளான் அவனை தேடாத இடமில்ல... எங்கு தேடியும் கிடைக்கல புள்ள எங்கோ போய் செத்துப்போய்ட்டான்னு விட்டு விட்டார்கள் ஒரு நாலஞ்சு வருசம் கழிச்சு பக்கத்து ஊர்ல திருவிழா பாக்கப்போனவங்க வந்து சொன்னாங்க அவன் தஞ்சாவூர் கரகாட்ட குருப்ல சேர்ந்து ரஜினிமாதரி ரஜினி பாட்டுக்கு ரெக்கார்ட் டான்ஸ் ஆடுவதாக... அவன் அம்மா அப்பாவுக்கு ஒரே சந்தோசம் மகன் உயிரோட இருக்கான்னு ஆனாலும் இப்படி கூத்தாடியா ஆயிட்டானேன்னு வருத்தப்பட்டாங்க இவன் கல்யாணம் காச்சிப்பன்னி எப்படி நமக்கு கடைசிக்காலத்தில கஞ்சி ஊத்தப்போறான்னு,,,, ஒரு பத்திவருசம் கழிச்சி ஊருக்கு வந்தான் ஒரு பொண்ணோட... கல்யாணம் பன்னி பொண்டாட்டிய கூட்டியாந்தான்

இவன் ரஜினி பாட்டுக்கு டான்ஸ் ஆடி ஆடி இப்போ அவன் பெயர் மங்ஹான் என்பது மறைந்து ரஜினி என்றே அழைக்கப்பட்டான் ஒரு மனுசனுக்குள்ள கலை ஆர்வம் வந்தா அவனும் உற்சாகமாகிறான் பக்கத்தில் இருப்பவர்களையும் உற்சாகப்படுத்துகிறான் என்பது நிதர்சனம் ரஜினி என்ற பெயர் மோகத்தாலும் அவன் மேக்கப் போட்டு ஆடும் அழகாலும் ஒரு பெண் அவனை நேசிக்க... இவனும் நேசிக்ககல்யாணமாகி ஊருக்கு வந்தவன் பொண்டாட்டியை ஊருல விட்டு விட்டு மறுபடியும் தஞ்சாவூர் போய்ட்டான் ஆடிய காலும் பாடிய வாயும் சும்மா இருக்காதுன்னு சும்மாவா சொன்னாங்க என்பதுப்போல அவன் மீண்டும் ஆடுவதற்கு போய்ட்டான்

அந்த நேரத்தில்தான் அவனுக்கு ஒரு நல்லது நடந்தது அவன் பொண்டாட்டி மாசமா இருந்தது அந்த செய்தி அவன் காதுக்கு எட்டியதும் அவன் உடனே புறப்பட்டு ஊருக்கு வந்துவிட்டான் அதிலிருந்து அவன் டான்ஸ் ஆட போறதில்ல பொண்டாட்டி கூடவே இருந்தான் ஆனா பழையமாதரி வேலை வெட்டிக்குப்போகாமல் வீட்டிலையே கிடந்தான் பலரும் பலமாதரி சொன்னாங்க,,, ஒனக்கும் ஒரு குழந்தை பொறக்கப்போகுது ஏதாவது வேலைக்கு போனாதானே குழந்தைக்கும் நல்லது ஒன்ன நம்பி வந்தவளுக்கும் கஞ்சி ஊத்தமுடியுமுன்னு அவன் அதை காதிலு வாங்கினதா தெரியல வீட்டுக்குள்ளவே பெட்டைக்கோழி அடைக்காப்பதுப்போல முடங்கி கிடந்தான் நாளடைவில் சோத்துக்கே ரொம்ப கஷ்டமாப்போக அவன் பொண்டாட்டி கூலி வேலைக்கு போக வேண்டியதாகிவிட்டது அவன் அதைப்பற்றி பெரிசா கவலைப்பட்டதாக தெரியல அப்பவும் அவன் அசையாமல் வீட்டுக்குள்ளவேதான் இருந்தான் பத்தாவது மாசத்தில் அவனுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது அந்த குழந்தை நல்ல ஆரோக்கியமாக இருந்தது சுகப்பிரசவம்தான் அதனால் செலவு ஒன்னும் அதிகமில்ல அதனால அவன் தப்பிச்சான்

இப்படி நாட்கள் நகர... அவன் கொஞ்சிமகிழ்ந்த குழந்தை அவனைப்போல அல்லாமல் துரு துருவென இருந்தான் ஆனா... அவனுக்கு இவனைப்போலவே காது கேட்கல பேச்சும் வரல இது பேரிடியாய் அவனுக்குள் இறங்கியது மறுபடியும் அவன் பழைய மாதிரியே வெளியில் வந்து மண்ணாங்கட்டியா உட்கார்ந்தே இருந்தான் இப்போ ரஜினி பெயர் மறைந்து மீண்டும் மங்கான் என்றே அழைக்கப்பட்டான்

இந்த நேரத்தில் கஜா புயல் வந்து தெருவிலுள்ள கரண்ட் கம்பமெல்லாம் விழுந்து மரம் மட்டையெல்லாம் ஒன்னுவிடாம சுருட்டிக்கிட்டு போனது இரவு முழுவது ஒரே மழையும் காத்தும் பலம்கொண்ட மட்டும் வீசி தெருவிலுள்ள கூரை வீடுகளை எல்லாம் புடுங்கி போட்டது காத்து கொஞ்சம் பலம் குறைந்தப்போது பாவம் பச்சப்புள்ளக்காரி அவனும் ஒரு மண்ணாங்கட்டி மங்கான் என்ன செய்றாங்களோன்னு தெரியலியே ஏதாவது புயல் பாதுகாப்பு மையத்துக்கு கூட்டிட்டு போகலாமுன்னு ஒரு நாலஞ்சி பேர் வந்து பார்த்தாங்க... வீடு கூரையெல்லாம் காத்து புடுங்கி போட்டு வீட்டை திருப்பி போட்டிருந்து இடுப்பளவுக்கு வீட்டுக்குள் தண்ணீர் தேங்கி நின்றது அய்யோ மங்கான் குடும்பமே போச்சேன்னே உள்ளே போய் பார்த்தால் மங்கான் குடும்பத்தையே காணவில்லை என்னடா ஆச்சுன்னு எல்லாரும் வெளியே ஓடிவந்து பார்த்தா மங்கான் கோணி சாக்கை போர்த்திக்கிட்டு குழந்தையை தோளில் போட்டபடி பொண்டாட்டி கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு புயல் பாதுகாப்பு மையத்தை நோக்கி போய்க்கொண்டிருந்தான், ■

# ஒரு நா...



- கார்த்தி டாவின்சி

'என்னப்பா சோறு திண்ணுட்டியா.?' அப்பதான் திண்ணு முடிச்சிட்டு வந்த எலக்ட்ரிசியன் அண்ணா எங்கிட்ட கேட்டாரு.

' இல்லண்ணா.' காதோரம் இருந்த நரமுடியில சொரிஞ்சிக்கிட்டே நான் பதில் சொன்னதும் அவருக்கு மொகம் கேள்வி சுரணையா மாறிடிச்சி.

நான் வாச்சிமேனா வேலப் பாக்கும் கம்பனியில ஒயரிங் வேலைக்கி வந்த ஆளு அவரு. ஒரு வாரமா போவும்போதும் வரும்போதும் என்னப் பாத்து பாத்து பழக்கமாயிட்டாப்ல. வேல செஞ்சிட்டு மதியானம் சோறு திங்க எறங்கி வந்தவரு இப்படி கேட்டுக்கிட்டுதான் என்னான்ட வந்தாப்ல.

' ஏம்பா.?'

'ஒனரம்மா கெளம்புனப் பின்னதான் நமக்கு ஒணவு.' நான் சொன்னதக் கேட்டு ரெண்டு நொடி என்னயே பாத்துட்டு பக்கத்துல இருந்த பாரதிப் பயங்கிட்ட கேட்டாரு.

' இப்ப மணி என்னாவுது பாரதி.?'

'மூனு மணி.' பாரதிப்பய ஊசி பட்டாசாட்டம் பட்டுனு சொன்னான்.

'காலைல எட்டு மணிக்குதான வேலக்கி வருவ நீயி.?'

'ஆண்ணா.' உண்மைய ஒத்துக் கிட்டேன். நான் சொன்னதுமே கணக்கு போட்டாப்பிடி.

'ஏழு மணிக்கே காத்தால திண்ணுட்டு கெளம்பி வருவான் இங்க. அதுலேந்து இப்பவர எவ்ள நேரமாயிக்குதுனு பாரு.?' அவர் சொன்ன தும் அந்த பாரதிப்பய ஒடனே முசுவா கணக்கு போட்டு சொன்னான்.

'ஏழு மணி நேரமாவுது.'

'உனக்கு பசிச்சா திண்ண வேண்டிய துதான வாச்சி.'

'எதுக்குணா.? குத்தம் போடுற துக்கா.?'

'குத்தம் போடுவாங்களா.?'

‘பின்ன.?’

‘இதென்ன சின்னப்புள்ளத் தனமா இருக்கு.?’

‘ஆமான்ணா. மொதல் நாளு இப்படி தான் மதியம் ரெண்டு மணியாச்சே, சோறு திங்கலான்னு ஒக்காந்து டிப்பன் பாக்ச தொறந்தேன். அந்த நேரம்பாத்துதான் ஓனரம்மா வீட்டுக்கு போறதுக்கு எறங்கி வந்துட்டாங்க. இந்த வண்டி ஓட்டுறவருங்கூட ஒரு வார்த்த கேட்டத் தொறன்னு சொல்லாம கார சார்ட்டு பண்ணிக்கிட்டாரு. இதில மேனேஜர் வேற கீழ வந்துட்டாரு. நானும் இது தெரியாம ஒரு வாயி சோத்த வாயிலப் போட்டுக்கிட்டேன். வண்டி சத்தம் கேட்டு பின்னால பாத்தாக்கா நிக்கிறாங்க. மென்ன சோறு பாதி வாயிலயும் முழுங்குன சோறு மீதி தொண்டலயும் மாட்டிக்கிட, விட்டுட்டு எழுந்து ஓடுனேன், கேட்டத் தொறக்க. ஆனா அந்த மேனேஜருமில்ல தொறக்க ஓடியாறாரு. நான் நில்லுங்கனு கைக்காட்டிக்கிட்டே ஓடி தொறந்து விட்டேன். பேசவும் முடியில. சோத்த மெல்லவும் முடியல முழுங்கவும் முடியல. நாலு செகண்டுல என்னமோனு ஆயிடுச்சி.’

‘திண்ணுக்கிட்டிருந்தத வுட்டுட்டு எழுந்து ஓடுனியா.?’

‘பின்ன.?’

‘நீ சோறு திண்றத யாருமே பாக்கலயா.?’

‘பாக்கல. பாக்கவும் மாட்டாங்க.’

‘ஆமாமா.. அதெல்லாம் அவங்க எங்க பாக்கப் போறாங்க.! நமக்கு பசின்னா நாமதான் திண்ணாவனும். நானெல்லாம் டைமுன்னா டைமுதான். சாப்பாடு ஆனப் பின்னதான் வேல. சரியா ஒன்ர மணிக்கு வேலைய முடிச்சிட்டு சாப்பிடப் போவோம். இல்லன்னா நம்ம வேலைய தெம்பில்லாம செய்ய முடியாது. நாமெல்லாம் ஒழக்கிறதே இந்த சோறுக்குதான். அதையும் திங்குறப்ப எழுப்புறதெல்லாம்..’

அவரு பாட்டா சொல்லிக்கிட்டே யிருக்கஎனக்கவயிறுகூவஆரம்பிச்சிருச்சி. கூவல் சத்தம் எனக்கு மட்டுந்தான் கேட்டுதோ இல்ல இவங்களக்கும் கேட்டுதோ தெரியல. ஆனா இவரு பேசுறத இன்னும் நிறுத்தல.

‘ஒரு நா இப்படிதான் எனக்கும் ஒரு பில்டிங் சூப்பர்வேசருக்கும் வாதமா யிறுச்சி. பொழுதினிக்கும் சுத்தி உளியப் புடிச்சி காடி எடுக்குறம். வெயிலான வெயிலு.வேர்வயாஊத்துது.பொழுதுக்கும் வேல செஞ்சிட்டு லேட்டா சோறு திங்க ஒக்காரும் அந்த நேரம்பாத்து எஞ்சினியர் வந்துட்டாருன்னு அந்த சூப்பர்வேசருப் பய யாரும் சாப்புடாதிங்கனு சொல் லிட்டான். சரி, கொஞ்ச நேரம் பாத்துட்டு போயிறுவாங்கனு நாங்கலும் திங்கிறத வுட்டுட்டு நிக்கிறம் நிக்கிறம் மணி நாலாயிடுச்சி. மதியான சோத்த சாயங் காலத்துல திண்ணோம். சரி இதோட முடிஞ்சதா.?’ நான் கேக்குறனா இல்லை யானு ஒரு எட்டு என்ன பாத்துக்கிட்டாரு.

‘மேல என்னாச்சி.?’

‘நாங்க திங்கற நேரத்துல எஞ்சினீரு வந்து நின்னுட்டு, அவர் வர்ற நேரம்பாத்து நாங்க திங்க ஒக்காந்துட்டமா.? எஞ்சினீரு போனப்பின்ன வந்து இனிமே மதியான சோறெல்லாம் நாலு மணிக்கிதான் திங்க னும்னு சொன்னாம்பாரு. எனக்கா கோவம்மேல கோவம். சோத்த கெடுத்தது மில்லாத வேலையையும் கெடுத்துட்டான் இந்த சூப்பர்வேசரு. அதனால புடிச்சேன் ஒரு புடி’

‘என்ன பண்ணிங்க.?’

‘நாமல்லாம் சரியா நேரத்துக்கு திங்கனும். ஆனா இதுல கெடுத்தது யாரு.?’

'எஞ்சினீரு.?'

'இல்ல. அந்த சூப்பர்வேசருதான். அதான் எனக்கு கோவம். சார் நாங்க ஒன்னும் ஃபேன் காத்துல சேருல ஒக்காந்துட்டுஇருக்குல.மொட்டவெயில்ல செவுர அடிச்சி ஒடச்சி காடி எடுக்குறம். எங்களுக்கெல்லாம் தண்ணிய மேல ஊத்துனமாரி வேர்வ வடியும். நேரத்துக்கு சோறு திண்ணாதான் வேல ஆவும். இதுல நாங்க நாலு மணிக்கு திங்கனுமா.? மதியானந்தான் சோறு திம்பாங்கனு தெரியாதா.? அப்றமென்ன நாலு மணி.. நாங்கல்லாம் என்ன சும்மா இருக்குறமா.? நான் இப்படிலாம் பேசினேன். ஒடனே நீங்கென்ன விதண்டாவாதம் பேசுறிங்க. இப்படிலாம் பண்ணா அப்பறம்.. அப்படின்னான். நீங்க என்னா வேணா பண்ணிக்கோங்க. இனிமே நாங்க ஒன்ரக்கில்ல, ஒரு மணிக்கே சாப்டுவோம் அப்படினு சொல்லிட்டேன். அவனால எதுவும் பேச முடியாம போயிட்டான். அடுத்த, நாளுலேந்து வேணுன்டே ஒரு மணிக்கே சாப்பிட ஒக்காந்துருவேன். ஆனா கொத்துக்காரங்க வர மாட்டாங்க. அதுக்குனே அவங்க முன்னாடியே காலக்கழுவுவேன் கையக்கழுவுவேன் பெரிய சாக்குப்பையப் போட்டு அதுல ஒக்காந்து திண்ணுவேன். எல்லாரும் பாத்துக்கிட்டே இருந்துட்டு அப்பறந்தான் வருவாங்க. அதுக்கப்புறம் அந்த சூப்பர்வேசருப் பய எங்கிட்ட பில்டிங் முடியறவர பேசவேயில்லையே.!'

'அது சரிண்ணா. உங்க வேலையிலல்லாம் குத்தம் புடிக்கிறது இருக்கா.?'

'அதாவது ஃபைன் போட்டு புடிக்கிறதா.?'

'அதான்.'

'இல்ல. நமக்கு வேல காண்ட்ரேட்டு. வேலைய முடிச்சிட்டு கூலிய வாங்குறது.'

'நாம்பாருங்க தண்ணிக்கி பயந்து நெருப்புலக் குதிச்ச கதயா மாட்டிக்கிட்டு

# நெஞ்சைப் பூப்போல் கொய்தவளே

நேசத்தை விதைத்து
நெருங்கி வந்தவளே
என் நெஞ்சத்தைப்
பூப்போலே கொய்தவளே

சித்திரப் பாவை
சிரிக்கும் கோதை
சத்தியமாய் உன்றன்
காதலே போதை

வெண்மதி மண்ணில்
எந்தன் முன்னே
வேதியல் விளம்பிடும்
எழிலான கண்ணே

பூவை நீயே
பூரணக் கலசமே
புதிதாக வந்த
மலரின் வாசமே

பைந்தமிழ் மொழியில்
பரவசம் பொங்குமே
பாரினில் எங்கும்
தேவதை விம்பமே

**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர்
இலங்கை



முழிக்கிறன்ணா.'

'ஏம்பா.?'

'அட அத ஏங்கணா கேக்குறிங்க.. இதுல வேலப் பாக்குறதுக்கு கம்முனு வூட்லயே குத்தய அமுக்கிட்டு ஒக்காந்துக் கலாம்போல. ஒரே சொல்லுல ஒரு பெரிய கொழப்பமாயி பேரு கெட்டு இப்ப குத்தம் போட்டுட்டாங்கணா.'

'குத்தமா.?'

'ஆண்ணா.'

'என்னாச்சி.?' அவர் கேட்டதுக்கு நான் அப்பதான் என் வெசன மூட்டைய அவுத்தேன்.

' ரெண்டு வாரம் முன்ன ஒரு நா.. நைட்டுக்கு வரவேண்டிய அந்த மொன்ன மீசக்காரன் வரவேயில்ல. அவன் வரா ததுனால இங்க நான் நைட்டுக்கு மாட்டிக்கிட்டேன். எங்கிட்ட காசும் இல்ல, சொட்டரும் இல்ல. சரி நைட்டு வேல செய்றவங்கலாம் போவும்போது யாருக்கிட்டயாவது கடன் வாங்கலாம்னு சொல்லிட்டு நின்னேன். வேல முடிச்சி போறவன் யாரு திரும்பி வருவா.? எல்லாரும் போனப்பின்ன கடைசியா முட்டக்கண்ணன் ஒருத்தன் இருந்தான். சரி அவங்கிட்டயாவது கேக்கலாம்னு கேட்டேன். அதுக்கு அவன் சரின்னும் சொல்லல முடியாதுன்னும் சொல்லல. எப்படி சொன்னாந் தெரியுமா.?'

'எப்படி சொன்னான்.?'

'ஒருவேள நான் திரும்பி வந்தா வருவேன். வந்தா சாப்பிட மூனு ரொட்டி வாங்கிட்டு வரேன். இல்லன்னா வூட்டுக்கு போயிருவன்னு சொல்லிட்டு போயிட்டான். அடுத்ததா இங்க யாருமே இல்ல. சொன்னவன் வருவான் வருவான் வானூத்து வைரமணின்னு இருந்தேன். ஆனா நேரம் போனதுதான் மிச்சம். அவன் வரல. ராத்திரி ஒம்பது, ஒம்பதரன்னு பத்து மணி ஆச்சி. இவன் வர மாட்டான் போலயே, வயிறு வேற காவு காவுன்னுதே, என்னடா பண்றதுனு யோசிச்சப்ப இந்த மேனேஜரு நம்பரு இந்த நோட்டுல இருந்துச்சி. நாம்பாத்துட்டு சரி இவங்கிட்டயாவது பிச்ச எடுப்போம்னு போனடிச்சி சாப்பாடு இல்ல, வூட்டுல எதுனா இருந்தா கொஞ்சம் குடுங்களேன்னு கேட்டேன். அவர் இருங்கனு சொல்லிட்டு எங்கயோ கேட்டுட்டு ஓட்டல் சோறு மாதிரி இந்த வெந்தும் வேவாத அரிசி சோறு இருக்குமே... பிரைடு ரைசா.? அதுதான் இருக்கு, கொண்டுவர சொல்லுட்டானு கேட்டாப்ல. பசிக்கு ருசி தேவையானு கொண்டாங்கனு நானும் சொல்லிட்டேன். அப்பறம் கொஞ்ச நேரம் ஆச்சி. பாத்தா அந்த வந்தா வருவேன்னு சொன்னவன் மூனு புரோட்டாவ கட்டிக்கிட்டு வந்துட்டான். ஆகா... இது எதுனா வம்பா இருக்குமோனு அப்பவே மனசுல பட்டுச்சி. அந்த நேரத்துல நமக்காக வாங்கிட்டு வந்தவன வேண்டான்னா சொல்ல முடியும்.? அப்படி சொன்னா நாளப்பின்ன எதுனா கேட்டா செய்வானானு நெனச்சி கம்முனு வாங்கிட்டேன். அவன் குடுத்துட்டு போன கொஞ்ச நேரங்கழிச்சி மேனேஜர் சொன்ன அந்த அரவேக்காடு சோறும் பார்சல் வந்துருச்சி. அடடா என்னமோ நடக்கப் போவுதுடா, இப்ப ரெண்டு பண்டம் திங்கறதுக்கு இருக்கே, என்னடா பண்றது பீமய்யானு தெய்வத்த நெனச்சேன். வேற வழி இல்ல. கம்முனு ரெண்டையும் திண்ணுட்டேன்.'

'ரெண்டையுமா.?'

'ஆண்ணா. மூனு புரோட்டா எங்கன பத்தும். ரெண்டும் திண்ணப் பின்னதான் பசியடங்கி ராவுல நிக்க முடிஞ்சது. இல்லன்னா பசியில தொவண்டு தூக்கம் தள்ளிரும்.'

'ஏதுமில்லாததுக்கு வயித்துக்கு கெடச்சதில்ல. அது போதுமே.?'

‘அது போதுந்தான். ஆனா ஒரே நேரத்துல ரெண்டு பேர்கிட்ட திங்க வாங்கிட்டனே. நான் மொதல்ல கேட்டவன் வந்தா வருவேன்னு சொன்னான் முட்டக் கண்ணன். பத்து மணிவர அவன் வரல. அப்பறந்தான் அவன் வரமாட்டான்னு மேனேஜருக்கிட்ட கேட்டது. ஆனா முட்டக்கண்ணன் வந்துட்டான். மேனேஜர் சொன்னதும் வந்துடுச்சி. வந்த சோத்த வேணான்னா நல்லாருக்காதேனு வாங்கிட் டேன். அப்பறம் ரெண்டு நாள் கழிச்சி மேனேஜர் என்னான்ட வந்து நீங்க பண்ணது சரியில்ல, ஒரே நேரத்துல ரெண்டுபேர்கிட்ட சாப்பாடு வாங்கிட்டிங்க, நான் அனுப்பு னதுக்கு முன்னாடியே உங்களுக்கு சாப்பாடு வந்திருக்கு, உங்களுக்கு சாப்பாடு வாங்கி குடுக்கதான் இங்க கம்பேனி நடக்குதா அதா இதான்னு கடிச்சாரு. இப்ப சம்பளத்துல குத்தம் புடிச்சிட்டாங்க.’

‘குத்தமா.? ஆமா வயித்துக்குதான திண்ண.? அதுக்கெதுக்கு குத்தம்.?’

‘ரெண்டு பேருகிட்ட வாங்கிட்டா ராம். இவர் ஏமாத்தி திங்கிறாருன்னு நெனச்சிட்டார் மேனேஜர்.’ பாரதி பயதான் விளக்கஞ் சொன்னான்.

‘வயித்துக்காக பாடுபடுறோம். இதுல திண்ணக்கூடாதுனு சொல்லறது தப்பு. எத்தன தடவையாவே இருக்குட்டுமே. என்னா இப்ப.?’

‘அதாண்ணா, அந்த மொன்ன மீசக்காரன் வராம போனதால இப்ப என்னென்னமோ நடக்குது எவ்வளவு ரூவா குத்தமோ போட்டு சம்பள டோக்கன் குடுத்திருக்காங்க பாருங்க.’ நான் காட்டுனேன். அதப் பாத்துட்டு அவர் சொன்னாப்பிடி.

‘ச்செய்.. பச்சக் கொடும..’

‘ஏனோ எப்படியோ திண்ண சோத்துக்கும் சொன்ன சொல்லுக்கும் சரியாப் போச்சி. ஆனா அதுக்கப்புறம் ஏன் இந்த குத்தம் பண்ணிருக்காங்கனு தெரியல. சோத்தையும் போட்டு அதுல மண்ணையும் போட்டு வச்சாப்ல இருக்கு. திண்ணாலும் தப்பு திண்ணாம போனாலும் தப்புனு நான் ரெண்டுங்கெட்டு மாட்டிக்கிட்டேன். இப்ப யார் பண்ணது தப்புனே தெரியல.’

‘நீ பண்ணதுதான் தப்பு. உம்மேலத் தான் தப்பு.’ வெடுக்குனு சொன்னாரு எலக்ட்ரிசியன் அண்ணா. எனக்கோ வாழப் பழத்த தோலு உரிச்சாப்ல ஆயிடுச்சி.

‘நானா.?’ திரும்பவும் பதறிப்போய் கேட்டேன்.

‘ஆமா. வேலைக்கி வர்றவன் ஒரு வேல சோத்துக்கு ஆகுற காசையாச்சி பாக்கீட்டுல வச்சினு வருனும். எதுனா நெலம மாறுனா அத வெச்சி சமாளிக்கலாம். அப்படி கொண்டு வராததுதான் உன் தப்பு. ஆனாலும் வந்தா வருவன்.. இல்லன்னா இல்லன்னவன், வயித்துக்கு வாங்கி குடுத்துட்டு அதுக்கு ஈடா திட்டுறவன் இவங்களுக்குதான் குத்தம் போடுனும். வேலைக்கு வச்சா மட்டும் போதுமா.? அவன் சாப்பிட்டானா இல்லையான்னு கவனிக்கிறது இல்லையா.? இதுலசம்பந்தமேஇல்லாமேஃபைன்வேற.சரி, அதவிடு.நீ குத்தம்போட்டதஒத்துக்காத.போய் அந்த மொன்னமீச வராதப் போனதலதான் இது ஆரம்பிச்சதுன்னு சொல்லு. குத்தத்த அவங்கிட்ட போடச்சொல்லு. மறுப்பாங்க. இல்லன்னா சம்பளமே வேணாம். என் வீட்டு செலவையெல்லாம் வந்து செஞ்சிக் குடுங்கனு நின்னுக்கோ. விசயம் பெருசானாதான் தீர்வும் வரும். சரியா.?’

எலக்ட்ரிசியன் அண்ணா சொன்னது புத்திக்கி பொறி தட்டுறாமாதிரி இருந்தது. ரெண்டு நொடி யோசிச்சேன்.

‘சரியா சொன்னிங்க. எஞ்சம்பளத்த எதுக்காகவும் நான் விடமாட்டேன். நின்னு வாங்குறேன்.’ இப்படி சொன்ன நான் அதுக்கு அப்பறந்தான் நான் அடவு கட்டுனேன்.

■

# மௌனத்தின் வார்த்தை



முனைவர் ப. கற்பகராமன்

நம்முடைய வாயிலிருந்து வரக் கூடிய வார்த்தைகள் விலைமதிப் பற்றவை. நமக்குள்ளும், நாம் சார்ந்துள்ள சமுதாயத் திலும் நம்முடைய வார்த்தைகள் பல்வேறு மாற்றங்களை உண்டாக்கும் தன்மை வாய்ந்தவை. "இந்த இடத்தில் மட்டும் பேசாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே" என்று பல நேரங்களில் நாம் நினைத்ததுண்டு. வார்த்தைகள் கூடத் தேவையில்லை, நம்முடைய வாயிலிருந்து ஒரு சிறிய சப்தம் கூட, தேவை யில்லாத இடத்தில் வருமாயின் அது நினைத்துக்கூடப் பார்க்க இயலாத பல்வேறு விளைவுகளை உண்டாக்கும்.

அனைத்தும் அறிந்த இடம் சப்தமாக இருக்காது என்பதை, நூலகத்தின் மூலம் நாம் உணர்ந்துகொள்ளலாம். அறிவின் முதிர்ச்சி மௌனத்தையே பேசும். படபட வெனப் பேசும் வார்த்தைகளைவிட சாந்தமான, அன்பான மௌனத்திற்கு வலிமை அதிகம். அது அனைத்தையும் வெற்றிகொள்ளும். அனைத்தையும் தன் வயப்படுத்தும்.

மௌனம் என்பது சப்தமற்றது. சப்தமே இல்லாத இத்தகைய மௌனத் திற்கு ஏது வார்த்தைகள் என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா. வார்த்தை என்பது ஒலிக்குறிப்புகளாக மட்டும்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அது முகக் குறிப்புகளாகவும், உடல் உறுப்புகள் சார்ந்த குறிப்புகளாகவும்கூட அமையலாம். பல்வேறு தருணங்களில் பல்லாயிரம் வார்த்தைகளைவிட புன்னகை பூத்த ஒரு முகக் குறிப்பு வெற்றிபெற்றுவிடும்.

மன அழுத்தத்தில் பேசப்படும் வார்த்தைகள், அந்த நேரத்தில் தீர்வை பெற்றுத்தருவது போலத் தோன்றினாலும், அதன் கருத்துக்கள் காலம் கடந்தும் கசப்பை மட்டுமே அளிக்கும். ஆனால் அந்த நேரத்தில் நாம் வெளிப்படுத்தும் மௌனமோ நம்மை மட்டுமின்றி நம்மைச் சார்ந்தவர்களையும் சிந்திக்கவைக்கும்.

எந்தவகையான சிக்கலாக இருந்தா லும் காலம் அனைத்தையும் எளிதில் தீர்த்துவிடும் என்று சான்றோர்கள் கூறக் கேட்டுள்ளோமல்லவா, இந்த சிக்கல்களையெல்லாம் காலம் எவ்வாறு தீர்க்கிறது என்பதை சற்றே ஆராய்ந்துப் பார்த்தோமானால், காலம் மௌனத்தில் நகர்வதால் மட்டுமே அதனால் எல்லா சிக்கல்களுக்கும் தீர்வினை மிக எளிதாகக் காண முடிகிறது என்ற உண்மை நமக்கு விளங்கும்.

கோபத்திலும், பதட்டத்திலும் நாம் பேசுகின்ற வார்த்தைகள் நம்மைக் கொலை செய்யும் ஆயுதமாக மாறி துன் புறுத்தும். ஆனால் அத்தகைய நேரங்களில் நாம் வெளிப்படுத்தும் மௌனமோ, நம்மை மட்டுமின்றி, இந்த உலகத்தையே வெல்லும் ஆயுதமாகத் திகழும். எனவே நாம் வீழ்வதும் வெல்வதும் நாம் எடுக்கின்ற ஆயுதத்தைப் பொறுத்தே முடிவுசெய்யப் படுகிறது.

உண்மையான பேச்சுக்கள் கூடப்

பலநேரங்களில் பலர் மனதையும் நோகடிப்பதாக அமைந்துவிடும். ஆனால் அங்கு நாம் வெளிப்படுத்துகின்ற புன்னகை கலந்த மௌனமோ ஒருவிதமான சக்தியை வெளிப் படுத்துவதாக அமையும்.

மௌனத்தின் வார்த்தைகளை மொழி பெயர்ப்பது என்பது அனைவராலும் முடியாது. அது மிகவும் கடினமான செயல். அதையும் மீறி யார் இதனை மொழிபெயர்க்கின்றார்களோ, அவர்களால் இந்தப் பிரபஞ்சத்தின் மொழியையும் உணர்ந்துகொள்ள முடியும். இந்தப் பிரபஞ்சத்தை விட்டுப் பல்வேறு நிலைகளிலும்நாம்விலகியிருப்பதால்தான் இயற்கையான அன்பு, கருணை, பாசம், நேசம், உண்மை, எளிமை போன்ற குணங்கள்நம்மைவிட்டுநீங்கி,செயற்கைக் குணங்களான பொய், சூது, வஞ்சம், கொலை, போன்றவற்றை மகிழ்வுடன் நொடிக்கு நொடி வெளிப்படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

தெரியாத பல்வேறு வினாக்களையும், தெரிந்துகொண்ட பல்வேறு விடைகளையும் மௌனத்தால் மட்டுமே நாம் வெளிப்படுத்த பழகிக்கொண்டோமானால் உலகின் எந்த இடத்திலும் என்றுமே போர் என்ற ஒன்று ஏற்படாது. போர் என்றால் ரத்தமும், சதையுமாகப் பல்வேறு உடல்கள் நசுங்கிச் சாவது மட்டுமல்ல. இதனையும்விடப் பெரியப் போர் மனப்போர். இந்த மனப்போரையும் தடுக்கும் மாமருந்து மௌனம்.

நாம் பேசக்கூடிய பேச்சின் சப்தம் காதுகளுக்கு மட்டும்தான் கேட்கும். ஆனால் மௌனத்தின் சப்தமோ நம்முடைய ஆத்மாவையே அசைத்துப் பார்க்கும். அதனால்தான் ஆயுதம் ஏந்தி வருபவன் கூட எதிரே இருப்பவனுடைய மௌனத்தைக் கண்டு பயப்படுகிறான். இதனை அறிந்ததால்தான் நம்முடைய சான்றோர்களும்,“கோபக்காரனிடம்சற்றே விலகியிரு. மௌனமாக இருப்பவனிடம் என்றுமே விலகியிரு” என்று மௌனத்தின் ஆழத்தை விளக்கியுள்ளனர்.

பெரியப்பெரிய அணு ஆயுதங்கள், கத்தி போன்ற கூர்மையான ஆயுதங்கள் என்று இவை அனைத்தையும் விட ஒருவருடைய மௌனம் மிக வேகமாகக் கொல்லும் தன்மை கொண்டது. எனவே எதிரிகளை மௌனத்தால் வீழ்த்துங்கள்.

நாம் மேற்கொள்ளும் மௌனம், நாம் பேச நினைத்ததைவிடப் பத்துமடங்கு நம்மைச் சார்ந்தவர்களைப் பேச வைக்கும் சக்தி படைத்தது. அனுபவ முதிர்ச்சி அடைந்தவர்களின் உதடுகளில் இத்தகைய மௌனம் தானாக குடிகொண்டுவிடும். எனவே,

இன்றிலிருந்து வார்த்தைகளை ஊமையாக்கக் கற்றுக்கொள்வோம். காதுகளைச் செவிடாக்கப் பழகிக் கொள்வோம். வாயால் அன்றி, முகத்தில் பூக்கும் புன்னகையைக் கொண்டு மௌனத்தால் பேசுவோம், பிறருடைய மௌனத்தின் வார்த்தைகளையும் நம்முடைய ஆன்மாவால் அளப்போம், ஆனந்தமாய் வாழ்வோம்.



வளைகரந்தனில் இலையாடை உடுத்தி
அதிகாலை கலைகிறாள்
அழகாகச் சிவக்கிறாள்!

- லீ.லியாகத்அலி



## தப்பு பண்ணிய மணல்கள்

ஒரு கடற்கரையில் நிறைய மணல் இருந்தது. அவங்கல்லாம் ஒரு நாள் பேசிக்கிட்டாங்க.

சின்னக் குழந்தைகள் எல்லாம் கோட்டை கட்டுகிறதால நமக்கு ரொம்ப வலிக்குது, அது மட்டும் இல்ல, இந்த கடல் அலை வேற வந்து நம்ம மேல வலிக்கிற மாதிரி விழுந்து நம்மை இழுத்துட்டு போயிடுது. இதுக்கு ஒரே வழி இந்த கடலில் சாக்கடையை கலக்க வச்சிட்டோம்னா குழந்தைகள் வந்து விளையாட மாட்டாங்க அப்படினு திட்டம் போட்டாங்க.

இதை கேட்ட கடல், நண்பர்களே! நீங்க பேசுவதை கேட்டேன். நான் சாக்கடையாக மாறினா உயிரினங்கள் எல்லாம் எப்படி வாழும். அதுமட்டும் இல்லாம நீயும் அழுக்காயிடுவன்னு சொல்லுச்சி.

அப்பதான் மணலும் தன் தப்பை உணர்த்துச்சி, அவங்க திட்டத்தை கைவிட்டுடாங்க.



மு.க.ஏஞ்சல்
எழுதிய

## சிறந்த வீரன்

வலம்புரி சங்கெடுத்து..
வீரத்தமிழ் நடையெடுத்து..
தகடூர் அரசனாய்
வாழ்ந்தான் அதியமான் நெடுமான்அஞ்சி..

ஔவைக்கு மரணமில்லா..
நெல்லிக்கனியை கொடுத்த
கொடை வள்ளலே !
தமக்காகவா கொடுத்தீர் ?
இல்லை தமிழுக்காக கொடுத்தீர்...

புலவர்களிடையே பொழுதைப் போக்கி
மக்களின் துயரை நீக்கி
அதியர் குலத்தில் பிறந்த அதியமானே..
எதிரியை வீரத்தோடு வீழ்த்தும்கோமானே..

அறத்தோடு ஆட்சிதனை
அண்டமெல்லாம் அறியச் செய்தாய்..
மாண்டாலும் மறக்கவில்லை..
உனது மாண்புதனை..
ஐயனே! அதியனே!

ஆகச் சிறந்த வீரனே !!

**- ம.குசன்**
சென்னை



வரைந்துப் பழகுவோம்



# மழையின் கவலை

உலகத்துல எங்க பாத்தாலும் மனிதர்கள் மரத்தை வெட்டிக் கொண்டே இருக்கிறார்கள்.

அதோடு விட்டுவிடவில்லை. போர்வெல் போடுகிறார்கள். இதனால் நிலத்தடி நீர் குறைந்து விட்டது. ஏரி குளம் குட்டை அனைத்தையும் நீக்கி வீடு கட்டி விடுகிறார்கள். பல ஆறும் காணாமல் போயிடுச்சு. இதனால் மழையாகிய நான் மண்ணுக்கு வர முடியவில்லை. ரொம்ப கவலையா இருக்கு. வானத்தில் குளிர் காற்று வந்தால்தான் மழை பெய்யும். இப்ப எல்லாம் அனல் காற்று தான் வீசுது. எனவே என்னுடைய கவலையை என் காற்று நண்பனிடம் தெரியப்படுத்தினேன்.

உடனே... நண்பா மழையே நீ கவலைப்படாதே மரங்களை வெட்டும் மனிதர்களுக்கு நான் ஒரு பாடம் சொல்கிறேன் பார் என்றது காற்று. உடனே வேகமான காற்றை வரவழைத்தது அது சூறாவளி காற்றாக மாறியது. வேகமாக அடித்தது. அந்த வேகம் தாங்க முடியாமல் மக்கள் அதில் சிக்கி பலரும் இறந்துவிட்டனர்.

மனிதர்களே நமக்கு மட்டும் கோபம் வராது இயற்கைக்கும் வரும். வந்தால் நாம் அனைவரும் அழிவோம். எனவே இயற்கை வளத்தை பாதுகாப்போம்.

ம.அனுராகா
ஒன்பதாம் வகுப்பு
சிக்காரம்பாளையம்
கோவை



# அம்மா

என்னை மீட்டும் இசையே..!
என்னை வர்ணிக்கும் ஓவியமே..!
என்னை செதுக்கும் சிற்பமே..!
என்னுள் மணக்கும் மலரே..!
என்றும் ஒளி வீசும் வெந்நிலவே..!
உறவே உணர்வே உயிரே..!
நீயே – நான் என்று
உன்னில் சரணடைகின்றேன்..!!!



தருண் விஷ்வா T.S
ஓசூர்



# அம்முவும்... நிலாவும்

இரவுப் பொழுதில் அம்மு பாப்பா
வெளியே வந்தாளாம்
வானத்தில் இருந்த நிலாவைப் பார்த்து
மெல்லச் சிரித்தாளாம்

அங்கும் இங்கும் ஓடியாடி
வானத்தைப் பார்த்தாளாம்
எங்கு சென்றாலும் அங்கும் அந்த
நிலா இருந்ததாம்

போகுமிடம் எல்லாம் நீயும் வருகிறாயே
வியந்து நின்றாளாம்
மெல்ல நகர்ந்து மேகங்கள் பின்னே
நிலாவும் மறைந்ததாம்

நிலாவைக் காணாத அம்மு பாப்பா
திகைத்துப் போனாளாம்
செல்ல நிலாவே வந்து விடு
கொஞ்சிக் கூப்பிட்டாளாம்

மேகம் விலக்கி எட்டிப் பார்த்த
நிலாவைக் கண்டாளாம்
நீயும் நானும் தோழிகள் என்றே
சொல்லி மகிழ்ந்தாளாம்

**அன்புச்செல்வி சுப்புராஜு**

# சத்தம் பேசிய குப்பைத்தொட்டி

வீட்டிற்குப் பக்கத்தில் உள்ள பூங்காவில் தமிழினியும் அவளது நண்பர்களும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். நாள்தோறும் மாலைவேளையில் அந்த ஊரிலுள்ள குழந்தைகள் அந்த பூங்காவில் வந்து விளையாடுவதும், பக்கத்திலுள்ள கடைகளில் எதாவது திண்பண்டங்கள் வாங்கி வந்து உண்பதுமாக மகிழ்ச்சியுடன் பொழுது போக்குவார்கள். பெரியவர்களும் பூங்காவின் ஓரமாக சுற்றிலும் போடப்பட்டுள்ள நடைபாதைகளில் நடைபயிற்சி மேற்கொள்வது, மரங்களின் கீழ் அமைந்துள்ள இருக்கைகளில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பது, விளையாடும் குழந்தைகளைக் கவனித்துக் கொள்வது என்று இருப்பார்கள். அதனால் அந்தப் பூங்காவில் மாலைப்பொழுதுகள் எப்பொழுதும் கலகலப்பாக இருக்கும்.

ஒருநாள் மாலை விளையாடி முடித்தக் களைப்பில் அங்கிருந்த புல்தரையில் வட்டமாக உட்கார்ந்திருந்தார்கள் தமிழினியும், அவளின் நண்பர்களும்...

அப்போது "தமிழினி... தமிழினி... "



சு.பிரவந்திகா



என்று யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டு சுற்றும்முற்றும் பார்த்தாள் தமிழினி. யாரும் அங்கில்லை.

“யாரோ கூப்பிட்ட மாதிரி இருந்தது ... யாரையும் காணலை... உங்களுக்குக் கேட்டதா” நண்பர்களிடம் தமிழினி கேட்கும் பொழுதே “தமிழினி” என்ற சத்தம் திரும்பக் கேட்டது. அனைவரும் சத்தம் வந்தப் பக்கம் பார்க்க அங்கிருந்த குப்பைத் தொட்டியிடம் இருந்தே சத்தம் வந்தது.

அனைவரும் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே “நீங்க எல்லாரும் விளையாடிய பிறகு இங்கேயே சாக்லேட், ஐஸ்கிரீம், சிப்ஸ் இன்னும் என்னவெல்லாமோ வாங்கி சாப்பிடறீங்க. சாப்பிட்டு முடித்ததும் அந்தப் பேப்பர்களைக் குப்பைத் தொட்டியில் போடாம, நீங்க இருக்கிற இடத்துலேயே போட்டுட்டுப் போறீங்க, உங்கள மாதிரி பலரும் செய்யறதால பாருங்க... பூங்கா முழுக்க எவ்வளவு குப்பைனு... குப்பைத்தொட்டி நான்தான் இங்கே சுத்தமா இருக்கேன் “ குப்பைத்தொட்டி சொல்லவும்

“நீ பேசுவியா” தமிழினி கேட்டாள்.

“நான் பேசறது இருக்கட்டும், நான் சொன்னதைக் கவனிச்சுப் பாருங்க... அங்கங்கே சேர்ந்திருக்கிற குப்பைகளால பூங்கா முழுக்க சுத்தமில்லாம கிருமிகள், பூச்சிகள்னு வளருது. இவைகளால உங்களுக்கு நோய் வரும். உடல்நலம் கெடும். அதனால்தான் சொல்றேன்... குப்பைகளைத் தொட்டியில் போட்டு சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வையுங்கள்” னு குப்பைத்தொட்டி சொன்னதைக் கேட்டதும் தமிழினியும் அவளது நண்பர்களும் பூங்காவைக் கவனித்தார்கள்.

இவர்களைப் போல பலரும் வீசியக் குப்பைகளால் நிறைந்திருந்த பூங்காவைப் பார்த்ததும் தவறு புரிந்தது.

அடுத்தநாள் மாலை தமிழினியும், அலளது நண்பர்களும் கையுறை, முகக்கவசம் அணிந்து பூங்காவைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். தினமும் இவர்கள் தொடர்ந்து சுத்தம் செய்வதைப் பார்த்த மற்றக் குழந்தைகளும், பெரியவர்களும் அடுத்து வந்த நாள்களில் அவர்களாகவே குப்பைத்தொட்டியில் குப்பைகளைப் போட்டனர். அதனால் பூங்கா எப்பொழுதுமே சுத்தமாக இருந்தது. இப்பொழுது தமிழினியும், அவளது நண்பர்களும் மகிழ்ச்சியுடன் விளையாடினார்கள்.

கதை
சு.பிரவந்திகா
சென்னை

படம் வரைந்தவர்
கமல் சங்கர்
சென்னை








ஜெ. பிரணவ் வரைந்த கருத்துப்படம் மேலே...



## பூனை குட்டி

மியாவ் மியாவ் பூனைக்குட்டி
எட்டிப் பார்த்தது கிச்சனுக்குள்ளே;
மோப்பம் புடிச்சது பூனை குட்டி
வாசம் வந்தது மூக்குக்குள்ளே
சத்தம் வந்தது வயிற்றுக்குள்ளே
பதுங்கி பதுங்கி பார்த்தது
அம்மா சத்தம் கேட்டதும்
ஓடி ஒழிஞ்சது பூனைக்குட்டி.

**ர. நேத்ர ஸ்ரீ**





# மனிதக் கடவுள்

கடமையை முன்நிறுத்தி..
கண்ணியத்தை நிலைநிறுத்தி..
சகிப்புத்தன்மையை சாராம்சமாய் வைத்து..
இரவுபகலாய் உழைத்து..
அனுபவங்களை பல அனுபவித்து..
நோயாளிகளை அனுசரித்து..
தன் வாழ்க்கையை அர்ப்பணித்து..
முதலுதவியை சட்டென தீர்மானித்து..
கம்பீர நடையெடுத்து..
நோய்களுக்கு எதிராக படையெடுத்து..
எங்களை காக்கும் குலசாமியே !
தங்களின் கருணைக் கரங்கள்..
எங்களை காத்திட கொடுத்த இரு
வரங்கள்..
தன்னலமற்ற தியாகத்தில்..
தன்னையே உள்ளடக்கி..
பிற உயிர்தனை..
தன்னுயிர் போல் நினைக்கும்..
மகத்துவ மனிதநேயமே !
உலகத்தின் மாமனிதராக....
தியாகத்தின் சிகரமாக..
வாழ்வையே சேவையாக..
செய்யும் காவல் தெய்வமாக..
அன்பை மருந்தாக தரும் தந்திரமே..
இதுவே தங்களது தாரகமந்திரமே..
மாதவம் செய்த
மருத்துவரே..
தாம்தான் மனிதக் கடவுளே !!

**- ம.லவன்**
சென்னை

# இலக்கை அடைவது நிச்சயம்

அன்புடனும் அடக்கத்துடன்
நடந்துகொள்
ஆர்வத்துடன் பாடத்தைக்
கற்றுக்கொள்
இறைவனை வணங்கி
செயலைத் துவங்கு
ஈட்டி போல் கூர்மையான
சிந்தனை கொண்டிரு
உரையாடல் முதியோரிடம்
வைத்துக் கொள்
ஊக்கத்துடன் விவேகமாகப்
பயணித்திடு வாழ்வில்
எண்ணங்களை உயர்வாக
வைத்துக் கொள்
ஏடுகளைக் கற்று
ஏற்றத்தை பெற்றுக்கொள்
ஐவர் முன்
தலைநிமிர்ந்து நில்
ஒன்றை பிறர் செய்வார்
எதிர்பார்பை நிறுத்திக்கொள்
ஓவியம் வரைய மனம்
அமைதி அடையும்
ஒளவை கூறிய வழியில்
வாழ்வை மாற்று
எந்நாளும் வெற்றிதான்
சுறுசுறுப்பாய் இருந்திடு
தினமும் இலக்கை
அடைவது நிச்சயம்

**- மோனிஷா சந்திரா**

# நூற்பயன்

## — பாவேந்தன்




தமிழறிஞர், நூலாசிரியர், நளினிதேவி அம்மாவின் ஒப்பிலா ஆய்வு முனைப்பும், அறிவு உழைப்பும், கருத்து நுணுக்கமும், பெண்ணியவிடுதலை வேட்கையும் இணையற்றவை. அவரது ஆண் ஆத்திசூடி நூல் இன்றைய தமிழ் உலகுக்கு அவரளித்திருக்கும் அறிவுக்கொடை.

ஆண் ஆத்திசூடி தனி நூல் அல்ல. அதன் இணையாக பெண் ஆத்திசூடி ஒன்றும் நளினிதேவி அம்மா எழுதியுள்ளார்கள். இரண்டும் தனித்தனியே முழுமையானவை. இணையான வேறு வேறு குறிபொருள் கொண்டவை thematically united yet with distinct objectives.. அவ்வை ஆத்திசூடி. பாரதியின் புதிய ஆத்திசூடி, பாரதிதாசனின் இளையோர் ஆத்திசூடி அறிவோம்.. இப்போது ஆசிரியர் நளினிதேவி ஆணுக்கு ஒன்றும், பெண்ணுக்கு ஒன்றும் என ஏன் எழுதவேண்டும்? ஆண் பெண் இருவருக்கும் அறங்கள் பொதுதானே? அல்லது ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறு வேறா? வேறுபாடு வடிவத்திலா? உள்ளடக்கத்திலா? எவ்வாறாயினும் இது மரபில்லையே என்றும் தோன்றலாம்.

இயற்கையான பால் sex வேறுபாடு ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறப்பிலேயே உள்ளது.. அது இருவரின் உடல் அணுக்களில் உள்ள க்ரோமோசோம்கள் அடிப்படையில் வேறு வேறு [ஆண் XY பெண் XX க்ரோமோசோம்கள்.] புறத்திலும் அகத்திலும் உள்ள கருப்பை பாலுறுப்புகள் மீசை குரல்நாண்கள் போன்ற உறுப்புகள் இயற்கையாகவே இருவருக்கும் வேறு வேறு. ஆகவே பால் என்பது உடலியல்

நளினிதேவி



பாவேந்தன்



வேறுபாடுகள் சார்ந்தது. Physiological

பாலினம் gender என்பது அப்படி இயற்கையானது அல்ல.. தன்னை எவ்வாறு உணர்கிறோம், வெளிப் படுத்துகிறோம், அதைச் சமூகம் எந்த அளவுக்கு அனுமதிக் கிறது, எந்த மட்டில் அவற்றை ஏற்றும், மீறியும்; நாம் உணர்கிறோம் அதை எந்த அளவு வெளிப்படுத்துகிறோம் இவைய னைத்தும் சார்ந்து, தானும் சமூகமும் சேர்ந்து கட்டமைத்துக். கொள்வதுதான் பாலினம் socially constructed.. ஆண்பாலினம் இப்படித்தான் நடந்துகொள்ள வேண்டும் பெண்பாலினம் வேறு மாதிரி நடந்து கொள்ளவேண்டும் என்ற கட்டுப்பாடுகள் செயற்கையானவை. சமூகத்தில் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றவை.

பாலினம் ஒரு சமூகக் கட்டமைப்பு என்றால் அதற்கு எது அனுமதிக்கப்பட்டது, எது விதிமீறல், எது வரை மீறுதல் குறை எப்போது குற்றம் என்ன தண்டனை என்றெல்லாம் சமூக நடைமுறையில் இயங்கும், ஏற்றுக்கொள்ளப்படும், நியதிகள் உள்ளன. இரண்டு பாலினங் களுக்கும் பொதுவாகவும், gender-neutral norms தனித்தனியேயும் gender-specifici norms உள்ளன. அவர்களுக்கான "பாத்திரங்கள்" "விதிமுறைகள்" "நடத்தைகள்" "பண்புக் கூறுகள்" என்ற normative roles, behaviours and attributes ஆகியவை சமூக ரீதியாக கட்டமைக்கப்பட்டு உள்ளன.

சமூகரீதியாக என்றால் இந்த வரம்பு களை limits தீர்மானிப்பது யார்? மீறல் எது என்று யார் வரையறுக்கி றார்கள்? கண்காணிப்பது யார் surveillance? மீறலுக்கு என்ன என்ன தண்டனைகள் உண்டு என்று விதிப்பதும், நிறைவேற்றுவதும் யாருடைய அதிகாரத் துக்குள்வருகின்றது?வகுத்துரைக்கப்பட்டு நிறைவேற்றப்படும் வன்முறை தண்டனை அதிகாரம் codified and enforced coercive power ஆக அது நிலவுகிறதா?



பெண்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு முறைகள் நடத்தை விதிகள் அனைத்தையும் தனி நிறுவனம் அமைத்து யாரும் எதுவும் கண்காணிப்பு செய்வதில்லை. மறைவாகவே இருக்கிற காவலர்களும் எல்லாருக்கும் கண்காணிக்கப்பட்டு வருகிறோம் என்ற உணர்வுத்தளைகளும் சேர்ந்து ஓர் ஒழுங்குகட்டமைவை நிறுவியுள்ளன. இது முறைதவறிய செயலா என்று மக்கள் தாமாகவே எல்லாவற்றையும் சோதித்து இயங்கும் ஒரு சமூகப் பானாப்டிக்கானுக்குள் இருக்கிறோம். நாமனைவரும் ஆண்பெண் இரு பாலாருமே ஏதோ ஒரு புலனாகாத ஆனால் எப்போதுமே இமைக்காத காவல் கண்காணிப்பின் விழிக்குப் பணிந்து செயல்படும் நிலையையே உரையில் குறிப்பிட்டேன். மேலும் சில படங்களை விளக்கும் முகத்தான் இணைத்திருக்கிறேன். [இந்தக்கருத்தை ஜாக் லண்டன் குறித்த முனைவர் பட்ட ஆய்வெழுதித்தந்த போது இந்தப்படத்தோடு பயன்படுத்திப் பாராட்டுப் பெற்றேன் ]

வெளிப்பார்வைக்கு அவ்வாறு இறுக்கமான கட்டுப்படுத்தும் தனி அமைப்பாக அது இல்லை. சமூகமே கண் காணிப்புக்கான நெறிமுறைகளை வகுத்து வைத்திருக்கிறது. ஓர் உயரமான காவல் கோபுரத்தின் மேல் நின்றுகொண்டு இருக்கும் யாராலோ எப்போதுமே நாம் கவனிக்கப்படுகிறோம் என்ற சுய உணர்வோடு நடந்துகொள்கிற ஒழுங்கு முறை அமைப்பாக அது நிலவுகிறது Disciplinary Panopticon system.

அது நுணுக்கமாக மரபுகள், வழக்காறு, அறவியல் கோட்பாடுகள், இலக்கியக் கருப்பொருட்கள், அரசியல் சட்டங்கள், பண்பாட்டு வரையறுப்புகள், அடையாள மிடுதல் stigmatization விலக்கப்பட்ட பிறராக வைத்திருத்தல் othering என்றெல்லாம் சமூகத்தின் அனைத்துக் கூறுகளிலும் நீக்கமற இழை யோடி இருக்கிறது. ஆனால் விதி விலக்கின்றி எல்லாச்சமூகங்களிலும் இவை அசமன்பாடானவையாகத்தான் அமைந்திருக்கின்றன Socially mandated and gender-unequal.

பாலினங்கள் தாங்கள் அப்படி வைத்திருக்கப் பட்டிருப்பதை மறுத்தும் எதிர்த்தும், புதிய கருத்தியல்களை முன் வைத்தும், எதிர்வினையாற்றும்போது, உட்கவிழ்ப்புகளை (Subversion) அரங் கேற்ற முனையும் போதெல்லாம், அதிகார அமைப்புமுறை தனது விதிமுறைகளை நெகிழ்த்தியும்கொள்கிறது. அல்லது எதிர்ப்பை உட்செரித்துவிடவும் செய்கிறது. (Containment and assimilation). ஆனால் எப்போதும் தன்னை இயங்கு நிலையிலேயே dynamic flux ஆக வைத்துக்கொண்டு செயல்பட வல்லதாக இருக்கிறது.

இந்த நிலையே ஆணுக்குத் தனி யேயும் பெண்ணுக்குத் தனியேயும் அறங்களைக் கூறத் தேவையை உருவாக்குகின்றது என்று கூறலாம்.

பெண்வழிச் சேறல் என்றோர் அதிகாரம் வள்ளுவர் வகுத்தார். பத்து நூற்றாண்டுகளுக்குப் பின் தையல் சொல் கேளேல் என்று அவ்வை ஆத்திசூடியில் மாற்றினாள், பெண்புத்தி பின்புத்தி எனப் பழமொழியானது. தானியங்கிகளின் பின்பக்கம் சீறும் பாம்பை நம்பு சிரிக்கும் பெண்ணை நம்பாதே என்று பொறிக்கப்பட்டது. அப்படிப் பொறிக்கப்பட்டது தானியங்கிப் பின்புறமாக இருந்தாலும் கல்லிலே வடித்ததாக இருந்தாலும் இரண்டும் சமூகத்தில் நிலவும் அதிகாரக் கருத்தியலின் பிரதிகளே.

தையல் சொல் கேளேல் என்று அன்று அவ்வையும், தையலை உயர்வு செய் என்று பாரதியும் இன்று தையலை உயர்த்து என்று ஆண் ஆத்திசூடியும் வகுக்கின்றன. அனைத்துமே சமூக ஒழுங்குமுறை விதிப்புகளுக்கும் எதிர்ப்பு களுக்கும் இடையிலான கருத்தியல் மோதல்களின் ஆவணங்களே.

கம்பரின் இந்தப் பாடல் அறிவீர்கள்

பஞ்சி ஒளிர், விஞ்சு குளிர்
பல்லவம் அனுங்க,
செஞ் செவிய கஞ்சம் நிகர்,
சீறடியள் ஆகி,
அம் சொல் இள மஞ்ஞை என,
அன்னம் என, மின்னும்
வஞ்சி என, நஞ்சம் என,
வஞ்ச மகள் வந்தாள்.

இந்தப்பாடலில் பெண் பாலினத் துக்கென்று விதிக்கப்படுகின்ற வரையறை களைப் பாருங்கள். அவள் பஞ்சு போன்ற மெல்லியள். அவளது செம்மையான தாமரைமலரை ஒத்த பாதங்கள் தளிர்கள் வருத்துமளவு மென்மையானவை. சிற்றடி எடுத்து வைக்கிறவள். மயில், அன்னம், இன்னும் மின்னும் வஞ்சிக்கொடி போன்றவள்.

கடைசியாக அவள் நஞ்சு போலவந்த வஞ்சகி. இந்தப் பாடல் சொல்லும் வரை யறைகளை ஒத்தனவற்றையேப் பெரிதாகக் மையக்கருத்துப் பிசகாமல் கொஞ்சம் தூக்கலாகவும் இரக்கலாகவும் போட்டு, நடையைச் சொற்களை மாற்றிப் போட்டு வருணனைகளைக் கூட்டிக் குறைத்துதான் பெரும்பகுதி கவிதைகள் திரைப்பாடல்கள் தமிழில் இன்றளவும் பெண்ணைச் சித்தரிக்கின்றன. ஓட்டப்பந்தய வீராங்கனை பிடி உஷாவின் காலத்திலிருந்து இன்றைய குத்துச்சண்டை வீராங்கனை நிக்கத் சரீனின்

காலம் வரை பெண்களின் வகிபாகம் மாறியிருக்கிறபோதும் பெண் என்கிற படிமம் புளித்துப்போன பழைய பிரதிகளின் சொற்களிலேயே சிற்சிலமாற்றங்களோடு வெகுகாலம் நீடிக்கின்ற தன்மையை இது காட்டுகிறது

ஆனால் நான் இப்படி இருக்கிறேன் என்று பெண் தனக்காக வகுத்துக் கொண்டாளா? அல்லது அவள் அப்படித்தான் இருக்கவேண்டும் என்று ஆண்கள் விரும்பு வதை விதியாக்குகிறார்களா? சமூகம் கட்டமைப்பதுதான் பாலினம் என்று சொன்னோமே? அது திரிந்து சமூகத்தின் ஆண் மையம் விதிப்பதே அறம் என்றல்லவா ஆகிவிடுகிறது?

ஆண் விரும்புகிற வகையில்தான் பெண் அமைக்கப்பட வேண்டுமென்று கம்பர்தான் எழுதி விதித்து வைத்துவிட்டார் என்று சொல்லி விடமுடியுமா? . ஆண்பால் பெண்பாற் புலவர்கள் இருவராலுமே படைக்கப்பட்ட எல்லா இலக்கியத்திலும் புழங்கப்பட்டு பொதுப்புத்தியில் உறைந்து இறுகிப் போன ossified ஆண் மையப்பார்வையாக வெளிப்பட்டு நிற்கிறது எனலாம்.

கம்பரிடத்திலும் அதுதான் ஒரு வகையில் வெளிப்படுகிறது என்றுதான் கொள்ளவேண்டும். கம்பர் ஏன் வள்ளுவ ரிடத்திலும் கூட அப்பார்வை எவ்வாறு வெளிப்படுகிறது என அம்மா தன் அகவிடுதலையே பெண்விடுதலை நூலில் விரிவாக எடுத்துக்காட்டியிருப்பார். ஆண் ஆத்திசூடியில் வருகிற ஆண் மையம் அகற்று என்ற தொடரின் மீது உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள். ஆண் மையம் என்றால் என்ன?

ஆணின் விருப்பங்கள், நலன்கள், விதிகளை விதந்தோதும் நெறிகளையும் (norms / codes), ஏற்றுக்கொள்ளக்கூடிய, விரும்பத்தக்க நடைமுறைகளையும், (acceptable/desirablebehaviour), மீறல், அதன் அனுமதிக்கப்பட்ட அளவுகள், மீறலுக்கான ஒழுங்குமுறைத் தண்டனைகளையும் (Allowable limits and disciplinary punitive norms for violation) பண்பாட்டுத்தளத்தில் இலக்கியச் சித்தரிப்புகளாகவும், முன்னு தாரணங்களைப் படைக்கிற (normative role models), மதத்தின் வழி விதிக்கப்படும் பலவேறுசடங்காச்சாரங்கள் ஆகவும் (religious stipulations and rites), எல்லா வகையிலும் பெண்ணைக் கட்டுப்படுத்தி நடக்கவைக்கிறஓரொட்டுமொத்தஅமைப்பு total system ஆக செயல்படுவதையே ஆண் மையம் என்கிறோம்.

ஆணாதிக்கத்தின் உயிர்நிலை போன்ற இக்கருத்தியலை எதிர்த்துத்தான் அடக்குதல் வீரம் அன்று என்று தொடங்குகிற ஆண் ஆத்திசூடி நூலின் இரண்டாவது தொடராகவே ஆண் மையம் அகற்று என்று நம் ஆசிரியர் சொல்லுகிறார். இதைப் பெண்ணுக்குச்சொல்ல வேண்டுமா? ஆணுக்கா? என்று நாம் ஊன்றிச் சிந்தித்தால் ஏன் ஆண் ஆத்திசூடி என்பது விளங்கிவிடும்.

ஆண்களை மையமாகக் கொண்ட உலகக் கண்ணோட்டம் என்ற உடனே அது ஏதோ பெண்களின் வாழ்வியலில் முரட்டுத்தனமான, வெளிப்படையான, எதிர் மறையான பார்வைகளைக் கறாராக மட்டுமே முன்வைக்கும் என்று கற்பனை செய்ய வேண்டாம். அவ்வாறு செய்ய வேண்டிய அவசியமுமில்லை. ஆனால் அக் கண்ணோட்டம் ஆண்களை மட்டுமே மனித நிலை அல்லது தொகுப்பு அனுபவத்தின் பிரதி நிதிகளாகவும், நெறிகளை வகுக்க ஆண்கள் மட்டுமே தகுதியானவர்களென்றும், பெண் களை மனித நிலையில் இருந்து தொடர்பறுந்த பிறராகவும் Other கீழ்ப்படிந்தொழுக வேண்டியவர்களாகவும் நிலை நிறுத்து கிறது..

அது வெகு நுணுக்கமாகத் தொழிற்

படுகிறது. அடக்கமாயிருப்பவள் பெண். ஆனால் அவளே சர்வஷக்தி ஜகத்ஜனனி மகாமாதா என்றெல்லாம் உயர்வு நவிற்சியாகப் புனையும். அடக்கமாயிருந்து பெண்தான் இப்புவியை நிலைநிறுத்தும் பேராற்றல் என்று கதை கட்டும். கூடவே கணவனிடம் அடிவாங்காதவளுக்கு ஒரு சுகம் மட்டு என்று நாட்டார் வழக்காகவும் மாறும். பெண்ணின் கருத்தறிந்து நடப்பவனை பெண்டாட்டியை அடக்கி யாளத் தெரியாதவன் என்று அவன் சமூகத்தகுதியையே ஏளனம் செய்யும்,.

இக்கருத்தியல் அதிர்ச்சியூட்டுகிற வகையில் சாதாரண மனிதர்களிடம்தான் அவ்வாறு என்றெல்லாம் இல்லாது உயர்தனிச் செவ்விலக்கியங்களில், குறளி லும் கூட வெளிப்படும்.

இல்லாள்கண் தாழ்ந்த
இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும். 903
(பெண்வழிச் சேறல்)

பரிமேலழகர் உரையில் இக்குற ளுக்கு "இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு இன்மை - ஒருவன் இல்லாள் மாட்டுத் தாழ்தற்கு ஏதுவாய அச்சம்; நல்லாருள் நாணு எஞ்ஞான்றும் தரும் - அஃது இலராய நல்லாரிடைச் செல்லுங்கால் நாணுதலை அவனுக்கு எக்காலத்தும் கொடுக்கும். அவள் தான் (கணவனுக்கு) அஞ்சி ஒழுகுதல் இயல்பாகலின், அவளை (கணவன்) அஞ்சுதல்இயல்பின்மையாயிற்று.அங்ஙனம் (கணவன்) அஞ்சி யொழுகுதலின், அவளை நியமிப்பார் (கட்டுக்குள் வைத்திருப்பவர்) இல்லையாம், ஆகவே, எல்லாக்குற்றமும் விளையும் என்பது நோக்கி, 'எஞ்ஞான்றும் நாணுத்தரும்' என்றார்.."

ஆண் ஆத்திசூடி குறளை விஞ்சிய கோட்பாடு ஏது என்று வழிபடும் சாத்திரப் பார்வை நீக்கி ஆண்பிள்ளைகளுக்கு அடக்குதல் வீரம் அன்று; போர்க்களம் அன்று. வீடு; சினம் உன் உரிமை அன்று; ஓங்கி ஒலியேல்; இணையரைப் போற்று என்று துணிந்து புதிய நெறி காட்டுகிறது.

ஆண் பேரினவாதம் male chauvinism என்பது ஆண்பிள்ளைகளைப் பீடிக்கும் உளவியற்பிணி. பெண் என்பவள் தனியானதொரு முழுமை. அவள் ஒரு தனி அலகு unit. மானுடம் என்னும்போது ஆணுக்குப்பெண் இணையானவளே என்று காணவும், ஒப்புக்கொள்ளவும் இயலாமை ஒருவகை நோய். இந்த நோய் என்ன தெரியுமா செய்யும்?

தன்னுடைய துணையை, தன்னுடைய பலவேறு உடமைகளில் ஒன்று என்று உளப்பூர்வமாக நம்பும். அதனால் அவள் தனக்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கடமைப்பட்டவள்தான் என்றெண்ணிக் கொள்ளும்.. அவள் நிற்க, நடக்க, உடுக்க, உண்ண, தானன்றிப் பிறருடன் பேசப் பழக, தன்னை விட கூடுதலாய்ப்படிக்க, பணிபுரிய,. என வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் தான் சொல்வதைக் கேட்டு, கீழ்ப்பட்டு, நடந்து கொள்ள வேண்டியவள் என்றும். பெண் எதையும் ஆண் தனக்கு வேண்டுமென்று எண்ணும் முன்பே மனம் கோணாது எல்லாத் தேவைகளையும்தானாகவே நிறைவேற்றி மகிழ்விக்கவேண்டிய மற்றுமோர் எந்திரம் AUTOMATON.

தனக்கென விருப்புகளும் உணர்வும் கொண்ட உயிரென்று ஏற்காது. பெண் என்பவள் ஆணுக்குச் சொந்தமான உயி ரற்ற சடப்பொருள் சொத்தென்றுதான் சாதிக்கும்.

இதைச்சொன்னால் இங்கே நான் உட்பட எல்லா ஆணும் உடனே என்ன சொல்லுவோம்? ச்சே ச்சே நான் அப்படி யில்லை. என் மனைவியின் மனமறிந்து நடந்து கொள்ளுபவனாக்கும் நான் என்று ஒரு denial mode மறுப்பு மனநிலைக்குத் தாவிவிடுவோம்.

உண்மைதான் நாம் இந்த வன்முறையை வெளிப்படையாகப் பெரும் பாலும் நிகழ்த்துவதில்லை. அது நுணுக்கமான சிறு சிறு வெளிப்பாடுகளுக்குப்பின் தன்னை உரு மறைத்துக் கொள்கிறது Subtle Camouflaging.

தலைவலிச்சா ஒரு மாத்திரை போட்டுக் கொண்டு திரைப்படத்துக்கு கிளம்பு. இன்றைக்குத் தான் எனக்கு ஒய்வு. என்ன இருந்தாலும் நீ செய்கிறமாதிரி எனக்கு வரலை. நீயே தோசை ஊத்திடேன்.

நான் ஊட்டினா பிள்ளை துப்புது நீயே ஊட்டிடும்மா

என் மனைவிக்கென்ன சார் குறை தீபாவளிக்குப் பட்டுப்புடவை, மாதம் ஒருமுறை வெளியே போய் சாப்பிடுவோம். காலையில நடைபயிற்சிபோயிட்டு வரப்ப நானே பால் வாங்கிக்குடுத்துடுவேன் ஆபீசுக்குபோறப்ப பிள்ளைங்களை நானே பள்ளியில விட்டிடுவேன்.

இப்படியெல்லாம் பீற்றாத ஆண்கள் உண்டா? எண்ணிறந்த நுண்ணிய வழிகளில் பெண்ணை நமக்குப் பணி செய்கிற எந்திரமாக்கும் ஆண்கள் நமக்குத்தான் ஆண் ஆத்திசூடி சொல்கிறது சொத்து அல்லள் பெண்; மொத்தமும் நீயே அல்லன்; கீழ் இல்லை மனைவி; கிளிக்கூடன்று வீடு; பணிகள் பகிர்ந்திடு; தாய்மை இருவருக்கும் பொது; முடக்காதே பெண்.

அவளது விருப்பமோ இசைவோ தேவையில்லை என்போம். அல்லது அதைப் போயி என்னங்க அவகிட்டக் கேட்டுக் கிட்டு அதெல்லாம் ஆம்பளைங்க உரிமை என்போம்.

சரியான நெறிகளை வெறுமனே அறிதலால் மட்டும் இக்குறைகள் உடனே, அகன்று விடுமா? அகலாது. தலைமுறைதலைமுறையாய் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் நம்முள் இறக்கப்பட்டிருக்கும் நஞ்சு அது. நாம்தான் மிகுந்த தன்னுணர்வும் தொடர் முனைப்பும் conscious sustained effort கொண்டு சிறுகச் சிறுகவாயினும் களைந்து கொள்ள வேண்டியுள்ளது. வேரோடிப்போயிருக்கும் முள்மரத்தை அகற்றுதல் கைகொல்லும் பணிதான். முளைவிடாது தடுக்கவும் அல்லது இளையதாக இருக்கும்போதே களைவதும் எளிது என்பதால்தான் ஆண் பிள்ளைகளுக்கு ஆத்திசூடியை ஒரு வாழ்வியல் விழுமியமாக நாமும் முன்னுதாரணமாய் வாழ்ந்து பயிற்றுவிக்க வேண்டிய கடன் நமக்கு இருக்கிறது.

உடமை உணர்வின் வன்முறை வெளிப்படையாகவே அதன் கோர உருவைப் படுக்கை அறையில்தான் காட்டுகிறது. கணவன் விரும்புகிற போது மனைவி உறவுக்குத் தயாராய் இருப்பது அவளது கடமை. காலங் காலமாய் நம் மனதில் இது ஆழமாய்ப் பதிந்து போய் இருக்கிறது.

அவளது உணர்வை இசைவை விருப்பைக் கேட்டறிவதில்லை என்பது ஒரு புறம். மற்றொருபுறம் அவளேஅவளது விருப்பங்களை இசைவின்மையைச் சொல்லி விட்டாலோ அவள் வேறு எவனுடனோ இருந்துவிட்டு வந்த நடத்தை கெட்டவளோ என்ற சந்தேகப்பேயும் சேர்ந்து பிடித்து ஆட்டி வைக்க அல்லவா செய்கிறது?

நம்முடைய சமகாலத்திற்கு இணையாக பாலியல்சார்ந்த கற்பிதங்களை வரம்பிறந்து நுகர்வது முன்பு ஒருபோதும் இருந்ததில்லை. ஆழிப் பேரலையைப்போல நம்மை பாலியல் குறித்த பல கற்பிதங்கள் சமூகத்தின் அனைத்துத் திசைகளிலும் வந்து நம்மை மூழ்கடிக்கின்றன ஆனாலும் பாலியலறிவு என்றால் என்ன என்று ஒருமண்ணுமே தெரியாத மனநோய்க் கனாகச் சமூகமே மாறிப்போய் விட்டதும்

இன்றுபோல்என்றுமில்லை .முழுக்கமுழுக்க இந்த அறியாமையைப் போய் அசலான ஆண்மை யென்று கொண்டாடவைக்கிற பித்துதான் ஆண் பேரினவாதம்..

பாமரத்தனமான ஆணாதிக்க உணர்வு சமூகமுழுமையும் பிணித்திருப் பதாலேயே காதலும் அன்பும் நிறைந்து விளங்க வேண்டிய காமம் இன்று மணஉறவுக்குள் வன்புணர்வுக்குத் தடைச்- marital rape சட்டம் வேண்டி நிற்கிற அளவுக்கு இழிந்து போயிருக்கிறது.

பெண்ணின் இசைவு என்பதை மலினப்படுத்தியதில் நமது திரைப்படங் களுக்குப் பெரும்பங்கு உண்டு. பெரும் பகுதி படங்களில் பெண் மறுத்தும் வெறுத்தும் ஒதுக்குகிற போதும் மல்லுக் கட்டி அவளை இசையவைப்பதே பேராண்மை என்றே எல்லாக் கதாநாயகர் களும் சலிப்போ நாணமோ இன்றி செய்துகொண்டேயிருக்கிறார்கள்.

மோதலுக்குப்பின் காதல்; தாலி கட்டிவிட்டால் ரௌடியும் பொறுக்கியும் அற்புதமான இணையர்கள் என்று பெண்களே ஏற்பது போலக்காட்டுவது;. வன்புணர்வு செய்தவனுக்குத் தண்டனை வல்லுறவுக்காட்பட்ட அவளையே மணம் செய்துகொள்வது என்ற நாட்டாமைத் தீர்ப்புகள்; இன்னபிற அற்பமான stereotype வெற்றி வாய்ப்பாடுகள் success formulae நம்மைப் பிடித்த பெரும் பீடைகள். அபத்தக்களஞ்சியங்களான திரையிசைக் காதல் பாடல்களை விரிவஞ்சி விடுக்கிறேன்

என்னையெல்லாம் பார்த்த உடனே பிடிக்காது பாக்கப் பாக்கத்தான் புடிக்கும் மாரிகளின் பன்ச் டயலாக் வரைக்கும் நம் மறுமொழி என்ன தெரியுமா?

இருக்கறதைத்தானேக் காட்டுறான். இல்லை இல்லை இல்லவே இல்லை அவன் இப்படியே இருங்கள் என்று காட்டுகிறான். நம்மைக்கட்டமைக்கிறான். நடுவீட்டில் நம் கண்கள் காதுகள் வழியே ஒளி ஒலி அலைகளாகப் புகுந்து கொண்டு மூளையின் ஒவ்வொரு மடிப்பி லும் இந்தப் பிற்போக்கு கழிவைத் திணித்துவிட்டுச்செல்கிறான்.

இந்தக் கதாநாயகர்களை போய்த் தாங்களாகவே வரித்துக்கொண்ட இளை ஞர்கள் மனைவியை/காதலியை வன்முறை யாக உறவுகொள்வதே ஆண்மையின் அடையாளம், தங்கள் ஆதர்சக் கதாநாயகர்கள் போல நாமும் ஆவது என்று மூளை மழுங்கடிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

அதனால்தான் நம் ஆசிரியர் இதை அறைந்து சொல்கிறார் சேர்க்கை இசைவறி; பீடு அன்று வல்லாண்மை; பாலியல் சின்னமன்று பெண்; நைதல் செய்யேல்; நொய்மைகள் தவிர்; கெடுதல் செய்யேல்; கௌவை நினையேல். இவை மட்டுமன்றி மேலும்பல தொடர்களில் இதை வலியுறுத்தி வலியுறுத்தி ஆண் ஆத்திசூடி ஏன் சொல்கிறது?

கத்துவா, உன்னாவ், ஹத்ராஸ் ஹைதராபாத், கொல்கத்தா, டெல்லி, பதாவுன், அரியலூர், பொள்ளாச்சி என இந்தநாட்டின் எல்லா மூலைகளிலும் இருந்தும் பெண்களின் வன்புணர்வு அவல ஓலங்கள் இடையறாது ஒலித்துக்கொண்டே யிருக்கின்றனவே ஏன்?

நம்முடைய சமூகம் ஆணாதிக்க உணர்வில், ஆண் பேரினவாதக் கற்பனை களில், நிலை கொண்டிருக்கிறது. அதன் விளைவே குழந்தைகள் தொடங்கி எந்தப் பெண்ணாயிருப்பினும் வன்புணர்வும், மனப்பிறழ்வும், தீக்காம உறவுகளும், ஏமாற்றுவதும், வக்கிரங்களும்,துன்புறுத்தி கூட்டு வல்லுறவின் பின் கொலையும் செய்வதும் மலிந்து போயிருக்கின்றன

வீட்டில் தொடங்கும் ஆண் வல்லாதிக்கம் எனும் நோய் முற்றிச் சீழ் பிடித்துப்போய் பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறை யாகக் கலவரங்களில் முதல் இலக்காக, காவல்நிலையங்களில், ஆன்மீக மடங்களில், பள்ளிகளில் பணிபுரியு மிடங்களில்,பேருந்துகளில்கூட வன்புணர்வு கூட்டுப்பாலியல் குற்றங்களாகப் புழுத்து நாறுகிறது. தவமறைந்து அல்லவை செய்த பிரேமானந்தா ஜெயேந்திரர் சிவசங்கர்பாபா நித்தியானந்தா ஆசாராம் பாபு தேரா சச்தேவ் ராமரஹீம்பாபா முல்லைக்கல் பாதிரி. கோட்டயம் மதரசா யூசுப் இப்படி எல்லா வண்ண மதத்தலைவர்களிலும் பல பாலியல் குற்றவாளிகள் வேடந்தாங்கி நிற்கிறார்கள்.

இவற்றைச்சட்டங்கள் போட்டுத் தீர்ப்பது நிகழ்வுக்குப்பின் சரிசெய்யும் post hoc correction வகை. உணர்வுபூர்வமாக ஆண் ஆத்திசூடியைப் பயின்று, நடந்து, இளநெஞ்சங்களுக்கு ஆழமாகப் பதியும் வண்ணம் பயிற்றுவிப்பது நிகழ்வையே தடுக்கும் preventive action வகை. இரண்டில் எது ஆற்றலுடையது என்பதைப் புரிந்து கொள்ளப் பாராளுமன்ற புள்ளிவிவரப்படி இந்த நாட்டில் வல்லுறவுக் குற்றவாளிகள் தண்டனைபெறுவது conviction rate 2018 ல் 27.2%., 2019ல் 27.4%,.2020ல் 39.4% மட்டுமே. அதாவது சட்டங்களின், நீதிமன்றங்களின் செயல்திறன் என்பது 60% லிருந்து 73% குற்றம் சாட்டப்பட்டவர்கள் தப்பித்து விடுவதுதான்!

அதனால்தான்ஆண்ஆத்திசூடிநம்மால் உணர்ந்து உள் வாங்கப்பட்டு நமது அடுத்த தலைமுறையிலாவது இளம்பருவத்திலேயே விதைக்கப்பட வேண்டும். நமது பண்பாட்டில் அங்கக மாற்றம் Organic Transformation ஏற்பட வேண்டும் என்று நமது அருமை ஆசிரியர் அம்மா நளினிதேவி நூல் முழுதும் திரும்பத்திரும்ப வாயே பறையாய் அறைகிறார் என்பேன் .

இதையெல்லாம் ஆண்கள் இரங்கிப் பரிந்து பெண்களுக்குச் செய்யும் ஈகை என்று கருதுவதைப்போன்ற மடமை வேறு இல்லை. அது அனைவரது மனநலமும் முன்னேற்றமும் நாடும் எந்த ஒரு சமூகமும் இயல்பாகச் செய்யவேண்டிய ஒன்று. தானமில்லை.

அதே போன்று பெண் விடுதலை யென்றால் அது ஆணுக்கு நேருகின்ற தோல்வி என்றொரு அகற்றவேண்டிய மனக்கோணல் வேறு இருக்கிறது. ஆண் மையக் கருத்தியல் எல்லாவற்றையும் இரட்டை எதிர்வுகளாக மட்டுமே binary opposition பார்க்கிறது. பெண் விடுதலை யெனில் அதன் பார்வையில் ஆணின் விடுதலைக்குக் குறைபாடு தோல்வி என்றொரு தர்க்கப்பொருத்தமற்ற illogical நிலையிலிருந்து எழுகின்ற பேதமை அது.

ஆண் ஆத்திசூடி சொல்லுவதை நோக்குங்கள் உண்மையில் பெண் பேராற்றல் கொண்டவள். அவளது மென்மை யிலும் வலிமையுண்டு. பெண்மையுள் ஆண்மையுண்டு. பெண்ணின் ஆற்றலைப் பூட்டி வைப்பதால் மானுடத்தின் படைப்பூக்கத் தில் பாதி பழுதுபட்டுப் போகிறது. ஆண் என்ற மீதியிலும் கருக்காய் மிகுதியாய்ச் சாவியாய்ச் சீரழிந்திருக்கிறது

பௌவம் - கடல் - போன்ற ஆற்றல் கொண்ட பெண்ணை சமூகத்தின் இயக்க ஆற்றலில் இருந்து விலக்கி வீட்டினுள் முடக்கினால் சமூக வளர்ச்சிக்குத் தடை நேருகிறது. சமூக இயங்கியலுக்கு social dynamics முரண் வளர்கிறது .வளர்ச்சியை நோக்கியே பாயும் வரலாறு என்னும் பேரியக்கம் இத்தகைய முரண்களை உடைத்தெறிவதன் மூலமே முன்னேறிச் செல்கிறது.

பெண்விடுதலை என்பதுசமூகத்தின் இயக்கஆற்றலைக்கட்டவிழ்த்துவிடுவதன் மூலம் வரலாற்றை அடுத்தகட்ட வளர்ச்சி நிலைக்கு உயர்த்துகிறது. அதனால்தான் அது லட்சியவாதக் கனவல்ல utopian

ideal/dream அல்ல. அறிவியல் பூர்வமான வரலாற்றுக் கட்டாயம். Historical inevitability.

சமன்மைச்சமூகம் குறித்த எத்தகைய பருண்மையான திட்டமும், சித்தாந்த நெறியும், பெண்ணின்றி ஆண்களை மட்டுமே வைத்துக்கொண்டு, தம் கனவை மெய்ப்படுத்திவிட முடியாது.

சமன்மைச் சமூகம் அமைத்து விட்டால் பெண்விடுதலை தானே வரும் என்பது வண்டிக்குப்பின் குதிரையைக் கட்டும் செயல். வையம் என்றால் அது ஆணும் பெண்ணும் சேர்ந்ததே. பெண்ணை நீக்கி ஆணும் ஆணை நீங்கிப் பெண்ணும் வைய விடுதலை எய்துவது முயற்கொம்பு/ பகற்கனவு மட்டுமே.

ஆணாதிக்க அகற்றலும் பெண் விடுதலையும் சமூகமாற்றமும் ஒன்றுக்கொன்று எதிர்நிலைகளாக வைத்துப் பார்க்க வேண்டியவை அல்ல பெண் விடுதலையில் ஆணின் விடுதலை யும் இருவரின் விடுதலையில் சமூகத்தின் விடுதலையும் ஊடும் பாவுமாய் பின்னிப்பிணைந்து இருக்கின்றன. இந்தஇயங்கியலைப் புறக்கணித்துச் செயல்பட முனைந்த எல்லா முயற்சிகளும் தோல்வியாக முடிந்தன என்பதே வரலாறு உணர்த்தும் பாடம். நமக்குத் தொடர்ந்து உணர்த்தி வருகின்ற பாடம். அதைப் புறந்தள்ளிவிட்டுப் பேசுவது கற்கமறுக்கும் மனநிலை. அந்த மௌடீகம் - மூடத்தனம் - நம்மை எந்த சமூக மாற்றத்தையும் சாதிக்க விடாமல் காயடித்து விடும் வல்லமையுடையது. It will emasculate all attempts for radical changes in society.

சார்பு நிலை விரும்பேல் என்று சொல்வதன் மெய்ப்பொருள் ஆண் பெண் அனைவரும் சார்புகள் நீங்கிச் சுதந்திரமாகத் தங்கள் முழு ஆற்றலையும் கட்டவிழ்த்து விடுவதே.

அத்தகைய பெருநோக்குதான் வானம் பொதுவென ஆசிரியரை முழங்கவைக்கிறது ஆணுக்கு இந்த வரம்பு பெண்ணுக்கு அதற்குட்பட்ட வரம்பு என வரைந்து வைத்துக்கொண்டு உலகை வளமாக்கவும் விடுதலை பெறவும் வீண்பெருமை பேசுவதால் எக்காலத்திலும் விடிவு இல்லை. குறுகிய பார்வை விலக்கி பெண்மேன்மையை மீட்டெடுத்து மனிதம் போற்றுவோம். நுண்ணறிவோடு நூல்கள் புதியன செய்வோம். சமன்மை உலகைச் சேர்ந்து சமைப்போம். இனிவரும் இளந்தலைமுறை வேற்றுமைகளைக் களைந்து நீதிகள் புதுக்கிக் கூடிக் கலந்து சுதந்தரமாகப் பெருவாழ்வு வாழப் பயிற்றுவிப்போம் ஆண் ஆத்திசூடியையும் பெண் ஆத்திசூடியையும் இக்காலத்துக்கு ஏற்ற நெறியெனக் கைக்கொள்வோம்.

கண்களும் ஒளியும்போலக்
கவின் மலர் வாசம்போலப்
பெண்களும் ஆண்கள் தாமும்
பெருந்தமிழ் நாடுதன்னில்.
தண்கடல் நிகர்த்த அன்பால்
சமானத்தர் ஆனார் என்ற
பண்வந்து காதிற்பாயப்
பருகுநாள் எந்தநாளோ?

என்ற பாரதிதாசனின் சமநிலையாக்க ஏக்கமும் . நளினிதேவி அம்மாவின் வாழ்நாள் கனவும் ஆண் ஆத்திசூடியின் நூற்பயனும் அதுவே

செயற்கரிய செயல்தான். .

நம்மால் நமக்குச் செயல் கூடும். வள்ளுவப்பேராசான் சொல்லிய குடிசெயல் வகையும் அதுதானே!.

குடிசெய்வல் என்னும்
ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும் (1023)

# வேதாளம் பதில்கள்

## தொடரும் கேள்விகளை கேட்கலாம்.

1. ஆசைக்கும் பேராசைக்கும் என்ன வேறுபாடு?

எம் ஆர் ஜெயந்தி தஞ்சாவூர்

மதிப்புறு முனைவர் ஆக வேண்டும் என்பது ஆசை; அவரே துணைவேந்தர் ஆகவேண்டும் என்பது பேராசை

2. தற்காலத்தில் விருதுகள் வாங்கப் படுகின்றனவா? வழங்கப்படுகின்றனவா?

பா.சக்திவேல் கோயம்புத்தூர்

இரண்டுமே ; பெரும்பாலும் வாங்கிக்கொண்டு வழங்கப் படுகின்றன.

3. கவிஞனாக என்ன செய்யவேண்டும் ?

கி.மணிவாசகன், கோவை

ஒரு வாக்கியத்தை நான்காக உடைத்துப் போடத் தெரிந்திருக்க வேண்டும்

4. கவிதை – வாசகன், ரசிகன், விமர்சகன் மூவருக்கும் உள்ள வேறுபாடு என்ன?

செ.இலட்சுமணக் குமார் ஈரோடு

வாசகன்- வழிப்போக்கன்
ரசிகன்- உயிரையும் தருபவன்
விமர்சகன்- இயந்திரன்

5. படிப்பையும் புலமையையும் எவ்வாறு நோக்கலாம்?

வா.சண்முகம், பட்டீச்சுரம்

வெளிப்படும் திறமையைப் பொறுத்தது

6. தமிழ் வளர்க்கிறோம் என்று நிறைய பேர் முகநூல் குழுமம் ஆரம்பிக்க காரணம் என்ன?

இராஜி கணேஷ், திருவாரூர்

அவர்களை வளர்த்துக் கொள்ளத்தான்.

7. மொய்ப்பணம் உறவிற்கு பாலமா பாதகமா....?.

கார்த்திகேயன், மதுரை

மொய்ப்பணம் பலரின் வாழ்வை மேலே கொண்டுசென்றுள்ளது. எந்த "மேலே" என்பது அவரவரைப் பொறுத்தது.

8. முகநூல் கவிதைக் குழுமங்கள் மலிந்து விட்டபின்... அவற்றின் செயல்பாடுகள் திருப்தி அளிக்கிறதா?

இரா.கவிதா திண்டுக்கல்

எல்லாவற்றையும் அவ்வாறு சொல்லிவிட முடியாது. அவர்களுக்குத் திருப்தியளிப்பதால்தான் தொடர்ந்து நடத்துகிறார்கள்.

9. பிரபலமான கவிஞர்களைக் காக்கா பிடித்துத் திரியும் கும்பல் பற்றி

இரா.கவிதா திண்டுக்கல்

கால்கை ( காக்கா) பிடித்தலால் யாரும் உயர முடியாது.சொந்தத்திறமையே ஒருவரை உயர்த்தும்.

10. தற்காலப் பட்டிமன்றங்களில் பாட்டுகள் மலிந்துவிட்டனவே?

முருகேசன் கும்பகோணம்

சரக்குக் குறைவால்தான்

# இலவு காத்த கிளி !

## பொன்விலங்கு பூ.சுப்ரமணியன்



விநாயகனே வேழமுகத்தோனே... எங்கோ சீர்காழி கோவிந்தராஜன் பாடிய பக்திப் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. “குட்மார்னிங் பாபு!“ என்று லதாவும், ஜெயாவும் கோரஸாக கூறினார்கள்.

“வெரி குட்மார்னிங் என்ன ஜோடிப் புறாக்களே, காலேஜ்க்கு புறப்பட்டு விட்டீங்கபோல் தெரியுதே“ என்றான் பாபு சிரித்துக் கொண்டே.

.

“ஆமாம் பாபு! நீங்க உங்க ஆபீஸ்க்கு கௌம்ப நேரமாகல்லே“ என்றாள் லதா .

“அவர் என்னிக்கி டையத்துக்கு ஆபீஸ்க்கு போனாரு அக்கா“ என்று பாபுவை வழக்கம் போல வம்புக்கு இழுத்தாள் ஜெயா

பாபு தேர்தலில் நிற்கும் வேட்பா ளரைப்போல் இருகைகளையும் கூப்பி, “தாய்க்குலமே தயவுசெய்து, நீங்க இடத்தைக் காலி பண்ணுங்க. உங்ககிட்ட இப்ப பேச்சுக் கொடுத்தால், நான் மதியம்தான் ஆபீஸ்க்கு போக முடியும். இப்ப ஆளை விடுங்க!“என்று கூறிக்கொண்டே மாடிப்படிகளில் வேகமாக ஏறினான் பாபு.

லதாவும் ஜெயாவும் அக்கா தங்கை. லதா பார்ப்பதற்கு அழகாக இருப்பாள். அவள் எப்போதும் புன்னகை பூத்த முகத்துடன் இருப்பாள். ஜெயா அக்காவைப்போல் இல்லாமல், ஓவியர் மாருதி பத்திரிகைகளில் வரையும் இளமை ததும்பும் பெண்போல் அழகாக இருந்தாள். இருவரும் நிறத்திலும் சிவப்பு., உயரம் உருவம் எல்லாம் ஒன்றுபோல் இருந்தார்கள். தெருவில் அவர்கள் நடந்து சென்றால் இரண்டு பேரில் யார் அக்கா, யார் தங்கை என்று கண்டுபிடிப்பது மிகவும் கடினம். தெருவில் இருவரும் கலகலவெனச் சிரித்துக் கொண்டும் பேசிக் கொண்டும் செல்வதைப் பார்த்து பொறாமைப்படாதவர்களே, யாரும் இருக்க மாட்டார்கள். ஜெயாவின் உதட்டுக்கு மேல் காணப்படும் அழகிய மச்சம்தான், அவளை ஜெயா என அடையாளம் காட்டும்.

இருவரும் மதுரை மீனாட்சி கல்லூரியில் படிக்கிறார்கள். இருவரும் படிக்கும்போதே போட்டி போட்டுக்

கொண்டு படிப்பார்கள். கல்லூரியில் எல்லாப் போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றியும் பெறுவார்கள். இருவருக்கும் அழகை வாரிக் கொடுத்திருந்த ஆண்டவன் அவர்களுக்கு அறிவையும் அள்ளிக் கொடுத்திருந்தான்.

ஒருமுறை கல்லூரியில் ஓட்டப் பந்தயத்தில் இருவரும் கலந்து கொண்டார் கள். அப்போது லதா முன்னால் ஓடி வந்து கொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னால் ஜெயா ஓடி வந்து கொண்டிருப்பதைப் பார்த்த லதா, வேண்டுமென்றே சற்று நின்று, தங்கை ஜெயா முன்னால் ஓடிய பிறகு, லதா அவள் பின்னே ஓடினாள். ஜெயாவுக்காக லதா விட்டுக் கொடுத்தாள் என்றுதான் பார்த்தவர்கள் அனைவரும் ஜெயாவிடம் கூறினார்கள். தங்கை ஜெயாவுக்காக விட்டுக் கொடுப்பதில், லதாவுக்கு ஓர் இனம் தெரியாத மகிழ்ச்சி.

கல்லூரியில் படிக்கும்போது இரு வரும் எல்லோரிடமும் ஆண் பெண்கள் என வித்தியாசம் பார்க்காமல் சரளமாக கள்ளங்கபடமற்ற முறையில் சிரித்துப் பேசிப் பழகுவார்கள். அவர்களின் பெற்றோர்களும் பெண்கள் இருவருக்கும் முழுச் சுதந்திரம் கொடுத்திருந்தார்கள்.

அவர்கள் குடியிருக்கும் வீட்டிற்கு எதிர்வீட்டு மாடிக்கு பாபு என்ற இளைஞன் குடிவந்தான். அவனை அக்கா தங்கை இருவரும் பார்த்து ரசித்தார்கள். எடுப்பான மூக்கு, சிரிக்கும் கண்கள். சுருள் சுருளான முடிக்கற்றை அவன் நெற்றியின் முன்புறத்தில் அழகாக விழுந்து கிடந்தது. அவனைப் பார்த்து ஆண்களே பொறாமைப்படும் அளவுக்கு அவன் மிகவும் அழகாக நல்ல சிவப்பாக இருந்தான். அவனிடம் லதாவும் ஜெயாவும் காதலில் மயங்கினார்கள் என்றால் ஆச்சரியப்படுவதிற்கில்லை.

பாபு மதுரையில் உள்ள ஜெயசக்தி என்ற பெரிய நிறுவனத்தில் அசிஸ்டன்ட் மானேஜராக வேலை பார்த்து வந்தான்.

# ஆர் யூ ?

உனக்கும் எனக்குமான
முதல் பார்வை இதுவரை
அரங்கேறியதில்லை

உனக்கும் எனக்குமான
முதல் மொழிச்சத்தம்
இதுவரை ஒலிக்கவில்லை

உனக்கும் எனக்குமான
முதல் கண் கூச்சங்கள்
இதுவரை பிரதிபலிக்கவில்லை

உனக்கும் எனக்குமான முதல் சொல்
இதுவரை எதுவென தெரியவில்லை

உனக்கும் எனக்குமான கையுரசல்கள்
காற்றில் கரைந்ததில்லை

உனக்கும் எனக்குமான கடற்கரைக்காற்று
இன்னும் வீசிக்கொண்டே தானிருக்கிறது

உனக்கும் எனக்குமான
தேநீர் இன்னும் கொதிபடவில்லை

உனக்கும் எனக்குமான
புன்னகைகள் எதிரெதிரே
உணர்வாகவில்லை

உனக்கும் எனக்குமான
சங்காத்தங்கள் இதுவரையில்
வழியிடறவில்லை

உனக்கும் எனக்குமான முத்தச்சத்தங்கள்
காற்றில்தான் ஒளிந்துகொண்டுள்ளன

இருப்பினும்
உனக்கும் எனக்குமான
மனச்சந்திப்புகளில்
யுகாந்திரங்களையும்
காதல் புராணங்களையும்
கடந்துவிட்டோம்

ஒரேயொரு கேள்வி மட்டும்
இருவருக்கும்
நேரில் கேட்கவேண்டி மிச்சமுள்ளது

‘உண்மையில் நீதானே அது!’

**- ரகுநாத் வ**
மதுரை

அவன் மாடியில் உள்ள தனியறையில் தங்கி, அருகே இருக்கும் நிறுவனத்திற்கு சென்று வந்தான். லதாவும் ஜெயாவும் தங்கள் வீட்டு மாடியறையில்தான் தினமும் படிப்பார்கள். அவர்கள் வீட்டு மாடியறையின் ஜன்னல் வழியாகப் பார்த்தால் பாபு அறையில் இருப்பது நன்றாகத் தெரியும்.

லதா, ஜெயா இருவரும் கல்லூரியில் படிக்கிறார்கள் என்றும் அவர்கள் எல்லோரிடமும் நன்றாகப் பேசிப் பழகுவார்கள் என்பதை பாபு அங்கு குடிவந்த ஒரு வாரத்தில், அவர்களைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டான். பாபு ஒரு நாள் மாடியை விட்டு, தெருவில் நடந்து வரும்போது, அவர்கள் இருவரும் எதிர்பாராமல், பாபுவை எதிரெதிரே சந்தித்துக் கொண்டார்கள். பாபுதான் முதலில் சிரித்துக்கொண்டே, “குட்மார்னிங்“ என்று கூறினான். உடனே அவர்கள் இருவரும் சிரித்துக்கொண்டே “வெரி குட்மார்னிங்” என்று பதிலுக்கு கூறி ஒருவருக்கொருவர் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்.

ஒரு வாரத்தில் அவர்கள் மூவரும் ஒருவருக்கொருவர் பெயர் சொல்லி அழைக்கும் அளவுக்கு பழகி நன்கு நட்பில் முன்னேறி இருந்தார்கள். நாள்தோறும் லதாவும் ஜெயாவும் காலை எழுந்தவுடன் தங்கள் வீட்டு மாடியிலிருந்து பாபு எப்போது வெளியே வருவான் என்று ஆவலுடன் இருவரும் காத்திருக்க ஆரம்பித்தார்கள்.

பாபுவுக்கு ஜெயாவின் மீதுதான் பிரியம் அதிகம். தன் காதலை எப்படி ஜெயாவுக்குத் தெரியபடுத்துவது, என்று அவன் யோசிக்க ஆரம்பித்தான். அவன் கொஞ்சம் கூச்ச சுபாவம் உள்ளவன். கைபேசியில்கூட வெளிப்படையாக தன்னோட காதலை அவளிடம் கூற அவன் விரும்பவில்லை என்பதை விடப் பயப்பட்டான் என்றுதான் கூற வேண்டும்.. இப்படியும் சில இளைஞர்கள் இந்த கம்ப்யூட்டர் காலத்திலும் இருக்கத்தான் செய்கிறார்கள். மற்றொரு காரணமும் இருந்தது. லதாவும் ஜெயாவும் எங்கு சென்றாலும் ஒன்றாகவே சென்று வந்தார்கள். எனவே ஜெயாவைத் தனியாக அவனால் சந்தித்துப் பேச முடியவில்லை

ஒரு நாள் லதா காய்ச்சல் என்று அவள் மாடிக்கு வராமல் வீட்டுக்குக் கீழேயே இருந்து விட்டாள், ஜெயா மட்டும் மாடியில் படித்துகொண்டிருந்தாள். இதனை அறிந்து கொண்ட பாபு, அறைக்கு வந்து தயாராக, ஜெயாவுக்காக எழுதி வைத்திருந்த காதல் கடிதத்தை தயக்கத்துடன் அவளிடம் கொடுத்து தன் அன்பை வெளிப்படுத்தினான்.

அவன் கொடுத்த கடிதத்தை ஜெயா பிரித்துப் படித்தாள். அவன் கடிதத்தின் ஆரம்பத்தில்’.... ஜெயா உன் மீது நான் கொண்டுள்ள உண்மையான எனது அன்பை எப்படி, எந்த வார்த்தைகளில் எழுதி வெளிப்படுத்துவது என்று எனக்குத் தெரியவில்லை. எனவே நான் உனக்கு எழுதிய கடிதத்தின் ஆரம்பத்தில் புள்ளிகளாகவே வைத்து விட்டேன். அதில் என் அன்பின் ஆழத்தை உணர்த்தும் மிகச் சிறந்த உனக்கு விருப்பமான, நான் உன்னை எப்படி அழைத்தால் உனக்குப் பிடிக்குமோ அந்த சொற்களைகொண்டு நீயே நிரப்பிக் கொள்.

நான் முதன்முதலாக உன்னோட முகத்தைப் பார்த்தவுடன் ‘ நிலவைப் பிடித்து சில கறைகள் நீக்கி, குறுகத் தரித்த முகம் ‘ என்று ஒரு கவிஞன் எழுதிய அந்தக் கவிதைதான் அப்போது எனக்கு தவிர்க்க முடியாமல் நினைவில் வந்தது’ என்று தன்னோட காதல் கடிதத்தை கவிதையில் எழுதி முடித்திருந்தான். அவன் நிறைய கவிதை, கதைகள் படிப்பவன்போல் இருக்கு என்று ஜெயாவுக்குத் தோன்றியது.

அவன் எழுதிய காதல் கடிதத்தை மீண்டும் மீண்டும் ஜெயா படித்து ரசித்து வானிலே பறக்க ஆரம்பித்தாள். அவள் அந்தக் கவிதையை மிகவும் ரசித்தாள்.

அவனுடைய அழகிலும், நல்ல சம்பளத்தில் அவன் பணியில் இருப்பதாலும் தன் மனதை அவனிடம் பறி கொடுத்தாள். அந்தக் காதல் கடிதம் வந்ததிலிருந்து, அவள் தன் படிப்பில் கவனம் செலுத்தாமல், எதிர் வீட்டுமாடி ஜன்னல் எப்போது திறக்கும் பாபுவை எப்போது தரிசிக்கலாம் என்று ஏக்கமுடன் பார்க்கவும் ஆரம்பித்தாள்.

பாபு, காலையில் பணிக்குச் சென்று விட்டு, தினமும் இரவில் நேரங் கழித்துதான் வீட்டுக்கு வருவான். மாடிக்கு வந்தவுடன் மின்விளக்கைப் போட்டு விட்டு, அவன் எதிர் வீட்டு மாடி ஜன்னலை பார்ப்பான். ஜெயாவும் காத்திருந்து அவன் முகம் பார்த்து மலருவாள். அவன் யாருக்கும் தெரியாமல், அவளை நோக்கி கை அசைத்து, தன் அன்பைத் தினமும் வெளிபடுத்துவான். பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பதுபோல், காதல் வந்தால் கூச்சம், பயம் எல்லாமே பறந்து போகும்போல் அவனுக்குத் தோன்றியது. அவன் இருவரிடம் சிரித்துப் பேசி பழகி வந்தாலும், அவன் மனம் என்னமோ ஜெயவிடம்தான் சென்றது. 'ஓ... இதுதான் காதலா? '



பொன்விலங்கு
பூ.சுப்ரமணியன்

ஞாயிற்றுக் கிழமை வந்தால் போதும் மூவரும் ராஜாஜி பூங்காவுக்கு சென்று விடுவார்கள். அவர்கள் மூவரும் பொழுது போவது கூடத் தெரியாமல் பேசிக்கொண்டு இருப்பவார்கள். பாபு கூறும் ஜோக்குகளுக்கு எல்லாம் லதாவும் ஜெயாவும் விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

பாபுவின் அழகும் படிப்பும் புன்னகையுடன் கூடிய அவனுடைய சிரிப்பும் லதாவையும் கவர்ந்தது என்றால் ஆச்சரியப் படுவதற்கில்லை. அவளும் பெண்தானே. அவளும் பாபுவை மனதிற் குள்ளேயே காதலித்தாள். ஆனால் அவள் தன்னோட காதலைப் பாபுவிடம் வெளிக் காட்டாமல் மனதிற்குள்ளேயே வைத்து காதல் என்னும் பயிரை வளர்த்துக் கொண்டாள். இப்படியும் சில கல்லூரிப் பெண்களும் இந்த நவீன காலத்தில் இருக்கிறார்கள்.

ஜெயா தன்னோட காதலை பற்றி அக்காவிடம் கூறவில்லை. கூறுவதற்கு அவளுக்குப் பயம். ஏன் என்றால் பெற்றோரிடம் அவள் உடனே கூறி விடுவாளோ என்ற அச்சம். அக்காவின் திருமணம் முடிந்து விட்டால், பிறகு தன்னோட காதலைப் பற்றி அக்காவிடம் கூற வேண்டும் என்று மனதிற்குள்ளேயே ஜெயா எண்ணியிருந்தாள்.

இதை அறிந்து கொள்ளாத லதா, பாபுவை ஒருநாள் பார்க்க விட்டாலும் எதையோ இழந்ததுபோல் உணர்ந்தாள். அன்று சரியாக சாப்பிடவும் மாட்டாள். அவளுடைய கல்லூரியின் நெருங்கிய தோழிகள் "என்ன லதா ஒரு மாதிரியாக இருக்கே. சரியாக சாப்பிடாமல் கொண்டு வந்த டிபனையும் கீழே கொட்டறே " என்று கேட்டார்கள்.

அவள், பாபு மீது உள்ள தன் காதலை பற்றி தெரிவித்து விட்டு "எனக்கு இந்த வருஷந்தான் பைனல் இயர், என்னோட படிப்பு முடிந்தவுடன், என் லவ் பத்தி பாபுவிடம் கூறி, அவரை நான் மாரேஜ் பண்ணிக்கொள்வேன். அவர் இல்லைன்னா, எனக்கு வாழ்வே இல்லே" என்பதுபோல் சினிமாவில் வரும் கதாநாயகிபோல் கல்லூரியில் நெருங்கிய தோழிகளிடம் பிதற்றவும் லதா ஆரம்பித்தாள்.

"சரி நீ பாபுவை லவ் பண்ணுவது பாபுவுக்குத் தெரியுமா? அப்படி உன் பாபுவுக்குத் தெரியல்லைன்னா, அவரிடம் போனில் சொல்ல, உனக்குப் பயமாகவோ கூச்சமாகவோ இருந்தால் லெட்டர் மூலமாவது உன் லவ்வை பாபுக்குத் தெரிவித்து விடு. லதா அவர் உன்னை லவ்

பண்ணாரா இல்லையான்னு,! நீ தெரிந்து கொள்வதுதான் உனக்கு நல்லது” என்று எடுத்துக் கூறினாள் தோழி ஒருத்தி.

“பாபு என்னை லவ் பன்றார்ன்னு நான் நன்றாக உணர்ந்து இருக்கேன். என்கிட்டே நன்றாகவே சிரித்துப் பேசிப் பழகுறார். அதனாலே என்னை உறுதியாய் லவ் பன்னார்ன்னுதான் நான் நெனைக்கிறேன். எனக்கும் என் தங்கை ஜெயாவுக்கும் வாட்சப்பில் பொங்கல் க்ரீடிங்க்ஸ் கூட அனுப்பி இருக்கார்ன்னா’ பாரேன்! என் தங்கையை விட என்கிட்டதான் அன்பா பேசுறார். “ என்று பாபு தன்னைக் காதலிக்கிறார் என லதா நம்பிக்கையுடன் கல்லூரித் தோழியிடம் அடிக்கடி கூறிக்கொண்டிருந்தாள்.

“லதா ! உங்க லவ்வெல்லாம் உங்க அப்பா அம்மாவுக்காவது தெரியுமா?“ என்று தோழி விடாமல் அக்கறையுடன் அவளிடம் கேட்டாள்.

“இதுவரைக்கு நான் கூறல்லே. மேலும் பாபுவும் நாங்களும் ஒரே சாதியச் சேர்ந்தவங்க. எங்க லவ்க்கு எந்தவித எதிர்ப்பும் இருக்காதுன்னு நான் நெனைக்கிறேன். எனக்கு எப்போது பார்த்தாலும் பாபு நெனைவாகவே இருக்கு. எப்படி யாவது இந்த வருஷம் படிப்பை முடிப்பதற்குள் என் லவ்வைப் பத்தி என் அம்மா அப்பாவிடம் கூறலாம்ன்னு இருக்கேன்” என்று லதா கூறி முடித்தாள்.

லதாவின் காதலைப் பற்றியெல் லாம் அறிந்துகொள்ளாத பாபுவும் ஜெயாவும் யாருக்கும் தெரியாமல் சினிமா பீச் என்று சுற்றி, தங்கள் காதலை வளர்த்தார்கள். ஒருநாள் பாபு ஆர்வம் மிகுதியில் ஜெயாவிடம் தங்கள் திருமணம் பற்றி பேச்சை எடுத்தான். அதற்கு ஜெயா “பாபு எனக்காக கொஞ்சம் பொறுத்துக்குங்க. என் அக்கா லதாவுக்கு வரன் பாத்துக்கிட்டு இருக்காங்க. அக்கா மாரேஜ் முடிந்தவுடன் நம்ம மாரேஜ் தான்” என்று பதில் கூறி அவனைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள். தனக்குத் தெரியாமல் தன் வாழ்வில் விதி விளையாடப் போவதை அறியாமல் ஜெயா இருந்தாள்.

லதாவுக்கு தேர்வெல்லாம் முடிந்து விட்டது. ஒருநாள் அவள் மாடி அறையில் புத்தகங்கள் எல்லாம் தாறுமாறாக கிடந்ததைப் பார்த்து, அவற்றை எல்லாம் ஒழுங்காக அடுக்கி

## உருண்டோடும் நிலையற்ற உருவமே

வடிவங்கள் பலவாராய்...
வாய்த்திடவும் வந்ததுவாம்
வாழ்வினை நிர்ணயிக்கும்....
வசந்தத்தின் சாவிதானே

காலந்தோறும் தேடினாலும்...
கைகளில் சேருவதில்லை
நியாயங்களை விலையாக்கும்....
துரோகத்திற்கும் துணைபோகும்

வறுமையை விரட்டிவிட....
வாய்க்குமொரு காசுபணம்
பொறுமையாய்ச் சேர்ந்துவரும்....
பொல்லாப்பைத் தந்திடுமே

அரும்பாடு பட்டுத்தான்....
அனைவருமே உழைக்கின்றோம்
எறும்பாகச் சுறுசுறுப்பாய்....
என்னாளும் உழைக்கின்றோம்

பெரும்பாடாய் இருக்கிறது...
பணக்காரன் ஆவதற்கே
கரும்பான வாழ்வென்று...
கண்ணெதிரே வந்திடுமா

**பாலா**

வைத்தாள். அப்போது ஜெயா புத்தகத்தில் மறைத்து வைத்திருந்த ஒரு கடிதமும் ஒரு போட்டோவும் கீழே விழுந்தது. அவள் அதனை எடுத்து படித்துப் பார்த்தவுடன் அதிர்ச்சி அடைந்தாள். அக்கடிதம் பாபு அவள் தங்கை ஜெயாவுக்கு எழுதிய காதல் கடிதம். அந்தப் போட்டோவில் அவனும் ஜெயாவும் கட்டிப்பிடித்து எடுத்துக் கொண்ட போட்டோவில் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

'ஜெயாவா? இப்படி என்று லதா கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை. இதுநாள் வரை தன்னிடம்கூட அவள் பாபுவைக் காதலித்ததைப் பற்றி கூறவில்லையே. அவள் என்னிடமாவது கூறியிருந்தால், இப்படி நான் பாபுவை என் மனதளவில் அவருடன் மனக்கோட்டை கட்டியிருக்கமாட்டேனே ! ' என்று கலங்கி நின்றாள்.

லதாவிற்கு அன்றையிலிருந்து சாப்பிடவோ யாரிடமும் பேசவோ பிடிக்கவில்லை. தன்னோட நெருங்கிய தோழி கூறியதை தான் அப்போது அலட்சியப்படுத்தியதையும், இப்போது நினைத்துப்பார்த்துலதா வருத்தப்பட்டாள். ஆனால் அவள் வீட்டில் தன் மனநிலையை வெளிக் காட்டாமல் ஏதோ சாப்பிட்டேன் என்ற பேருக்கு சாப்பிட்டாள். தங்கை ஜெயாவிடம் பாபு பற்றி எதுவும் கேட்காமல் எப்போதும்போல் பேசினாள். அவள் தன் காதலை தங்கைகாக விட்டுக் கொடுக்கவும் தன் மனதிற்குள்ளேயே தயாராகி விட்டாள்.

லதா கடைசியாக பாபுவை பார்க்கலாம் என்று நினைத்து அறைக்கு வெளியே வந்தாள். பாபுவை அவன் பெற்றோர் அவசரமாக சென்னைக்கு வரும்படி போனில் தகவல் வந்து, அவன் சென்னைக்கு சென்றவன் பதினைந்து நாட்கள் ஆகியும் இன்னும் வரவில்லை என்பது அப்போதுதான் அவளுக்கு நினைவு வந்தது.

லதா உணர்ச்சி வசப்பட்டு பெண் புத்தி பின் புத்தி என்பதை தன் செயலில் காட்டி விட்டாள். அவள் ஒருநாள் இரவு அவசரப்பட்டு தூக்க மாத்திரைகளை விழுங்கி தன்னோட கதையை முடித்துக் கொண்டாள். ஜெயாவுக்கு தன் அக்காவின் இறப்புக்கு தானும் பாபுவுந்தான் காரணம் என்று அவளுக்குத் தெரியவில்லை. அக்கா லதாவின் பிரிவு ஜெயாவை மிகவும் வாட்டியது. இங்கு இப்போது பாபு இருந்தாலும், தனக்கு ஒரு ஆறுதலாக இருக்கும் என பாபுவை அப்போது நினைத்துகொண்டாள்.

திடீரென்று எதிர்பாராமல் ஒருநாள் பாபு ஜெயா வீட்டுக்கு வந்தான். பாபுவைப் பார்த்தவுடன், ஜெயாவுக்கு அக்கா இறந்த துக்கமெல்லாம் மறந்து முகம் மலர்ந்து அவனை வரவேற்றாள். ஆனால் பாபு எந்தவிதமான உணர்வுகளையும் வெளியே காட்டிக்கொள்ளாமல் "ஜெயா என்னை மன்னித்து விடு!. என் வயதான அம்மா அப்பாவைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்ற அவசரத்தில், நான் இங்கு இருக்கும்போது எனக்கும் தெரியாமல் எங்க ஊர்ல இருந்த என்னோட அத்தை பெண்ணை நான் மாரேஜ் பண்ணுறத்துக்கு ஏற்பாடு செய்துட்டாங்க. என்றவன் மேலும் தொடர்ந்தான்.

"நீயும் உன் அக்கா மாரேஜ்க்குப் பிறகுதான் நம்ம மாரேஜ்ன்னு வேறு நீ உறுதியாக கூறிட்ட, அதனால நான் வேறு வழியில்லாமல் மறுப்பு ஏதும் கூறாமல் என் மாரேஜ்க்குச் சம்மதம் சொல்லிட்டேன்.." என்று அமைதியாகக் கூறினான். அவன் தன்னோடதிருமணஅழைப்பிதழைஎடுத்து ஜெயாவிடம் கொடுத்துக்கொண்டே " ஜெயா ஐ யாம் வெரி சாரி இனிமேல் நாம் நல்ல நண்பர்களாகவே இருப்போம்" என்று கூறிவிட்டுச் சென்றான். அதற்கு எந்தவிதப் பதிலும் கூறமுடியாமலும் அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமலும் அவன் செல்வதையே, கண்களில் கண்ணீர் பெருக பார்த்துக்கொண்டே ஜெயா இலவு காத்த கிளியாக நின்றாள்.

■




# வங்கியிலிருந்து வந்ததொரு கவிதைப்புயல்

தமிழ் படித்தவர்களைவிட தமிழ் ஆசிரியர்களைவிட மற்ற துறைகளில் உள்ளவர்களே தமிழ்க்கவிதை யாப்பதில் வல்லவர்களாக உள்ளனர். ஒரு தேசியமயமாக்கப் பட்ட வங்கியில் உயர்பதவியில் இருந்து இந்தியாவின் பல மாநிலங்களுக்குச் சென்று பணியாற்றி ஓய்வு பெற்றவுடன் தமிழ்க் கவிதை மேல் கொண்ட பற்றின் காரணமாக அதனை யாப்பதற்கான வழிமுறைகளைக் கற்றுத் தேர்ந்து தற்போது மாணவராக மட்டுமின்றி ஆசிரியராகவும் மிளிரும் ஒரு வங்கி அதிகாரி. பெரியார் கொள்கைகளில் இம்மியும் வழுவாத கொள்கைக் கோமான். கவியரங்க மேடைகளில் முழங்கும் மரபுத்தங்கம். மதுரைக்கருகில் உள்ள சோழவந்தானில் பிறந்தாலும் தற்போது சென்னையில் வசிக்கும் ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி பாவலர் செல்வ மீனாட்சி சுந்தரம் அவர்களே இம்மாத நேர்காணலுக்குரிய கவிஞர். அவரிடம் நமது ஆசிரியர்குழுவில் உள்ள தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன் அவர்கள் கேட்ட வினாக்களையும் அதற்கு அவர்தந்த விடைகளையும்  காண்போம்.

**மரபுக்கவிதையின் மீது ஏன் திடீரெனக் காதல் வந்தது?**

எண்பதுகளில் திராவிடர் கழக மேடைகளில் புரட்சிக் கவிஞர் பாடல்களை சேலம் அருள்மொழி அவர்கள் சிறுமியாக உணர்ச்சி பொங்கப் பாடக் கேட்டது முதல் பாதிப்பு. பின்னர் மதுரை புரட்சிக் கவிஞர் வாசகர் வட்டம், மதுரை புரட்சிக் கவிஞர் பேரவை போன்ற அமைப்புகளில் இணைந்து ஒரு பொறுப்பாளனாகப் பணியாற்றக் கிடைத்த வாய்ப்பு.

மொத்தத்தில் மரபுக் கவிதைகளின்பால் என்னை ஈர்த்தது புரட்சிக் கவிஞரின் பாடல்களே!

தொண்டு செய்து பழுத்த பழம்
தூயதாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்!

பெரியாரை ஓவியமாய் வரைந்த புரட்சிக் கவிஞரின் மறக்கவொண்ணாப் பாடல்.

அடுத்து அன்புச் சகோதரர் சுப. முருகானந்தம் அவர்களின் வாழ்வியல் குறள் வெண்பா.

**ஏன் புதுக்கவிதை ஹைக்கூ போன்றவற்றை முயற்சிக்கவில்லை?**

.

வெறுப்பு ஏதுமில்லை. புதுக்கவிதை ஹைக்கூ கவிதைகளின் பொருண்மையும் நுட்பமும் இன்னும் கற்றேனில்லை. கருத்தினைச் சொல்லும் ஊடகமாகத் தான் கவிதையைப் பார்க்கின்றேன். அது எந்த வடிவமாக இருந்தால் என்ன? முதலில் மரபு வகைகளைப் பழுதறக் கற்பதே எனது எண்ணம். இன்னும் மரபைக் கற்றுக்கொள்ளும் மாணவனாகத்தான் உள்ளேன். தேர்ந்த மரபுக் கவிஞனே புதுக் கவிதையிலும் வெற்றிபெற்றுள்ளார்கள் என்பது மறுக்கவியலாத உண்மை. நானும் எழுதுவேன் வரும் நாட்களில்.

**விருத்தங்கள் எழுதுவதில் வல்லவராகத் தங்களை உருவாக்கிக் கொண்டது எவ்வாறு?**

01.பாட்டரசர் கி.பாரதிதாசன் அவர்களின் வழிகாட்டுதலோடு பாவலர் பயிலரங்கத்தில் பெற்ற எழுத்துப் பயிற்சி. அதைத் தாண்டி பல நாட்கள் அவருடன் மணிக்கணக்கில் இலக்கியம் இலக்கணம் பற்றி அவருடன் பேசியினூடாய்ப் பேசிப் பெற்ற தெளிவு. சென்ற வாரம் கூட என்னை அழைத்து நான் எதுகையைக் கையாள்வதில் செய்யும் ஒரு பிழையைச் சுட்டினார். நான் செய்தது தவறில்லை என்றாலும் புலமை குன்றிய செயல் என்று சுட்டினார். பாட்டரசர் சொல்வதுபோல் மரபுக் கவிதையை ஆசான் ஒருவரிடம் நேரடியாகக் கற்றால் புலமை மேம்படும். இன்றும் தொடர்ந்து வழிநடத்தும் பேராசானாய் பாட்டரசரைப் பெற்றதென் பேறு.

02.தொடர்ந்து எழுதுவது. மற்றவர்களின் கவிதைகளைப் படிப்பது. பாவலர் பயிலரங்கத்தில் எனது முன்னோடிகளான திரு.இராம வேல்முருகன், திரு. சிவப்பிரகாசம் திரு.சுப முருகானந்தம் ஆகியோரின் பாடல்களை பயிலரங்கத்தில் படித்துச் சுவைத்தது.

கவிஞர் சுரதா அவர்களின் தலைமையில் திருமணக்கோலத்தில் பாவலர்



03. கவிக்கோ துரைவசந்தராசனின் பாடல்களைப் படித்துச் சுவைத்து அதன் நுட்பங்களைக் கண்டு வியந்தது. பின்னர் அவருடன் நட்பு கொண்டு பழகும் வாய்ப்பில் இன்னும் பல நுட்பங்களை அறியத் தந்தார். முதலில் சீர்களை அடர்த்தியாக எப்படிப் படைக்க வேண்டும் என்பது பற்றி விளக்கம் தந்தார். சமகாலச் சொல்லாடல்களை அறிவியல் சொற்களைப் பாடலில் பயன்படுத்தும் நுட்பம் அறிந்தவர் கவிக்கோ. புதுக்கவிதையை மரபு வடிவத்தில் எழுதும் திறன் வாய்த்தவர் அய்யா கவிக்கோ அவர்கள்.

இவர்கள் அனைவரின் கலவைக் கொடையே இன்றைய நான். விருத்தம் இயற்றுவதில் வல்லவன் நான் என்பதை ஏற்றேனில்லை.

**பெரியார் மீது அளவற்ற பற்று வரக் காரணம் என்ன?**

இன்று நான் மானமுள்ள மனிதனாக வாழும் வாய்ப்பைத் தர வாழ்நாள் முழுவதும் போராடியவர் என்பதால். ஆணாக இருந்து பெண்ணுக்கும் உயர்ந்த இடைநிலைச் சாதியில் பிறந்தும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் செல்வந்தராய்ப் பிறந்தும் ஏழைக்கும் வக்காலத்து வாங்கிய கட்டணம் வேண்டா வழக்கறிஞர்! தான் எதுவாக இல்லையோ அந்த எதிர்நிலையை ஆதரிப்பது அரிய குணம். அவர்தான் பெரியார்.

**கடவுள் மறுப்பாளர்கள் ஆன்மிகவாதிகளுடன் அதிகம் நட்பு பாராட்டுவதில்லை என்பது உண்மையா?**

தங்களின் இந்தக் கருத்து உண்மையானால் என்னால் குடும்பம் நடத்த இயலாது. எனது இணையர் கடவுள் நம்பிக்கை கொண்டவராக திருமணக் காலகட்டத்தில் மாறிவிட்டார். பலமுறை அவருக்குத் துணையாகக் கோயிலுக்கும் சென்றுள்ளேன். இன்றும் என்னை சூடம் ஊதுபத்தி பூ வாங்கி வரச் சொல்வார். எங்கள் மகனும் பகுத்தறிவாளர்கள் இறை நம்பிக்கை அற்றவர்கள். இறை நம்பிக்கை தனியரின் விருப்பம் எனும் புரிதல் கொண்டவன் நான்.

இன்றும் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வேண்டிப் போராடுபவர்கள்

கவி முழக்கம் செய்யும் பாவலர்






தஞ்சைத் தமிழ் மன்றம் கவியரங்க மேடையில் கவிஞர்களுடன்
பாவலர் செல்வ மீனாட்சி சுந்தரம்

நாங்கள். கடவுள் எங்கள் எதிரி அல்ல. ஏற்றத்தாழ்வுகளைப் போற்றும் சாதிமுறையே எங்கள் எதிரி. சாதியத்தைத் தூக்கிப் பிடிக்கும் மதக்கோட்பாடுகள் எங்கள் எதிரி. இந்த மதங்களின் அடிக்கட்டுமானமாக ஆணிவேராக கடவுள் என்னும் கருத்தை இந்த மதவாதிகள் முன்நிறுத்துகிறார்கள். எனவே நாங்கள் கடவுள் என்னும் கருத்தியலை எதிர்க்கிறோம். இறைநம்பிக்கை கொண்டவர்களை அல்ல.

நான் நாமக்கல் கிளையில் வங்கியில் மேலாளராகபணியாற்றிக் கொண்டிருந்த வேளை (2009) பெங்களூரில் இருந்து ஆஞ்சநேயரை வழிபட வந்த பக்தர் ஒருவர் எனது அறைக்குள் நுழைந்தார். கோயில் கூட்டத்தில் அவருடைய பணப்பை திருடப்பட்டு விட்டது. கையில் பணமும் இல்லை வங்கி அட்டையும் இல்லை. ஆனால் அவருக்கு பெங்களூரில் உள்ள எங்கள் வங்கியின் கிளையில் வைப்புத் தொகையும் கணக்கில் பணமும் இருந்தது. என்னிடம் வந்து உதவி கேட்டார் ஊருக்கு செல்வதற்கு பணமே இல்லை என்று. தேவையான அடிப்படை பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துகொண்டு பெங்களூர் கிளையைத் தொடர்பு கொண்டு அவருடைய கணக்கிலிருந்து ரூபாய் ஐயாயிரம் எனது கணக்கிற்கு மாற்றச் சொல்லி வாங்கி பின்னர் அவருக்கு ஊருக்கு திரும்பிச் செல்ல பணத்தைக் கொடுத்து அனுப்பினேன். இந்த நடவடிக்கைக்கு முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்வதாக எழுதிக் கொடுத்த பின்னரே பணம் எனது கணக்கிற்கு மாற்றப்பட்டது. அப்போது அவரின் துயர மனநிலையைக் கண்டு இரங்கித்தான் இந்த உதவியைச் செய்தேனே தவிர அவர் பெங்களூரில் இருந்து நாமக்கல்லுக்கு ஆஞ்சநேயரைக் கும்பிட வந்த ஒரு பக்தர் என்ற வெறுப்பு என் மனத்தில் துளியும் இருந்ததில்லை என்பதே உண்மை.

தந்தை பெரியார் எங்களுக்கு சொல்லிக் கொடுத்த அடிப்படைப் பாடமே மனிதநேயம். அதை எப்படி மறப்பது? பெரியாரியவாதிகள் மனிதனை மனிதனாக மட்டுமே பார்க்கக் கற்றவர்கள்.

உங்கள் சொந்த ஊரான சோழவந்தான் பற்றி.



திராவிடர் கழகத் தலைவர் ஐயா கி. வீரமணி அவர்களுடன் பாவலர்

நான் பிறந்தது வளர்ந்தது எல்லாமே மதுரையில் தான். என் அப்பா பிறந்தது சோழவந்தானில். சில வேளைகளிள் சோழவந்தானுக்குச் சென்று வந்துள்ளேன். எங்களுக்குச் சொந்தமான ஒரு தென்னந் தோப்பு வைகை ஆற்றங்கரையை ஒட்டியே இருந்தது அந்த தோப்பில் ஓடியாடி விளையாடியது ஆற்றில் நீர் வரத்து இல்லை என்றாலும் வெட்டிய ஓடுகாலில் குளித்து மகிழ்ந்ததும் மறக்கவியலாத நினைவுகள். மதுரை வட்டாரத்தில் சோழவந்தான் வெத்தலை பலரும் விரும்பிக் கேட்பது. வேரை மறந்தவர்கள் இல்லையே நாம் எனவே எனது சொந்த ஊரின் மேல் பற்று உள்ளவன்தான் நான்.

தங்கள் வங்கிப் பணியில் மறக்க இயலாத நிகழ்வு ஏதாவது நடந்ததுண்டா?

காலை 9.20 மணி. வங்கிக்குக் கிளம்பத் தயாராக இருந்தேன். எனது அலைபேசியில் என்னை துணை மேலாளர் அழைத்தார். எங்களுடன் பணியாற்றிய வேளாண் அதிகாரி வங்கியின் முதல்மாடியில் உள்ள கழிவறையில் தீயிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். முதல்நாள் இரவு 8 மணிக்கு நானும் அவரும் ஒரு கூட்டத்தில் பங்கேற்றுத் திரும்பினோம். இன்று காலை இப்படியொரு கொடூர முடிவு. திருமணம் செய்யாத இளைஞர்.

அடுத்த பத்து நிமிடங்களில் வங்கியில். கொண்ட தொடர்புகளைப் பயன்படுத்தி காவல் துறை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினேன். நான் வருவதற்கு முன்னரே தீயணைப்புத்துறைப் போராளிகள் வந்து தீயை அணைத்துவிட்டனர். 10.20க்கு இறந்தவரின் உடல் மருத்துவமனை எடுத்துச்செல்லப்பட்டது. 10.30 க்கு வங்கிப்பணிகளை தொடங்கிவைத்து மருத்துவமனை சென்றேன். எல்லா சட்டபூர்வமான நடைமுறைகளையும் முடித்துவிட்டு உடலை எடுத்துக் கொண்டு 60 கிமீ தொலைவிலுள்ள அவரது சொந்த ஊருக்குச் சென்று இறுதிச்சடங்கை முடித்துவிட்டு இரவு வீடு திரும்பினேன்.

மறுநாள் வங்கியில் ஒரு நடைமுறைச் சிக்கல். வங்கியின் கழிவறை முதல் தளத்தில் உள்ளது. அதில் ஒன்றில்தான் நண்பர் தீயிட்டுச் செத்தார். மாடிக்குச் செல்லவே அஞ்சினர். கழிவறை வசதியின்றி எப்படி ஊழியர்கள் 10 மணி நேரம் பணியாற்ற இயலும்.

நகராட்சி சென்று அதிகாரிகளைப் பார்த்துப் பேசி விபத்து நடந்த கழிவறையைச் சுத்தம் செய்ய ஏற்பாடு செய்தேன். கருகிய உடலின் சிதறல்கள் செருப்பு எரிந்தும் எரியாத உடையின் பகுதிகள் என அரைச் சாக்குப்பை கழிவு அகற்றப்பட்டது.

உடன் பணியாளர்கள் சிலர் வங்கியில் ஹோமம் நடத்த வேண்டினார்கள். எனது

நம்பிக்கை வேறு பணியாளர்களின் உணர்வு வேறு. அடுத்த இரண்டு நாட்களில் சுவருக்கு புதிய வண்ணத்தில் சுண்ணாம்பு பூசி திங்கள் கிழமை ஹோமம் நடத்த ஏற்பாடு செய்தேன். திங்கள் கிழமை ஊழியர்கள் பணிக்குத் திரும்பிய போது அவர்களின் தலையில் தீர்த்தம் தெளிக்கப்பட்டது. பின்னர் இரண்டு மூன்று பேர் சேர்ந்து மாடியில் உள்ள கழிவறைக்குச் செல்ல ஆரம்பித்தார்கள். ஒரு மாத காலத்தில் இயல்புநிலை திரும்பியது. எனது பணிக்காலத்தில் நடைபெற்ற மறக்கவியலாத துன்பியல் நிகழ்வு இது.

இதில் நான் எனது பணிக்காலத்தில் பின்பற்றிய இரண்டு கோட்பாடுகள் அடங்கியுள்ளன.
1. தலைவன் தனது செயல்பாடுகளில் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும்.
2. இக்கட்டான நெருக்கடி நேரத்தில் தளராது உறுதியுடன் நின்று இன்னும் கூர்மையுடன் செயல்பட வேண்டும்.

**இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்களில் பணியாற்றியிருப்பீர்கள். உங்கள் பார்வையில் எந்த மாநிலம் அழகானது?**

பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் பணியாற்றியபோது ஜம்மு வரையில் இருந்த கிளைகளை நிர்வகிக்கும் மண்டல மேலாளர் பொறுப்பு. இரண்டு மாநிலங்களிலுமுள்ள பல பகுதிகளுக்கும் சென்று வந்துள்ளேன். பொற்கோயிலுக்கும் சென்று வந்துள்ளேன்.மும்பையின் பரபரப்பான 8 வருட வாழ்க்கை. வானுயர்ந்த அடுக்குமாடிகள். மனிதர்களைக் காட்டிலும் பரபரப்பாய் இயங்கும் மின்சாரத் தொடரிகள். நாரிமன் முனையின் அழகிய கடற்கரைச் சாலை. எவ்வளவு மழை பெய்தாலும் அடுத்த நிமிடம் உருண்டோடி மழைநீர் தேங்காத மங்களூர்

இவை எல்லாவற்றையும் விட ஆந்திராவில் விஜயவாடாவில் பணியாற்றும் போது நான் கண்டு வியந்து மகிழ்ந்தது கோதாவரி ஆற்றைத்தான். பரந்து விரிந்து நீர் நிறைந்து ஓடும் கோதாவரியைப் பார்த்து மகிழ்வது கண்கொள்ளாக்காட்சி. அதன் இருகரைகளிலும் அமைந்துள்ள கிழக்குக் கோதாவரி மாவட்டமும் மேற்குக் கோதாவரி மாவட்டமும் பசுமை வளம் நிறைந்த வயல்வெளிகளால் ஆனது. குறிப்பாக கிழக்கு மாவட்டத்தில் உள்ள மலர்த் தோட்டங்களைப் பார்த்து மெய்மறந்து நின்றதுண்டு. குடும்பத்தாருடன் கோதாவரி ஆற்றில் ஒரு நாள் முழுவதும் படகுச் சவாரி செய்து மகிழ்ந்ததை மறக்கவியலாது.

எது கவிதை எனும் பகுதியில் கம்பர் கோதாவரியைப் புகழ்ந்து பாடியதை

கவிஞர் ஆரூர் தமிழ்நாடன் அவர்களுடன் பாவலர் செல்வ மீனாட்சி சுந்தரம். நடுவில் கவிக்கோ துரை வசந்தராசன்





உவமைக்கவிஞர் சுரதா சிலையருகே கவிக்கோ துரை வசந்தராசன், கவிஞர் வெற்றிப்பேரொளி இவர்களுடன் பாவலர்

இராம.வேல்முருகன் அவர்கள் மேற்கோள் காட்டியிருப்பார். படித்து வியந்தேன். போக்குவரத்து வசதிகளற்ற அந்தக் காலத்தில் கம்பர் எப்படிப் போய் கோதாவரியைப் பார்த்திருப்பார் என்று வியந்தேன். கோதாவரி ஒரு அழகிய கவிதை.. எனக்கு மிகவும் பிடித்தது.
கூடுதலாக ஒரு செய்தி...
கோதாவரி மாவட்டத்தின் கிராமங்களில் கூட குதிரையில் அமர்ந்திருக்கும் ஒரு ஆங்கிலேயரின் சிலையைப் பார்க்கலாம். அவர் பெயர் ஆர்தர் காட்டன். வாய்க்கால் வெட்டி கோதாவரியை பல கிராமங்களுக்கும் அழைத்துச் சென்றவர். எங்கள் மதுரை மாவட்டத்து பென்னி குயிக் போல (முல்லைப் பெரியார் அணையைக் கட்டியவர்).

அதிகமாகத் தங்களுக்குக் கோபம் வரும் எனக் கேள்வியுற்றுள்ளேன். அதனால் ஏதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா?

நான் கவிஞனாவதற்கு அதுவும் ஒரு காரணமாயிருந்திருக்கலாம். எனது கோபம் நிலைக்காத கோபம். வன்மம் பாராட்ட மாட்டேன். வங்கியில் நிர்வாகப் பொறுப்பில் இருந்ததால் பல சமயங்களில் தவறிழைத்தமைக்காகவும், கடமை தவறியதற்காகவும் உடன் பணியாளர்களைக் கோபத்துடன் கடிந்து கொண்டதுண்டு. அடுத்த சில மணிகளில் அதை மறந்து அவர்களுடன் இயல்பாய்ப் பேசுவேன். முதுகில் குத்துவது எனது இயல்பில்லை. அதனால் முகத்திற்கு நேரே திட்டிவிடுவேன். ஒரு பிரச்சனையை இன்னொரு பிரச்சனையோடு இணைத்துப் பார்க்க மாட்டேன். இது பணியிடத்தில்.

நண்பர்கள் வட்டாரத்தில் பெரும்பாலும் கோபப்பட மாட்டேன். பிரச்சனை என்று வந்தால் விலகிச் சென்று விடுவேன். உறவை மேலும் கெடுக்காமல் இருக்க இது உதவும். வீட்டில் அவ்வப்போது கோபப்படுவது உண்டு. நண்பர்கள் உறவினர்களுடன் மோதல் வந்து அது எனது தன்மானத்திற்கு குந்தகம் செய்தால் என்னால் சினத்தை அடக்க முடியாது. எந்த நிலையிலும் தன்மானத்தை இழந்தவனில்லை விலைபேசியவனுமில்லை. வன்மம் கொள்ளாக் கோபக்காரன்.

விரைவுக் கேள்விகள் ஒரு சில வார்த்தைகளில் பதில்

1. துரை வசந்தராசன் - மரபுப் போர்வையுள் புதுக்கவிதை. சொல்லாக்கம் செய்யும் இயந்திரம்.

2. ச.சுப்ரமணியன் - எளிய எழுத்தாளனுக்கும் விலையில்லா வெளிச்சம் பாய்ச்சும் தமிழ்த் தொண்டர்.

3. பாட்டரசர் பாரதிதாசன் - தமிழ்க் கடல்.

4. சுப முருகானந்தம் - நாற்பது

ஆண்டுகளாக இணைந்து பயணிக்கும் இணைகோடு.

5. ஆசிரியர் கி வீரமணியார் - பெரியாரின் இன்றைய வாழும் உருவம்.

6. தளபதி மு.க.ஸ்டாலின் - கலைஞர் எனும் மரபுக் குதிரையை விட வேகமாய்ப் பாயும் அரபுக் குதிரை.

7. தந்தைப்பெரியார் - தமிழருக்கு மானமும் அறிவும் உரிமையும் பெற்றுத் தர நாளும் உழைத்த போராளி.

8. பேரறிஞர் அண்ணா
பெரியார் எனும் கவிதையின் பொழிப்புரை.

9. சமூக நீதி
மனித நேயமற்ற ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட சமூகத்தைச் சமநிலைப்படுத்த வந்த நீதி

10. சமத்துவம்
''அனைவருக்கும் அனைத்தும்'' - பெரியார்

"எண்ணம் பிறந்த மின்னல்" பிறந்த கதை பற்றி..

எனது கனவை நனவாக்க வந்த மின்னல். இந்நூல் பாவலர் பயிலரங்கத்தில் எனது பயிற்சிக் காலத்தில் நான் எழுதிய பாடல்களின் தொகுப்பு. எனது மூன்றாம் குழந்தை. எனது கவிதைப் பயணத்தின் வரலாற்று ஆவணம்.

எதிர்கால இலக்கு என்ன?

நிறையப் படிக்க வேண்டும். நிறைய எழுத வேண்டும். தமிழ்ச் சமுதாயத்திற்கு பயனுள்ள செயல்களை வரும் நாட்களில் செய்ய வேண்டும்.

இக்கால இளைஞர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?



இக்கால இளைஞர்கள் நம்மைவிட புத்தி கூர்மை மிக்கவர்கள். எல்லா முனைப்புகளிலும் மனித நேயம் அடிக்கட்டுமானமாக இருக்கட்டும். புதுமை வேண்டும். மரபு மறக்கப்பட வேண்டியதில்லை. அதன் படிமங்களில் நமது பண்பாட்டின் வரலாறு புதைந்துள்ளது. தாய்மொழி இனநலம் போற்றுங்கள். உங்களின் முகவரி மாற்றப்படாமல் காத்துக் கொள்ளுங்கள்.

வளரும் கவிஞர்களுக்கு உங்கள் அறிவுரை

நிறைய படியுங்கள். நிறைய எழுதுங்கள். எழுதியவற்றை மீள்பார்வை செய்யுங்கள். பிழையில்லாமல் எழுத இலக்கண அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.

தமிழ்நெஞ்சம் இதழ் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

அய்யா அமின் அவர்களின் கைம்மாறு கருதாத் தமிழ்த் தொண்டிற்கு எனது தலைதாழ்ந்த வணக்கம். வளம்பொருந்திய ஐரோப்பாவின் பிரான்சு நாட்டில் வசித்தாலும் பொருளீட்டலை முதன்மையாய்ப் போற்றாது தமிழ்த் தொண்டாற்றுவது அரிய செயல். தன்னலம் கருதாத அந்த தமிழ்த் தொண்டருக்கு எனது வணக்கமும் வாழ்த்தும்.

தமிழரின் நெஞ்சமெலாம் தமிழ்நெஞ்சம் நிறையட்டும்.




மதிப்புரை
(ஏவாள் கடித்த ஆப்பிள்)

தமிழ்நெஞ்சம் அமின்

நூல் தொடர்புகளுக்கு :
9840865737

இலக்கியத்தில் அழகியலை ஆக்கிரமிப்பவை கவிதைகள் தானென சொல்வேன் நான். அதிலும் காதல் கவிதைகள் என்றால் கேட்கவா வேண்டும். எமக்குள் போதையேற்றி, திரிசங்கு சொர்க்கத்தில் மிதக்க வைக்கும் தன்மை காதல் கவிதைகளுக்கு உண்டென சொல்லலாம்.

அத்தகைய கவிதைகளை கவிஞர் லீலா லோகநாதன் எழுதி வெளியீடு கண்டிருக்கும் 'ஏவாள் கடித்த ஆப்பிள்' கவிதை நூலில் காணலாம். இதை வாசிக்க வாசிக்க வியப்பு விரியும் விழிகளில் காதல் தடம் பதித்துச் செல்வதையும் உணரலாம்.

'கொஞ்சம் குளிரைக் கொன்று
வசந்தகாலப் பழத்தோட்டத்தில்
நுழைவதாய்
நெஞ்சுக்குழியில் மிடறு மிடறாய்
இதழ் வருடி இதமாய்
இதயத்துள் இதமாய்
இயல் இசை பாடி
நாடகமாய் மனம் நுழைகிறது
தேநீருடன் உன் காதலும்'
( தேநீருடன் காதல்)

அடடா! ரசனையின் ஆக்கிரமிப்பில் நான்..

'என்னை மட்டும் நனைத்துச் செல்லும்
அவன் நினைவுச்சாரலில் நனைதலும்
தொலைதலும் அழகாய் தானிருக்கிறது'
(தேவப்பொழுதுகள்)

இந்தக் கவியெனும் சாரலில் மனம் நனைத்து தொலைதலும் அழகுதான்!

'நீயில்லா நிமிடங்களில்
என் கடிகாரத்தில்
முட்கள் நகர்வதில்லை...
ஆதலால் காதலாகி விடேன்
கவிதைகள் புனைகிறேன்'
( காதலாகி விடேன்)

காதலின் சிறைக்குள்,
இன்மை என்பது
அனைத்திலும் வெறுமையை
உணர வைக்கும்.
அந்த நொடிகள்
நரகவேதனையின்
முதற் கட்டமோ?
ஆதலால் காதல் செய்வீர்!

'மரித்துக் கிடக்கும்
மனதைத் தீண்டிப்போ
மரணத்தை வெல்கிறேன்....'
(இதழ்களால் இசைத்து விடு)

ஆம்,காதலின் சக்தி மரணத்தையே வெல்லக்கூடியது தான்.

‘பிழையில்லாக் காதலை
பிசகில்லாது பரிசளித்த
பெருநேசப் பிரியனே
நித்தம்
மூளைக்குள் ஊற்றெடுக்கும்
நம் காதல் நித்யமே!’
(நேசப்பிழை)

இந்த நித்யக் காதலில் திளைத்து நெக்குருகி நிற்கும் மனம் ஒருகணம் அசைவற்று நங்கூரமிடுகிறதே!

‘தினம் உன்னைப்
பார்க்க வேண்டியதில்லை
மணிக்கொரு முறை
உன்னோடு பேச வேண்டியதில்லை

உன்னை மட்டுமே பிடிக்குமென
அடிக்கடி நம் நேசத்தை
நீ நிரூபிக்கத் தேவையில்லை.

கருணையின்றி சிறைப்படுத்தும்
என் ஞாபகத் துணுக்குகளில்
கைதாகத் தேவையில்லை.

நொடிதோறும் ஞாபகப்பொதி சுமந்து
உன்னில் நானும் என்னில் நீயும்
பெருங்காதலாய் மூழ்கியிருக்கையில்..’
(ஞாபகப்பொதி)

காதலில் எனது நிலைப்பாடும் இதுவேயாகும். அதனால் இக்கவிதையை மிகவும் ரசித்தேன்.

இப்படிக் காதலின் நெருக்கத்தைச் சுவை ததும்ப இதைவிட யாரால் சொல்ல வியலுமோ நானறியேன். இவரின் சிந்தைக்குள் புகுந்து களிநடம் புரியும் காதல் வாசிப்பவர் உள்ளங்களிலும் மகிழ்ச்சியை விதைத்துச் செல்ல வாசகர் உள்ளங்களும் காதல் வயப்படும் இவர் கவிதையில். அப்படி ஓர் ஈர்ப்பு இவர் கவிதைகளில் உள்ளது.

கவிதைகளைக் காதலின் இழை களால் ரம்மியமாக நெய்திருக்கிறார் கவிஞர் லீலா லோகநாதன். இங்கு நான் குறிப்பிட்டவை கொஞ்சமே! ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோற்றை பதம் பார்ப்பது போன்று இக்கவிச்சாகரத்தில் மூழ்கி சில முத்துக்களை மட்டும் உங்கள் பார்வை நூலில் கோர்த்திருக்கிறேன். இனி இதில் முழுகி முத்துக்குளிப்பது உங்கள் பொறுப்பு.

பாரதி பதிப்பக வெளியீடாக 114 பக்கங்களுடன் மலர்ந்துள்ள இவ்வழகிய நூல், தமிழ் இலக்கியத்துக்கு கிடைத்த அரிய பொக்கிஷமாகும். இவர் இதுபோன்ற இன்னும் பல காவியங்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு சமர்ப்பிக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

## தொடுவானம்:

தவழும் குழந்தைக்கு முன்
ஒரு பொம்மையை வைத்து
இதை வந்து தொடு என்று
அதன் அக்கா குழந்தையைப்
பணிக்கிறாள்

தொடுவதற்கு குழந்தை
தவழ்ந்து வரும்போது
பொம்மையை மேலும்
பின்னால் இழுத்து
தூரத்தை அதிகமாக்குகிறாள்

ஒருகட்டத்தில் குழந்தை
சடைந்து போகிறது

கண்களால் நாம்
தொட்டுக் கொள்ளும்
கடலும் வானமும்
தொட்டுக் கொள்ளும் இடமும் அப்படியே

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை
என்பார்கள்
கண்களுக்கு எட்டியதும்
கைகளுக்கு எட்டுவதில்லை.

- மு.ஆறுமுகவிக்னேஷ்

# யாதும் ஊரே!

உலகன்று பரந்துபட்ட நிலையினிலும் மண்ணில்
உவப்புடனே பாடினாரே கணியன் நின்று!
துலங்கிடுமவ் வரியதுவோ யாதும் ஊரே!
தொட்டுவிடும் உலகோரின் மனத்தை வென்று!
நிலப்பகுதி நீர்ப்பகுதி கடந்து செல்ல
நீண்டதொரு பயணம்தான் அன்று வேண்டும்!
வலம்வருவோம் உலகமின்று சுருங்கி நிற்க
வடித்திடுவோம் எண்ணமதில் அனைத்தும் நம்மூர்!

பண்பாட்டைக் கற்பிக்க உரைத்தார் அன்று!
பல்நுட்பம் பெருகியதும் உணர்ந்தோம் இன்று!
மண்வளமும் வாழ்வியலும் மாறி னாலும்
மனமென்றும் மனிதமென்று கூறும் வேளை
விண்வெளியைத் தொட்டதின்று மனித ஆற்றல்!
வியப்பல்ல மானுடத்தின் அறிவின் ஏற்றம்!
கண்ணெனவே கொள்ளுகின்ற மொழியின் வேர்கள்
கவினுலகில் பரவிடுமே யாதும் ஊராய்!

பிரிவினைகள் பேதங்கள் வேண்டாம்! வேண்டாம்!
பிறிதொன்றாய் நினைக்காமல் இணைவோம் ஒன்றாய்!
உரிமைகளும் பெருமைகளும் கிடைக்கும் தானே!
உயிர்நேயம் கொண்டாலே எல்லை வானே!
எரிகின்ற ஏழைகளின் பசியைப் போக்கி
எந்நாளும் உதவிடுவோம் யாதும் ஊராய்!
திரியதனைத் தூண்டிவிடின் சுடரே காண்போம்!
தீரமுடன் தலைமுறைகள் வாழச் செய்வோம்!

முனைவர் ஓசூர் மணிமேகலை

# விடுதலை



இரா.இராதை கண்ணன்

காக்கை கரையும் முன்பே கடிகாரம் அலாரம் அடிக்கத் தொடங்கியது. கண்களை கசக்கி விழிகளைத் திறந்து போர்வையை விருட்டென சுருட்டியபடி அலாரத்தை நிறுத்தி விட்டு மீண்டும் படுக்கையில் சரிந்தாள் வைரம். உடல் ஓய்வு எடுக்க நினைத்தாலும் தன் அருகில் உறங்கிக் கொண்டிருக்கும் மகனுக்காகவும் கணவருக்காகவும் புடவையை சரிசெய்து முன்நெற்றியில் விழும் முடிகளை ஒதுக்கிவிட்டவாறே படுக்கையில் இருந்து எழுந்தாள் வைரம். கதவைத் திறந்து வானத்தில் உறங்காது விழித்துக்கொண்டிருக்கும் விடிவெள்ளியை பார்த்து தன்னை சமாதானப்படுத்திவாறு பல்துலக்கி ஒரு குவளை தண்ணீரை சில்லென்று தொண்டையில் இறங்க தாகத்தை தீர்த்துக் கொண்டு வாசலில் பசுஞ்சாணம் தெளித்து மாக்கோலமிட்டு அடுப்படியை சுத்தம் செய்து வீட்டைப் பெருக்கி அடுப்பில். பால்குக்கரை வைத்து இறக்கி காப்பி கலந்து குடிக்கும் சில நிமிடங்கள் மட்டும் ஓய்வு எடுத்தாள் வைரம். கடகடவென காய்களை நறுக்கி சமையல் செய்து நிமிரும் போது மணி ஏழரையைத் தாண்டியது.

அரசுப் பணியில் கணக்கராக பணிபுரியும் வேலுவையும் கல்லூரியில் கொரோனாவால் ஒன்றரை வருடங்களாக அலைபேசியை மட்டுமே பயன்படுத்தி படித்த மகன் விதுனையும் அவசரமாக எழுப்பினாள். இருடி,மணி எட்டாகட்டும் என்று மீண்டும் குட்டித் தூக்கம் போட்டார் கணவன் வேலு. அம்மா, இதோ வந்துடுறேன் என்றவாறே காலைக் கடன்களை முடித்து டைனிங் ஹாலில் வந்தமர்ந்து அம்மா சாப்பாடு ரெடியா என்றவாறே அலைபேசியில் முகநூலில் நட்பு வட்டங்களை தேடினான். முகத்தில் வழியும் வியர்வையை துடைத்துக் கொண்டிருக்கும் பொழுதே வேலுவும் சாப்பிட அமர்ந்து எனக்கு தோசை போட்டு வா என்று கட்டளையிட்டான். பக்கத்தில் இருந்த டிவி ரிமோட்டை வேலுவிடம் எடுத்து குடுத்துவிட்டு அடுப்பங்கரைக்கு சென்று தோசை வார்த்து கணவனுக்கு பரிமாறினாள். அவர்கள் சாப்பிடுவதற்குள் மதிய உணவை இருவருக்கும் கேரியரில் எடுத்து வைத்தாள். கணவனுக்கு கைக்குட்டை எடுத்து வந்தாள். மகனுக்கு பாலும் கணவருக்கு காபியும் போட்டுக் கொடுத்தவாறே கைகளைக் கழுவ தண்ணீர் எடுத்து வந்தாள்.

தன்னுடைய அலுவலகக் கோப்புகளை கையில் எடுத்துக் கொண்டு இருசக்கர வாகனத்தில் தன் மகனையும் ஏற்றிக்கொண்டு தெருமுனை திரும்பும் வரை விழிகளில் இருந்து விலகிய பிறகு வீட்டிற்குள் நுழைந்து பண்ட பாத்திரங்களை சுத்தம் செய்து தண்ணீர் அருந்தி அமர்ந்த வைரம் ஒரு வரம்.

வாழ்க்கை என்னும் கூண்டுக்குள்ளே சிறகுகள் சுருக்கி உறவுகள் வளர்க்கும் வைரம் போன்ற பெண்களுக்கு துளிர்க்குமா விடுதலை?






வெண்பாப் பயணம் 9

# இரட்டைக் கிளவி - நேரிசை வெண்பா

கண்கள் பளபளக்கும் கத்தியோ வாயொழுகும்
பண்கள் கலகலப் பாட்டொலியோ - மண்ணில்
தளதள..தே கத்தால் தகதகக்க வைத்தாள்
வளவளவென் றேன்வெண்பா வந்து..!

**வள்ளி முத்து**

.

கலகலக்கும் பேச்சினில் கண்மயங்க வைத்து
வெலவெலக்கச் செய்தேதான் வென்றாய் - சலசலக்கும்
என்றனுள்ளம் காதலினால் என்னை இழந்திட
மென்னுயிரை யாட்கொண்டால் மேல் .

**சரஸ்வதி பாஸ்கரன்**

.

குறுகுறு முத்தம் குழல்வாய் கொடுக்க
துறுதுறு உள்ளம் துடிக்க - விறுவிறு
பாடும் விடலை பனியே படபட
தாடும் இதழினால் தாங்கு

**மன்னை மணிமாறன்**

.

வெடுவெடுத்த பேச்சு மிகமிகச் சூடாய்ப்
படபடத்த போக்கெதற்கு பாவாய் குடு குடென்றே
ஓடி முகம் பூசி ஒப்பனைகள் தூக்கலாய்
வாடி படம் பார்க்க மக்கு.

**அன்புவல்லி தங்கவேலனார்**

கசகச வேர்வையில் காற்றாய் மாறி
நசநச கோடையில் வந்தால் - மசமசன்னு
தூங்கிடும் யாவும் துடிப்புடன் துள்ளிட
ஏங்கித் தவிக்குதே ஏன்?

**செ. இராசா**

விடுவிடு வென்றே விரைந்து நடப்பார்
படபட வென்றேநான் பார்க்க.. நடநட
என்பார் அவரை எனக்குள்ளே திட்டியபின்
அன்பேஎன் றோடிடுவேன் அங்கு..

**மைதிலிதயாளன்**

குறுகுறு வென்றே குழந்தைபோல் பார்த்துத்
துறுதுறு வென்றே தொடர்வாள் - முறுவல்
கலகல வென்றே கவியொலி காட்டும்
கலகலப்பை யூட்டிவிடும் காண்

**அய்யப்பன் அய்யப்பன்**

சலசலக்கும் நீரோடை சாய்ந்தகதிர் அந்தி
பலபலவாம் புட்கள்தம் பண்கள் - கலகல
என்றுநகை சிந்துகின்ற என்மனைவி பக்கத்தில்
இன்பத்திற் குண்டோ இணை !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

அடஅட ஏன்டா அழகுத் துணியைக்
கொடகொடன்னு தைத்துக் கெடுத்தாய் - வெடவெடக்கும்
பாட்டியாநான்! கண்திறந்து பாருடா! காலமெல்லாம்
வேட்டிதான் தைப்பியா வே?

**சு.வி.லட்சுமி**

தளதளப்பில் வாழ்வோர் தரமிழந்து போயின்
பளபளக்கும் எல்லாம் பரியும் - வளவளத்த
பேச்சால் உலகளப்பார் பேராசை இல்லாரை
ஏச்சொல் புரிதல் இழிவு

**கவிஞர் வீக பொன்னையா.**

நகைநகை யென்றலைவர் நானிலத்தே என்றும்
பகைபகை யஃதே அறிவீர் - மிகையில்
தொகைதொகை யாகச் செலவழித்துத் தொல்லை
வகைவகையாய்க் கொள்வதோ வாழ்வு?

**சுரேஜமீ**

கடுகடுவென் றாகிடக் காணவே நாளும்
கிடுகிடுக்க ஏனோ துடிக்க - படபடத்துப்
பார்க்கையில் பக்கமே பாவையும் காணவே
நோக்கிச் சிரித்தவள் நோவு

**வாசன் சாவி**

குறுகுறுத்த மெல்லிடை கூப்பிடத் துள்ளி
விறுவிறுப்பாய் நெஞ்சங்கு வீழ - முறுமுறுப்புப்
பொன்முகத்தாள் சாடையால் போவென்றாள்; வேறொருவன்
நின்றிருந்தான் ஒத்திகைக்காய் நேர்

**விசு. இம்மானுவேல்**

வெலவெலத்துப் போனேன்! விரும்பும் தலைவன்
பளபளக்கும் புன்னகையால் பார்த்தான்! - கலகலக்கும்
சத்தத்தால் பெற்றோரின் சம்மதத்தை வாங்கியதும்
முத்தத்தை யிட்டான் முனைந்து.

**மாலதி திரு**

படபடத்து நிற்கின்றேன் பார்வையின் தாகம்
கடகடவென் றோடியது காதல் - சடசடத்து
வேர்த்து விழிமூடி வெட்கத்தால் உள்ளுக்குள்
சேர்ந்துக் குனிந்தேன் சிரித்து.

**தென்றல் கவி**

குறுகுறுத்த பார்வையும் கொஞ்சுமொழிப் பேச்சும்
கிறுகிறுத்துப் போகவைக்கும் கிள்ளை - பரபரப்பாய்ப்
போவாள் வருவாள் பொறுத்திருப்பேன் என்றேனும்
ஆவாளாம் என்தாரம் ஆம்

**இரா.அழகர்சாமி**

கடகட வண்டி கடந்ததே ஆம்பூர்
சுடச்சுட வந்த சுவையுள் - மடமட
நாசியில் சென்றதே நல்லதொரு வாசமதில்
பாசியாய் நின்ற பதம்

**பாண்டிச்செல்வி கருப்பசாமி**

படபடக்கும் நெஞ்சோடு பக்கம் நெருங்கக்
கடகடவென் றேநகைத்த கன்னி - சுடச்சுடப்
பெய்தாளே முத்தமழை! பெய்து திகைக்கவே
செய்தாளே அன்பாய்ச் சிரித்து!

**செல்லமுத்து பெரியசாமி**

சலசலத்து ஓடைதான் சத்தமிடல் போல
வழவழப்பாய் பேசிடும் வாயால் - கலகலப்பு
செய்வாரும் உண்டு; செவிநோக தீச்சொல்லைப்
பெய்வாரும் உண்டறிந்து பேசு...!

**ஜ.க.நாகப்பன்**

கடகடத்த வண்டி கதகதப்பாய் ஊர்ந்து
சடசட என்று சரிந்து - படபட
வென்றே விழுந்து வழியின்றி ஆழத்தில்
சென்று தொலைந்தது செல்.

**உடுவிலூர் கலா**

வெடவெடத்துப் போகும் வெகுவாகப் பேச
படபடத்துப் பார்க்கும் பயத்தில் - கடகடத்துப்
பற்களிங்கு ஆடிடுதே பாவையை நோக்கவும்
சொற்களும் ஓடுமேன் சொல்?

**வா.சண்முகம்**

வெலவெலத்துப் போனேன் வெட்கம் மிகவாகிப்
படபடப்பு வந்ததே பாவியேன் - விலகியே
கடகடவென் றோடிக் காதமாய் ஏகினேன்
கடமையெனத் தொடர்கிறது காதல்.

**தென்கரை தாயுமானவன்.**

பளபளக்கும் யாவிலும் பற்றினையும் வைக்க
மளமளன்னு சாயமெல்லாம் மாறும் - தளதளக்கும்
தண்ணீர் குடமாகத் தாங்காத் துயரமும்
கண்களில் நீராய்க் கசிந்து!

**நிறைமதி நீலமேகம்**

படபடப்புத் தொற்றவந்தாள் பைங்கிளி! வெட்கம்
சடசடவென் றென்னில் சரிய; - வெடவெடப்பை
வென்று மடமடவென் றோரிதழ் முத்தமிட்டேன்
தென்றலென மெல்லத் தவழ்ந்து.

**வானதி சந்திரசேகரன்**

தகதகக்கும் மீன்விழியின் தாக்குதலால் நெஞ்சில்
திகுதிகுவென் றேறியதோர் தீயே! லகலகவென்
றோரொலியைக் கேட்டே னுயிர்பயத்தில் ஓடுகின்றேன்!
காரிருளில் கண்ட கனா!

**சுந்தர ராசன்**

குறுகுறு வென்றொரு கூர்பார்வை மேய
துறுதுறு வென்றே தொடர்ந்தேன் - மொறுமொறு
வென்றென் மனம்நொறுங்க வேர்த்தேன் உடலெங்கும்
இன்றுபூப் பூக்குதே ஏன்?

**க.சங்கரபாண்டியன்**

படபட வென்று  பனிக்கட்டி மாரி
சடசட வென்றொரு சப்தம் - குடுகுடுவென்(று)
ஓடிப்போய்க் காணுங்கால் ஓலை சரசரக்க
மாடியில் ஆடும் மகள்.

**இப்னு ஹம்துன்**

குடுகுடு தாத்தா குழந்தையைப் பார்த்துத்
தடதட வென்று தமிழில் - கடகட
வென்று கதைசொல்லி வாழ்த்தும் வழியதனால்
அன்றுமுதல் பாசமழை அங்கு.

**இப்னுஹம்துன், பரங்கிப்பேட்டை**

படபட வென்றுப் பறப்பவர் மெய்யைச்
சுடச்சுட  நோய்களும்  தொற்றும் - நடநட
என்றே மருத்துவர் எய்யும் உரையம்போ
அன்றே செவிபுகு மாம் !

**பாவலர் கோவதன்.**

படபடவென் றோடிப் படியில் குதித்து
மடமடவென் றேறி மயங்கி -  துடிதுடித்(து)
சந்தோச மான சயனம் -  பயத்துடன்
வந்தேன் திரும்பியது வாழ்வு.

**முத்தமிழ்ச்செல்வி**

நசநச வென்றே நடைப்பாதை ஈரம்!
பிசுபிசுத்து ஒட்டியமண்! பின்னால் - கிசுகிசுப்பாய்
பெண்குரல்! பின்னிரவில் பேய்தானோ? அச்சமுடன்
கண்திறந்தேன் எல்லாம் கனவு!

**பாவலர் அருணா செல்வம்**

துறுதுறுப் பார்வையால் தூண்டிடச் செய்வாள்
சுறுசுறுப்பாய்ச் சுண்டி இழுப்பாள்... கறுகறுக்
கூந்தலோ கார்மேகக் கூட்டணியாம்....கண்ணழகில்
ஏந்திடச் செய்வாய் எனை.

**வ.இராமதாசு  தென்பசியார்**

.

படபடக்கும் நெஞ்சம் ! விடம்போல் விலைகள்
கிடுகிடு வேகத்தில் ஏற்றம் - துடிதுடிக்கும்
பாட்டாளிக் கூட்டம் ! படும்பாடுத் தீரவே
நாட்டில் வரவேண்டும் நாள்

**ஞால ரவிச்சந்திரன்**

.

பளபள வென்று பளிங்கா யொளிரத்
தளதள மேனியோ தங்கம் - சலசல
ஈர்க்கு மவள்முக மிம்சை புரிந்திட
வேர்க்குதே னென்முக மே

**சுதேன் சுதேசி**

.

சடசடத்துப் பெய்திட்ட சாரல் மழையால்
வெடவெடத்துப் போனேன் விருப்பாய்ப் - படபடக்கும்
கண்ணசைத்துப் பாங்காய்க் கரம்பிணைய ஈரமான
மண்ணில் நடந்தால் மணம்.

**கு. கமலசரஸ்வதி**

.

கடகட கத்தல் படபடப் பார்வை
தடதட ஆட்டம் சரியோ? - நடப்பாய்
மடமட வென்றே மலைமுடி மேலே
தொடத்தொட நீயும் தொடர்ந்து.

**படைக்களப் பாவலர் துரை. மூர்த்தி**

.

கமகம என்றதே காதர்பாய் குஸ்கா
குமகும ஆவிவர உண்டேன் - டமடம
என்றேதான் என்வயிற்றி லோர்வெடியாம் என்செய்ய
நன்றாக நாறுகிறேன் நான்.

**முனைவர். சுந்தரராஜ் தயாளன், பெங்களூரு.**

.

சலசலத்தே ஓடும் சுருளியாற்றின் ஓரம்
கலகலத்தே ஆர்த்துக் கவருமிளம் பெண்கள்
மலர்களைக் கொய்கையில் மண்ணுளிப் பாம்பு
வெலவெலத்துச் சென்றனர் வீடு.

**இரா. கவிதா, திண்டுக்கல்**

.

# வெண்பா போட்டி (பயணம்) 10

போட்டியின் கால அளவு - ஜூலை 23 முதல் ஆகஸ்ட் 07 வரை
முழுமையாகப் படிக்கவும்

## தலைப்பு : ஆண்டவனிடம் ஓர் வரம் கேட்டல்...

ஒருவர் பல வெண்பாக்கள் எழுதினாலும், முதல் வெண்பா மட்டுமே போட்டிக்காக ஏற்கப்படும்

போட்டியின் விதிகள் : --
1.
நேரிசை வெண்பா மட்டுமே எழுதவேண்டும்.

2..
ஆண்டவனே..., கடவுளே ... , இறைவனே..., தெய்வமே...
எனும் இந்த நான்கு சொற்களில் ஏதேனும் ஒரு சொல் வெண்பாவின் #ஏழாம் சீராக அமையவேண்டும்.

3.
நீங்கள் கேட்கும் வரமானது உங்களின் தனிப்பட்டத் தேவையாக மட்டுமே இருக்கவேண்டும்.

(எ-கா) : -
குடியிருக்க நல்ல வீடு வேண்டும், படுத்துறங்க கட்டில் வேண்டும்,
ஆசையில்லாத மனம் வேண்டும்... என்பதுபோல்....
நகைச்சுவை ஆனாலும் ஏற்றுக்கொள்ளப் படும்......

4.
ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை மற்றொருவர் பயன்படுத்தக் கூடாது.

இதோ எ - கா வெண்பா....

> **மாற்றார்கள் சென்றால் மகிழுந்தில்; என்னுள்ளம்**
> **ஆற்றாமல் வாடுகிறேன் ஆண்டவனே; - ஏற்றமுற**
> **அள்ளித்தா என்றும் அழவில்லை; கிள்ளித்தா**
> **துள்ளுந்தை யேனுந் தொடர்ந்து.**

அசத்துங்கள் கவிஞர்களே....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே...அது நகைச்சுவையானாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.

காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்....

தளர்வுகள் : - தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்.... தமிழ்நெஞ்சம் அமின் மற்றும் தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு,

நூல் :
**லாந்தர் விளக்கின் வெளிச்ச சிதறல்கள்**
**(தன்முனைக் கவிதைகள்)**

நூலாசிரியர் :
**கவிஞர். அன்புச்செல்வி சுப்புராஜு**

## மதிப்புரை




“லாந்தர் விளக்கின் வெளிச்ச சிதறல்கள்“ ஏகாந்தம் தொட்டு, எதார்த்தம் பேசி, நுட்பக் காதல் நயமாய் கூறி நகரும் அழகிய மாலை நேரத்து கதம்பமாலை. மரிக்கொழுந்து. சாமந்தி, இளஞ்சிவப்பு அரளியும், சம்பங்கி யுமாய் பச்சை, மஞ்சள், சிவப்பு, வெள்ளை என மிளிர்ந்து, விரைந்தோடும் கால்களையும் நிறுத்தி. கணநேரம் கண்ணைக் கவர்ந்து, கருத்தில் நுழைந்து, நகர்ந்து சென்றாலும் நுகர்ந்த மணம் நாசியைத் தாண்டி யோசிக்க வைக்கும் கலவைதான் கவிஞர். அன்புச்செல்வி சுப்புராஜு எழுதியுள்ள இந்த அழகியத் தன்முனைக் கவிதைகள்.

இயற்கையைப் பேசும் அழகியல், மனப்பதிவுகளின் நுட்பங்களைப் படம் பிடிக்கும் மனம் சார்ந்த கவிகள், சூழல் பேசும் சீரிய வரிகள், மழையைப் பார்த்ததும் மகிழும் மழலையாய் குழந்தை மனக்கவிதைகள் என அணிவகுக்கும் கவிதைகள் ஒவ்வொன்றும் ஒருவித அழகு. சில தூரத்து விண்மீன்களாய்ப் பார்க்கப் பார்க்க நெருங்கி வந்துக் கண் சிமிட்டிக் கதை பேசுகின்றன. சில விடிவெள்ளியாய் விழி பார்த்த விநாடியில் வியக்க வைக்கின்றன.

முரண்களால் முட்டி மோதி முதிய பருவத்தை முள்காடாய் மாற்றும் மனித மனத்தை மெல்ல அதட்டி, அன்பாய் பேசி, முரண்களைத் தகர்த்து, வியந்து உலகம் விழி விரிக்க அந்திமத்தில் ஆழ்ந்த நிம்மதி காண் என்ற நேர்மறைச் செய்தியை கூறும் கவிதை, நூலாசிரியரின் ஆழ்ந்த அனுபவத்தையும் அதை நயம்பட நான்கு வரிகளில் கவிதையாக்கும் திறனையும் சொல்கிறது. நூலின் தொடக்கப் பக்கங் களில் வரும் இக்கவிதை மேலும், மேலும் கவிஞர் கூற வரும் கருத்துகளைக் காண நூலின் அடுத்தப் பக்கங்களைப் புரட்டிப் படிக்கத் தூண்டுவதாக அமைந்துள்ளது.

அதைத் தொடர்ந்து வரும் இரண்டு போதி மரங்களைப் பற்றிக் கூறத்தான் வேண்டும். முதலாவது, ஆசைகளை அள்ளித் தின்னும் போதி மரச்சுள்ளிகள். அது ஆழமும் நுட்பமும் நிறைந்தது என்றால். மறு போதி மரக்கவிதையில். ஆசை நிலா எட்டிப்பார்த்து அழகியல் வகைமையில் சிக்குவது சிலாகிப்பு.

> கொத்தாய் சுருளும் மனிதம்
> மீண்டும் மரமாகி விடுவோமா
> ஆலோசனை செய்கின்றன
> மேசைகளும், கட்டில்களும்.

அழிந்துபடும் மனிதத்தை பேதமையை சுட்டும் வார்த்தைகளை சுட்டெரிக்கும் சூழழியல் கவிதைக்குச் சான்றாக்கலாம்.

மௌனமும், நிசப்தமும் கவிஞரின்

பல கவிதைகளுக்கு நிறைவாகப் பின்னணிக் குரல் கொடுத்துள்ளன.

கேட்கப்படும் கேள்விகள்
வேள்வியில் வீழ்கின்றன
ஆழ்ந்த மௌனங்களில்
விடைகளும் அடக்கமாகின்றன.

அதைத் தொடர்ந்து,

வாய் மூடி பேசினாய்
விழிகள் மொழிபெயர்த்தன
மெல்ல அசைகிறது
எனது நிசப்தம்.

சிற்றுயிர் கொண்டு வாழ்வின் பெரும் நம்பிக்கை பேசும் கவிதையாக மலர்ந்துள்ள மலர்வனத்தின் துகள்கவிதை. பயணப்படும் மகரந்தப் பார்வை பெருவழி இயக்கத்திற்கு சிறுதுளி சான்று.

தேடலை அடைவோம்
நம்பிக்கையுடனே பயணிக்கிறது
வண்டின் கால்களில்
ஒட்டியிருக்கும் மகரந்தம்.

கனிந்த காதல் பேசிவரும் கவிஞர் "நினைவில் இருந்து விலகி நில்லேன்" என இறைஞ்சுவது நகர்ந்து விடாதே நான் உன்னை அன்றி வேறு என்ன எழுதிவிடுவேன் என நினைக்கிறாய் என்று கூறுவது போல் வந்தமர்ந்த குளிர்ச்சொற்கள்.

ஒருங்கே சுமந்துகொண்டு ஒட்டாதென நடத்தும் ஓரங்க நாடகத்தை ஓசையில்லாமல் பேசும் மனநேசக் கவிதை இந்நூலின் அழகிய அங்கமாகி அணி சேர்க்கிறது.

சுயம் இழந்தாலும் மானம் காக்கும் சாயமிழந்த ஆடை என எதார்த்தம் பேசும் எளிய எழுத்துக்கள், ஆயின் ஏற்படுத்தும் தாக்கமோ அதீதம். ஞானப்பெருவெளியும் பரவெளி வெளிச்சமும் கை கோர்த்தும் வரும் கவிதைகள் பக்கம் 40ல் பார்வைக்குக் காத்திருக்கின்றன.

நிசப்தத்தின் நிதர்சனம் கூறும் நிச்சய மொழிகளை தூரிகையாக்கி பெருவெளிக்கு கைகாட்டியாக நிற்கும் மைல்கல் கவிதைகளும் இதில் காணக் கிடைக்கின்றன.

நிகழ்காலத்தை நிர்கதியாக்கி விட்டு, மெல்ல விழுங்கும் மலைப்பாம்பாய் எதிர்காலத்தின் குரல்வளை நெரிக்கும் இறந்த காலத்தின் நினைவு நீட்சிகளைக் கூறும் கவிதையினையும், மௌனத்திற்கு ஆயிரம் அர்த்தங்கள் கூறும் அகராதியின் பக்கங்களையும்பற்றிக்கூறாமல்நகர்ந்தால் லாந்தர் வெளிச்சத்தில் சிறந்தவைகளை மறந்தவள் ஆகிவிடுவேன்.

உதிர்ந்த எச்சத்தில்
முளைத்த மரத்திடம்
பெருமை பேசுவதில்லை
எந்தப் பறவையும்...

மேலோட்டப் பார்வைக்கு ஒரு சூழழியல் சொற்கோவையாகத் தெரிந்தாலும் சுடர்விடும் சுத்தவெளியின் அத்வைதம் பேசி ஆணவம் அழித்துவிடடா அற்பப்பதரே! என சொல்லும் (செல்லும் )ஆழங்கள் அது பல காத தூரம்.

சுடும் எதார்த்தத்தின் எடுத்துக் காட்டாய் வரும் சொற்கள். .. இதோ உங்கள் பார்வைக்கு... வாழ்க்கையின் முரணுக்கு முன்னுதாரணம் என்றும் கூறலாம்.

அடிவயிற்றுத் தீயை
அணைக்க வந்ததோர் சடலம்
வெட்டியான் முகத்தில்
கீற்றாய் மகிழ்ச்சி.

தனிமை, வெறுமை, வெம்மை என வரிசை கட்டி வந்து மனஆழம் கூறும் மானுடக் கவிதைகள் ஒவ்வொரு முறை படிக்கும் போதும் புதுப்புது பொருள் தரும் பன்முகம் கொண்டவையாக உள்ளன.

நிதர்சனங்கள் உணர்த்தும்
நிறைவின்மை வெளியில்
நிசப்தமாக உழல்கிறது
தனிமைக் குடுவை.....

இவ்வரிகளை ஒரு சோறு பதமாக கொள்ளலாம்.

வனப்பேச்சி வண்ணத்தமிழை வசப் படுத்தி,வானம்நோக்கிகைவிரித்துவிடுக்கும் வேண்டுகோள், ஆஸ்திரேலியாவின் கக்கிய கனல் காட்டினையும், கலிஃபோர்னியாவின் வருடாந்திர காட்டுத் தீயையும் கிளறி கண்முன் கொண்டு வரும் சூழலியல் சார்ந்த ஆத்மார்த்த கவிதைகள்.

எதிர்வினைஆற்றவியலாஎல்லையில் முளைக்க முயலும் விருப்ப விதைகள்.

விலங்கிட்ட மனத்தை வேடிக்கை மட்டுமே பார்க்கக்கூடிய நாதியற்ற சுதந்திரம்.

வலுவிழந்த கணத்தின் வாழ்க்கைப் பாடம் உறுதியென விளைய..நிலைத்த நிம்மதி.

போனால் போகட்டுமென வெஞ்சினம் விடுத்தது நிமிர்வின் உச்சம்.

இழிந்தலையும் பழித்தலையும் கடந்து செல். பேரன்பும் பிரியங்களும். மாபெரும் சக்தியாய் கிட்டுமென்ற ஞானச் சிதறல் லாந்தர் விளக்குத் தரும் வாழ்க்கை வெளிச்சங்கள் ஆகின்றன.

ஆழ்மன வடுக்களை வலக்கரத்தால் புறந்தள்ளி, புறப்படு காத்திருக்கிறது எனக்கான பேரன்பும் பிரியங்களும் நிரம்பிய வாழ்க்கை என்ற விவேகம் விதைத்த கவிகளின் பட்டியல் தான் மேலே காணக் கிடைக்கிறது.

தன்னைத் துளைத்த வண்டிற்கு நன்றி கூறும் மூங்கில்

ஓங்கிய மரத்தின் உச்சிக் கூடு

# அவள் தமிழ் காதலி

உயிரெழுத்து மெய்யெழுத்தும்
அவள் வரிகளில் சரசமாடும்
உயிர்மெய் எழுத்து அவள்
வசத்தில் வளைந்து கொடுக்கும்.

அவள் கவிதைகளில்
கருக்கலைப்பு இல்லை
முழுமையான சுகப்பிரசவத்தில்
பரிணமிக்கும் கவிதைக் குழந்தைகள்.

தமிழ் அவள் உயிர் மூச்சு .
அவள் பேசுகையில்
தமிழ் கொஞ்சிக் குலாவி
தேன் சொட்டும்.

வரிக்கு வரி அழகு சேர்த்து
கோர்வையாக்கிச் சொல்லாட்சி செய்யும்
வார்த்தைகளில் அவள் வசீகரிப்பில்
சொக்கி போகும் மனம் .

தமிழை அவள் சுவாசிப்பாள்
தமிழுக்காய் அவள் தர்க்கிப்பாள்
விரலிடுக்கில் சொடுக்குப் போட்டு
சொற்சமர் புரியும் வித்தகி அவள்.

பேச்சுக்குப் பேச்சு தமிழ் தான்
பலர் எழுத்துக்களை லாவகமாய்
சிலாகித்து நளினமாய் கருத்தோடு
ஒட்டியும் வெட்டியும் வாதிடுவாள்.

கம்பன் முதல் கார்க்கி வரை
சுசிலா முதல் சைந்தவி வரை
நாகரிகமாய் விமர்சிக்கும் அழகு
அவளுக்கு இல்லை யாரும் நிகர்

தமிழில் அத்தனை காதல் அவளுக்கு
பூக்களும் பூச்சிகளும் அவளுக்காய்
தினம் தரிசனம் கொடுத்து
அவள் விடியலை அழகாக்கும்.

கவி புனைய அவள் அவசரப்படாள்
நின்று நிதானித்துக் கோர்வையாய்
கருத்தாழமும் பொருட்செறிவும் நிறைய
வரிக்கு வரி மெரு கூட்டுவாள்.

தமிழை அவள் அவ்வளவு ரசிப்பாள்
உணவாய் அதைப் புசிப்பாள்
தமிழை அவள் அழகாக்குவாள்
காரணம் அவள் தமிழ் காதலி.

**என்.எம்.ஆரிபா (பர்ஹத் றியா)**
ஏறாவூர், இலங்கை

பார்த்து வியக்கும் அடுக்ககக் குருவியின் அவலம். காற்றில் மனித வாசனை கதிகலங்கும் மரக்கிளைகள்.

புளியம்முத்துக்களை முதிர் மரமாய் காணும் கருணைக் குழந்தைகள்.

மரமாகும் ஆசையுடன் குறுகித் தவிக்கும் போன்சாய்கள்.

பூ விழி துடைத்து பூத்து மகிழும் புது மலர் மழலை உள்ளம்.

கோடரியைக் கோபிக்கும் அறச்சீற்ற அரும்பறவை.

விழுதுகள் நிலத்தில் ஊன்ற கனவு களுடன் காத்து நிற்கும் வேர்கள்.

மரத்தையும் மண்ணையும் மலரை யும் பேசும் கவிச்சித்திரங்கள் அவற்றை மட்டும் பேசவில்லை என்பதை நாம் அறிவோம். அவற்றுடன் ஊடாடி மனித மனங்களின் அவலங்களையும், அலைக்கழிப்புகளையும் அலசி, மழலை களிடமும், சிற்றுயிர்களிடமும் உள்ள அறமும், அன்பும் மனிதனிடம் முகவரி யற்றுப் போன முகாந்திரம் என்னவென்று வினாக்களை வீசிச் செல்கின்றன.

அருந்தமிழறிஞர். கவிஞர். ஆரூர் தமிழ்நாடன் அவர்களின் அழகிய அர்த்தம் பொதிந்த காலத்தின் மகுடம் காத்திருக்கிறது என்ற நேர்மறை வாழ்த்துடன் அமைந்துள்ள அணிந்துரை, வெளிச்சத்தோடு வெண்ணி லவை வாழ்த்த அழைத்து வந்துள்ள இயக்குனர்.திரு.இராசிஅழகப்பன்அவர்களின் வாழ்த்துரை, பக்கம் தோறும் பறவைகளைக் கொண்டு அழகியல், சூழலியல், மானிட மன நிகழ்வுகள், காதல் என கவிதைகள் புனைந்தது கண்டு சிறகோபதேசம் என சிலாகிக்கும் சீரிய பத்திரிகையாளரான திரு.மானா பாஸ்கரன் அவர்களின் வாழ்த்துரை அனைத்தும் இந்நூலுக்கு பெருமை. சேர்க்குமாறு விளங்குகின்றன. மூன்று அறிஞர்களும் ஆழ்ந்து படித்து இரசித்து உணர்ந்து இந்நூலிலிருந்து கவிதைகளை மேற்கோள் காட்டி வாழ்த்தியுள்ளது நூலின் பால் அவர்களுக்குள்ள ஈர்ப்பினை காட்டுகிறது, இதனை நூலாசிரியருக்கு மகுடத்தில் மற்றுமொரு சிறகெனக் கொள்ளலாம்.

இரணங்கள், வலி இவை கொடுத்த வலிமை, வழிமுறைகள், வலியின் வரமாய் பிறந்த வாய்ப்புகள் என மனச்சுவடுகளை மாறிமாறிப் பேசி வந்தாலும், காதலும், கருணையும் அழகியலும் என்ற கலவை தான் வாழ்க்கை, அவற்றை கையாளும் திறனில் தான் வாழ்வின் மகிழ்வு அமைந்துள்ளது என்பதைக் கூறும் முகமாக பல்வேறு கவிதைகள் கொண்ட அழகிய நூலினை வாசித்த அனுபவம் அகத்தினை விட்டு அகல்வது அரிது.

முத்தாய்ப்பாக...
அடர் இருளில்
என்ன தான் பேசுகின்றன?
மொட்டவிழ்ந்த
வெளிச்சப் பூக்கள் !!

என்ற அழகியலோடு கூடிய கவிதை வரிகளோடு விடைபெற்றால் நாளை யென்ற அடுத்த நகர்வுக்கு மகரந்த மணம் ஒரு வழித் துணையாகும் என்று நம்பிக்கையுடன், நற்கவிகள் மென்மேலும் தர உளமார வாழ்த்தி மகிழ்கின்றேன்.

மதிப்புரை

ராஜி வாஞ்சி
ஹூஸ்டன், டெக்சாஸ்.
அமெரிக்கா.



# ITSF SRILANKA

91/ G/ 1 First Floor, Matale Road,
Akurana

ITSF SRI LANKA

தகவல் தொழில்நுட்பத்துறையில் முன்னோடி நிறுவனமான ITSF Srilanka அக்குரணை கிளையில் கீழ் வரும் பாடநெறிகள் ஆரம்பமாகவுள்ளது.

பாடநெறி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படுவதோடு IT துறையில் தொழில்வாய்ப்புக்களை வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகும்.



- Certificate in Computer Application
- Microsoft Office
- Graphic Designing
- Web Designing
- Visual Basic
- Computer Business Studies
- Computer Hardware Engineering
- Computer For Kids
- Civil Engineering
- Sinhala, Tamil and English Type Settings



ITSF SRILANKA | ITSF SRILANKA
081 7569533 / 071 7259259 | itsfsrilanka@gmail.com

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com ஆகஸ்ட் 2022



## பாவலரே வாரீர்

தடையற்ற காட்டாறாய் நம்கவிதை செல்லும்
தங்குதடை யில்லாமல் இவ்வுலகை வெல்லும்
விடைதேடும் கேள்விகளின் விடையாக மாறி
வெற்றியொன்றே இலக்காகிப் பூமியிலே பூக்கும்
மடைதிறந்த வெள்ளம்போல் மனவயலில் பாய்ந்து
மணம்வீசி மனிதகுலம் மனங்குளிரச் செய்யும்
படைகொண்டு நாம்செல்வோம் பாக்களெலாம் கோத்துப்
படைத்திடுவோம் காவியங்கள் பாவலரே வாரீர்

**இராம.வேல்முருகன் வலங்கைமான்**